# தமிழரசு

16-12-1978 50 காசு.




சென்னை, அண்ணா மேம்பாலம்
அரசு சிமெண்ட்
உபயோகித்துக் கட்டப்பட்டது!
WESMAN
● கண்கவர் வண்ணம்
● துல்லியமான பூச்சு
● அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
● காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது. ● அதிக உழைப்பு உறுதி ● கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.
IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.
TANCEM
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்
ஆலங்குளம் தொழிற்சாலை, இராமநாதபுரம் மாவட்டம்
மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:
TIDCO
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.



# தாயகம் திரும்பினார் தமிழக முதல்வர்

**டி**சம்பர் திங்கள் 9-ஆம் நாள்!

சென்னை விமான நிலையம் மக்கட் கடலில் மூழ்கிக் கிடந்தது!

நாற்பது நாட்கள் மேலை நாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களை வரவேற்க மக்கள் கூட்டம் விமான நிலையத்தின் உள்ளும் புறமும் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

வழிநெடுக சாலையின் இரு புறங்களிலும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம், விழிகளில் அன்பைத், தேக்கி முதல்வர் அவர்களை வாழ்த்தி வரவேற்கக் காத்திருந்தது!

சிங்கப்பூரிலிருந்து சரியாக 12.45 மணிக்கு விமானம் வந்து சேர்ந்தது. முதலில் விமானத்திலிருந்து இறங்கிய முதல்வர் அவர்கள், அலைமோதிய அன்பு உள்ளங்களைப் பார்த்துக் கையசைத்தபடியே வெளியே வந்தார். அப்போது 'எம். ஜி. ஆர். வாழ்க!' என்ற வாழ்த்தொலி விண்ணைப் பிளந்தது.

முதலில் முதல்வர் அவர்களை மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்களும், மாலை அணிவித்து வரவேற்றார்கள் தொடர்ந்து அமைச்சர்கள், சட்டப்பேரவைத் தலைவர், துணைத் தலைவர், பேரவைச் செயலாளர்கள் ஆகியோரும் மாலை அணிவித்து வரவேற்றனர்.

பிறகு முதல்வர் அவர்கள், விமான நிலையத்தில் அமைத்திருந்த மேடைக்கு வந்தார். சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள் மாலை யணிவித்து வரவேற்றனர். ஏராளமான பெண்களும் மேடைக்கு வந்து மாலை அணிவித்து வாழ்த்தினர். அப்போது முதல்வர் அவர்கள் பல குழந்தைகளுக்கு பெயர் சூட்டினார்.

மாலைகள் மலைபோல் குவிந்தன. எங்கு நோக்கிடினும் மகிழ்ச்சி ஆரவாரம்; வாழ்த்தொலிகள்.

வரவேற்பையும், வாழ்த்துக்களையும் நன்றிப் பெருக்குடன் ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''அய்ந்து வார காலமாக வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, அங்கு பல அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பையும், தமிழ்நாட்டுக்குத் தேவையான நல்ல பல திட்டங்களை அறியும் வாய்ப்பையும் பெற்றேன்.

''நான் வெளிநாட்டுக்குச் சென்றபோது, இதே இடத்தில் பேசினேன். அத்தனை மக்களும் அரசியல் கட்சிகளும் அரசோடு ஒத்துழைத்து உறுதுணையாக இருக்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன்.

**''அதன்படி அய்ந்து வார காலமாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள், கருத்துக்களை வெளியிடும் வாய்ப்பைப் பயன்படுத்தி, போராட்டம் எதுவும் நடத்தாமல்-மக்களைத் தொல்லைகளுக்கு ஆட்படுத்தாமல் இருந்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.**

தமிழரசு
மலர் : 9. இதழ் : 12
16—12—1978




வாழ்க அண்ணா புகழ்!

வளர்க புரட்சித் தலைவர் அரசு!!

மாண்புமிகு புரட்சித்தலைவரும் தமிழக முதல்வருமான எம்.ஜி.ஆர். அவர்கள் வெளிநாடு சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியதற்கு நெஞ்சம் நிறைந்த இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## விளம்பரத் துறையில் தலைசிறந்து விளங்குவது!
## அண்ணா பப்ளிசிட்டீஸ்! நிறுவனமே!!

'தமிழரசு' மற்றும் தினசரி செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் சிறந்த முறையில் விளம்பரங்கள் வெளியிட எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்
அண்ணா பப்ளிசிட்டீஸ்
இலுப்பூர்—622 102 : : புதுக்கோட்டை மாவட்டம்

[சென்னையில் கிளை அலுவலகம் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.]


''அறிஞர் அண்ணா கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கைகளைக் கைக் கொண்டு, எத்தனை எத்தனைச் சோதனைகள் வந்தாலும் பொறுமை காத்திட்ட அண்ணாவின் தம்பிகளுக்கும் நன்றி கூறுகிறேன்.

''ஆட்சிப் பணிகளைச் சிறப்பாகச் செய்த தலைமைச் செயலாளருக்கும், செயலாளர்களுக்கும் மற்றும் அரசு ஊழியர்களுக்கும், காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''

விமான நிலையத்தை விட்டு திறந்தவேனில் புறப்பட்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலையை நோக்கி வந்தார் முதல்வர் அவர்கள்.

அண்ணாசாலையில் மக்கள் வெள்ளம் அலைமோதியது. அந்த அன்பு வெள்ளத்திலே மிதந்து வந்த முதல்வர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தார். பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, அங்கே போடப்பட்டிருந்த மேடையில் நின்று தமது மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிட்டார்.

''ஏறத்தாழ அய்ந்து வார காலம் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த நான், இன்று உங்கள் ஆசியுடனும் உங்கள் அரவணைப்பினால் கிடைத்த உறுதியோடும் திரும்பிவந்து உங்கள் முன் நிற்கிறேன்.

''பல்வேறு நாடுகளில் அறிஞர்களையும், அதிகாரிகளையும், பொதுமக்களையும் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுத்த பிரதிநிதிகளையும் இந்தியாவிலுள்ள, குறிப்பாக சென்னையிலுள்ள தூதுவர்களையும், அவர்கள் எடுத்த அக்கறை, செயல்பட்ட விதம் குறித்தும் தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பல்வேறு நாடுகளுக்குச் சென்று அய்ந்து வார காலமாக நான்பெற்ற அனுபவத்தைத் தமிழகத்தின் எதிர்கால நலனுக்காக எந்தெந்த வகைகளில் பயன்படுத்த முடியுமோ அந்தந்த வகைகளில் பயன்படுத்திக் கொள்வேன்.

''அந்தப் பொறுப்பைத் தமிழக மக்களின் பிரதிநிதியாக உள்ள அனைந்திந்திய அண்ணா தி.மு. கழக அரசு ஏற்றிருக்கிறது.

''இந்த வகையில் அனைந்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் பிரதிநிதியாகவும், தமிழக அரசின் முதலமைச்சர் என்கிற பொறுப்பிலும், அண்ணாவின் தம்பி என்கிற நல்ல நம்பிக்கையோடும் தமிழக மக்களுக்கு நான் சொல்லும் செய்தி இதுதான், **தமிழகம் எதிர்காலத்தில் உழைத்து வருகின்ற மக்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.**

''தொழிலாளர்கள் - உழைக்கும் வர்க்கம் உயரவேண்டும். இந்த நாட்டில் உழைப்பவர் வசதிபெற வேண்டும். உரிமை பெறவேண்டும். அந்தநாள்தான் இந்த நாட்டின் உண்மையான சுதந்தர நாள் என்று பேரறிஞர் அண்ணா சொன்னதை இங்கு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''அதை வாயளவில் சொல்லாமல் செயலளவில் செய்து இந்த நாட்டையும், தமிழகத்தையும், உயர்த்த என்னென்ன திட்டங்கள் தேவைப்படுகிறதோ, அதற்கு வெளிநாடுகளிலிருந்து நான் பெற்ற அனுபவத்தை தக்க நேரத்தில் பயன்படுத்துவேன்

என்று அண்ணாவின் சிலை முன் நின்று உறுதி கூறுகிறேன்.

''18 மாதங்களுக்கு முன்பு பதவி ஏற்றபோது மக்களுக்கு அளித்த வாக்குறுதியில் நாங்கள் சொன்னதைச் செய்ய முடியாமல் போகும்போது, எங்கள் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு மக்களோடு மக்களாக வந்து நிற்போம் என்பதை இங்கே மீண்டும் உறுதிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இளைஞர்கள் எதிர்காலத்தில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பொறுப்புகளைப் பெற்றாக வேண்டும். அதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் மாபெரும் பொறுப்பு நமக்கு உண்டு.

''உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற தத்துவத்தைத் தமிழகத்தில் உருவாக்கிக் காட்டுவோம் / என்று உறுதி கூறுகிறேன்.

''நான் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தபோது போராட்டங்கள், கலவரங்கள் இல்லாமல் தமிழகத்தில் அமைதி நிலவ வழி வகுத்த அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் அனைத்துத்துறை அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''கடமையைச் செய்வதில் கண்ணியத்தோடும், பொறுப்போடும் கட்டுப்பாட்டோடும், பொறுப்புணர்வோடும் நடந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் உழைத்துத்தான் பிழைக்க வேண்டிய மக்களாக வேண்டும்.

''நான் சென்ற மேலைநாடுகளில் வேலைக்கு ஆள் இல்லை என்கிறார்கள். இங்கே ஆளுக்கு வேலை இல்லை. **இந்த நிலையை மாற்றிக் காட்டுவோம். அதற்காகப் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுவது எதிர்காலக்கடமை என்பதை உணர்ந்து செயல்படுவோம்.**

''அந்த வகையில் நாங்கள் செய்யும் முயற்சிகளுக்கு உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டும்.''

பிறகு, முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகம் வந்தார். அங்கு ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அவரை வரவேற்றார்கள். பிறகு தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் அவரை வரவேற்றார்.



அவ்வமயம் முதல்வர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''என்னுடைய பயணம் பயன் உள்ள பயணமாகும். தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சிக்காக, தொழில் வளர்வதன் விளைவாக பல்லாயிரக்கணக்கானவர்களுக்குத் தொழில் வாய்ப்புப் பெருக, என்னால் ஆன அனைத்தும் செய்யக் கூடிய வகையில் பல புதிய விவரங்களையும் தொடர்புகளையும் பெற நல்ல வாய்ப்புப் பெற்றேன்.

''அமெரிக்க அரசு நன்றி கூறிப் பாராட்டும் அளவுக்குத் தங்கள் அதிகாரிகள் மூலமாக, பல்வேறு தனியார் துறையைச் சேர்ந்த தொழில் அதிபர்கள் போன்றவர்களைச் சந்திக்கவும், மருத்துவத் துறை, கல்வித்துறை, காவல்துறை போன்றவைகளில் அவர்கள் செயலாற்றும்விதத்தை ஓர் அரசு எந்த அளவுக்கு வெளிப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு முழு வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள் எனக் கூறும்போது என் உள்ளத்தில் நன்றி உணர்ச்சி ஏற்படுகிறது என்பதை மனநிறைவோடு கூறிக் கொள்கிறேன்.

''நான் சென்ற நாடுகளில் எல்லாம், குறிப்பாக அமெரிக்க நாட்டில் எங்கெங்கு சென்றேனோ அங்குள்ள இந்தியப் பேரரசின் தூதரக அதிகாரிகளைக் கொண்டு எனக்கும், என்னோடு வந்த என்னுடைய அந்தரங்கச் செயலாளர் லட்சுமிநாராயணனுக்கும் முழு ஒத்துழைப்பையும் தந்ததோடு, அந்தந்த நாட்டு அரசு அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு நாங்கள் யாரைச் சந்திக்க விரும்புகிறோமோ அவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்புக்களை நிறைவேற்றித்தரவும், அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறையையும் பொறுப்புணர்ச்சியையும், செயலாற்றும் முறையையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

''என் பயணம், நான் மேலே சொன்ன பல பிரச்சினைகளைப் பற்றி இருந்தது என்றாலும் அத்தோடு கடல் அரிப்பினால் ஏற்படுகிற அபாயத்தைத் தடுத்து நிறுத்தவும், அண்மைக் காலங்களில் கடல் கொண்ட இடங்களைத் திருத்தி அமைத்து நிலமாக்கவும் வேண்டிய தகவல்களையும் பெற்றதோடு மட்டும் அன்றி, சிங்கப்பூர் நாட்டில் அந்த ஆட்சியினர் இது விஷயத்தில் எடுத்துக்கொண்ட நடைமுறைச் செயல்களின் விளைவாக என்ன பலன் ஏற்பட்டுள்ளது என்பதை நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும் என்னால் முடிந்தது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.''

தாயகம் திரும்பிய தமிழக முதல்வரைக் காண்பதற்கு, தமிழகத்து மக்களே, சென்னை நகரில் திரண்டிருந்தனர் என்றால் மிகையாகாது.



# வெள்ளப் பகுதியில் விரைவான நடவடிக்கை!

**ந**வம்பர் திங்கள்!

ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கால கட்டத்தில் தமிழகம் இயற்கையின் சீற்றத்தை எதிர்நோக்கின்ற துர்ப்பாக்கிய நிலை! இவ்வாண்டும் வங்கக் கடலில் உருவான புயல் சின்னம், வழக்கம்போல் தமிழகத்தை ஒரு 'கை' பார்த்து விட்டுச் சென்றது!

இதன் விளைவாகக் கடும் மழை பெய்து, காவிரி டெல்டாப் பகுதியில் உள்ள எல்லா ஆறுகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு. ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கின.

தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கன்னியாகுமரி மாவட்டங்களில் வடகிழக்குப் பருவமழை கடுமையாகப் பெய்தது.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த பெருமழை காரணமாகச் சில பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டு நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு உடனடியாக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1,000 வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதேபோல் தஞ்சை மாவட்டத்திலும் இறந்த 6 குடும்பங்களுக்குத் தலா ரூ. 1,000 வழங்கப்பட்டது.

நிலச்சரிவு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிட அரசு தீவிரம் காட்டியது. உடனடியாக, விரைந்து பல நடவடிக்கைகளை எடுத்தது.

நிவாரணப் பணிகளைக் கவனிக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும் ஊட்டிக்கு விரைந்து சென்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டு மைல் தூரம் நடந்து சென்று ஆறுதல் கூறினர்.

பாதிக்கப்பட்ட பாதைகளைச் செப்பனிட 'புல்டோசர்' கொண்டு வரப்பட்டன. நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்கியும், உணவு, தங்கும் வசதி செய்து கொடுத்தும் அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்தது.

மீட்புப் பணிகளிலும், சாலைகளைச் சீரமைக்கும் பணிகளிலும் வெலிங்டனிலுள்ள இராணுவத்தினரும் (மதராஸ் ரெஜிமெண்ட்) ஈடுபட்டனர். ஊட்டியில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரம் பேர்களுக்கு வேட்டி, சேலை, போர்வைகளை நிதியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வெள்ளத்தாலும், நிலச்சரிவாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணியைத் தீவிரப்படுத்த உயர்மட்டக் குழு, மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தலைமையில் கூடி ஆலோசனை நடத்தியது. இதில் அமைச்சர்கள் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், திரு சி. பொன்னையன் அவர்கள் திரு க. இராசாமுகமது அவர்கள் மற்றும் அதிகாரிகள் உயர் காவல் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியைத் தீவிரப்படுத்துவது குறித்து இக் குழு ஆலோசித்தது.

வெள்ளத்தாலும், நிலச்சரிவினாலும், பாதிக்கப்பட்ட மக்







களுக்குப் போர்க்கால வேகத்தில் அரசு, நிவாரணப் பணிகளைச் செய்தது.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இயற்கையின் சீற்றம் குறித்து மேலை நாடு சென்றுள்ள மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களை அறிந்து முதல்வர் அவர்கள் மனவேதனை அடைந்தார். மக்களின் துயர் துடைக்கத் தீவிரமாகப் பணிகளை நடத்துமாறு நிதியமைச்சர் அவர்களை முதல்வர் கேட்டுக் கொண்டார்.

''நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கிப் பலர் உயிரிழந்த செய்தி கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்கட்கு எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிவாரணப் பணியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் மற்றவர்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். உயிரிழந்த குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரண நிதி கிடைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்'' என்று முதல்வர் அவர்கள் வாஷிங்டனிலிருந்து தந்தி அனுப்பியுள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 1,800 பேர்கள் 11 முகாம்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. உணவும், ரொக்கப் பணமும் கொடுக்கப்பட்டது. இறந்தவர்களின் குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாய் உதவிப் பணமும் அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி, சேலை ஆகியவையும் தாராளமாக வழங்கப்பட்டன.

புயலிலிருந்து காப்பாற்றிக் கொள்ளப் பாதுகாப்பு மண்டபம், முதல் முதலாக நாகப்பட்டினத்தை அடுத்த அக்கரைப்பட்டியில், இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. அங்கே 500 பேர் தங்கக் கூடிய வசதிகள் உள்ளன. இது போன்று மேலும் 6 மண்டபங்கள் விரைவில் முடிவடையவிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்வையிட அனைத்து இடங்களுக்கும் நள்ளிரவிலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, இருப்பிடம் ஆகிய வசதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

தஞ்சை மாவட்டத்தில் மீண்டும் உடனடியாகச் சாகுபடி செய்வதற்குத்தேவையான விதை நெல், இரசாயன உரம், பூச்சி பூஞ்சாண மருந்துகள் ஆகியவற்றை வழங்கிட அரசு தயாராக உள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் தெரிவித்தார். வெள்ளச் சேதம் பற்றி ஆலோசிக்க உயர் மட்டக் குழு மீண்டும் மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் கூடியது.

அமைச்சர்கள் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள், திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், திரு கா. காளிமுத்து அவர்கள், திரு சி. பொன்னையன் அவர்கள், திரு க. இராஜா முகமது அவர்கள் திரு பா. குழந்தைவேலு அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள், வருவாய்த்துறைச் செயலாளர், நிவாரணப்பணி அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவின்படி மத்திய அரசுக்கு, நிபுணர் குழுவை அனுப்பும்படி கடிதம் ஒன்றை நிதியமைச்சர் அவர்கள் எழுதினார். அந்தக் கடிதத்தைத் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு க. ராசாராம் அவர்கள் புதுடெல்லிக்கு எடுத்துச் சென்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி அளிக்க மத்தியக் குழு ஒன்றை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். திரு ராசாராம் அவர்களின் கோரிக்கையைப் பிரதமர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளைத் தமிழக அரசு அறிவித்தது.

புயல் விளைவாக மண்டபம், பாம்பன் ஆகிய பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதன் காரணமாக மண்டபத்தில் அமர்த்தப்பட்டிருந்த இலங்கை அகதி வாழ் மக்களுக்கு அடைக்கலம் அளிக்கும் பொருட்டு, அவர்கள் மண்டபம் முகாமிலிருந்து அழைத்து வரப்பட்டு இராமநாதபுரத்திலுள்ள மன்னர் கலைக் கல்லூரியில் தங்குவதற்கு இட வசதி அளித்து. பாதுகாப்பாக வைக்கப்பட்டனர். அவர்களுக்கு வேண்டிய உணவு, உறைவிடம் இதர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து வந்து, இராமநாதபுரத்தில் 2000 பேர்களுக்கு ரொட்டியும், உணவுப் பொட்டலங்களும் வழங்கினார். மேலும் புயலால் பாதிக்கப்பட்ட மண்டபம், வேதாளை, வடகடல், பாம்பன்பாலம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டு உடைமைகளையும், வீடுகளையும், சொத்துக்களையும் இழந்த மக்களைப் பார்த்து அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

இராமநாதபுர மாவட்ட சமூக நல வாரிய உறுப்பினர் திருமதி லீலாவதி தர்மர் அவர்களால் இந்தியக் குழந்தைகள் நல சங்கம் சார்பாக ரூபாய் 1000-க்கு காசோலையும் உணவு வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்டது.

இங்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் ஆறுதல் கூறினார்.

முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி இராமேஸ்வரம் பகுதிக்கு ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களும், இலங்கைக்கு ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களும் அனுப்பப்பட்டுள்ளன.

வெள்ள நிவாரண நிதிக்கு பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

வெள்ளம்-நிலச்சரிவு இதனால் ஏற்பட்ட இழப்புகள் ஏராளம் என்றாலும் தமிழக அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாகப் பெருத்த சேதம் தவிர்க்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் நிவாரணப் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன.

துன்பம் சூழ்ந்த நேரத்திலும் தளராமல் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழக அரசை வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய நிபுணர் குழு வெகுவாகப் பாராட்டியது.



# படமும் செய்தியும்

ஸ்ரீலங்காவின் மேதகு குடியரசுத் தலைவர் திரு டபிள்யூ ஆர். ஜெயவர்த்தனே அவர்களையும், திருமதி ஜெயவர்த்தனே அவர்களையும் சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும் 7-11-1978 அன்று வரவேற்றார்கள்.

---

ஸ்ரீலங்காவில் அண்மையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு அளித்துள்ள ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை சென்னைத் துறைமுகத்தில் 1.12.'78 அன்று கப்பலில் ஏற்றும் நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும், ஸ்ரீலங்கா ஹைகமிஷனர் திரு எஸ்.கவுதம் தசா அவர்களும் கலந்து கொண்டனர்.





ஜாம்பியா பிரதமர் திரு டேனியல் லிஸுலே அவர்கள் டிசம்பர் 4-ந் தேதி சென்னை வந்தார். அவரை விமான நிலையத்தில் மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களும், உணவு அமைச்சர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களும் சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்களும் கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் வரவேற்றனர்.




மத்திய அரசின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறையின் ராஜாங்க அமைச்சர் திரு ஜகதாம்பி பிரசாத் யாதவ் அவர்களும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராஜன் அவர்களும் கலந்துகொண்ட பாராளுமன்ற கருத்துரைக் குழுக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் 7-11-1978 அன்று நடைபெற்றது.

ஊட்டியில் நிலச்சரிவால் சேதமேற்பட்ட இடங்களை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்களும் 7.11.'78 அன்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்குச் சேலை, வேட்டி மற்றும் நிதி உதவிகள் வழங்கினர்.







புதுக்கோட்டையிலிருந்து 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மீமிசல் கடலோரக் கிராமத்தில் தமிழ்நாடு அரசும் செஞ்சிலுவைச் சங்கமும் கூட்டாகக் கட்டியுள்ள புயல் பாதுகாப்புப் புகலிடத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 30.11.'78 அன்று திறந்து வைத்தார்கள். (புயல் பாதுகாப்புப் புகலிடம் முதன்முதலில் நாகப்பட்டினம் அருகில் அக்கரைப் பேட்டையில் கட்டப்பட்டு முன்பே திறக்கப்பட்டுவிட்டது).

போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யும் பண்டே குழு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களை 27-10-1978 அன்று சென்னையில் சந்தித்தது.





# இது தான் கல்வியின் நோக்கம் எனும் இலக்கு உருவாக வேண்டும்!

**மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய**
**பட்டமளிப்பு விழாச் சிறப்புரை**

மதிப்பிற்குரிய கல்லூரி முதல்வர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! கல்வித் தகுதி என்னும் கலைநலம் பொலிய இங்கே நிறைந்திருக்கும் பட்டதாரிச் செல்வியரே! மாணவ மணிகளே!

இரண்டாம் ஆண்டாக உங்கள் கல்லூரியில் நிகழும் பட்டமளிப்பு விழாவில் பங்குகொண்டு, பட்டதாரிகளாகிய உங்களை வரவேற்று வாழ்த்தி உரையாற்றும் இந்த நல்வாய்ப்பினை எனக்கு அன்போடு நல்கிய ஆசிரியப் பெருமக்களுக்கும், கல்லூரி முதல்வருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

35 ஆண்டுகளுக்கு முன்பாக, என்னுடைய கலை ஆர்வ மிகுதியால் கல்லூரிக் கல்வி பயிலும் வாய்ப்பை நான் இழந்தவன் என்றாலும் கூட, எனக்கு இந்தப் பெருமையை நீங்கள் பரிவோடு வழங்கியிருக்கிறீர்கள். பொது வாழ்க்கை என்னும் பல்கலைக் கழகத்தில், பகுத்தறிவு இயக்கம் என்னும் கல்லூரியில், பொது அறிவுப் பாடங்களைப் பெரியாராகிய முதல்வரிடத்திலும், பேராசிரியர் அண்ணாவிடத்திலும் பயின்ற பலருள் ஒரு மாணவன் என்ற தகுதியைக் கருதியே நீங்கள் என்னை இங்கே அழைத்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். என்றும் மறக்க முடியாத, எப்போதும் இனிமையும் மகிழ்ச்சியும் நிறைந்தனவாகச் சில நிகழ்ச்சிகளே வாழ்க்கையில் நிகழும் — அத்தகைய ஒரு இனிமையான நிகழ்ச்சி இது. கல்விப் பொலிவும், கற்று முடித்த தெளிவும் பெற்று, அறிவு மிளிர, இந்தக் கல்லூரி மண்டபத்திலிருந்து சமுதாயச் சாலைகளில் பயணம் தொடங்கி, அணிவகுத்துச் செல்லும் அறிவுப் படைதான் —இந்த அரிவையர் படை என்று எண்ணும்போது பெருமகிழ்வடைகிறேன். தமிழகத்தின் ஓர் அமைச்சர் என்ற முறையிலும், உங்களை ஒத்த மகளிரின் ஒரு தந்தை என்ற நிலையிலும் உங்களை வாழ்த்துவதையும் வரவேற்பதையும் எனது கடமையாகக் கருதுகிறேன்.

*"அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்*
*என்னும் படி அமைந்தீர் இப்படியே பெண்ணுலகம்*
*ஆகும்நாள் எந்நாளோ! அந்நாளே துன்பமெல்லாம்*
*போகும்நாள்! இன்பப் புதியநாள்! என்றுரைப்பேன்*
*அன்னைஎனும் தத்துவத்தை அம்புவிக்குக்காட்டவந்த*
*மின்னே! விளக்கே! விரிநிலவே! வாழ்த்துகின்றேன்"*

என்று பாவேந்தர் பாரதிதாசன், பாவையரை வாழ்த்தும் பாட்டு வரிகளையே உங்களுக்கும் என் வாழ்த்தாக்கி விழாவுரையைத் தொடங்குகிறேன்.

கலைவளமும் கல்வி நலமும் பொருந்திய தமிழ் நாட்டு தலைநகராகிய, சென்னை திருநகரில் பேரறிஞர் அண்ணாவின் திருப்பெயரோடு திகழ்கிற நெடுஞ்சாலையில், மதத்தால் இஸ்லாமியராக, மொழியால் தமிழராக, செயலால் பண்பாளராக, ஆற்றலால் அரும்பெரும் தலைவராக, அமைதியால், அன்பால் கண்ணியத்தின் நாயகராக விளங்கிய தலைவர் காயிதே மில்லத் அவர்களின் பெயரில், புகழோங்கி நிற்கும் இந்த மகளிர் கல்லூரி, இரண்டாவது ஆண்டாகப் பட்டம் பெற்ற மாணவியரை மக்கட் பணிக்கு இன்று வழங்குகிறது. மகளிர் கல்லூரி என்ற பெயரில் நான்கு ஆண்டு இளமையோடு இது திகழ்ந்தாலும், அரசினர் ஆடவர் க்ல்லூரியாகப் பல்லாண்டு காலம் விளங்கிய பழமையும், பெருமையும் இக்கல்லூரிக்கு இயல்பாகவே உண்டு. அந்தத் தொன்மையின் வலிவும் மரபும் உங்கள் கல்லூரிக்கு உரமாக அமைந்து முதுமையின் அறிவையும், இளமையின் வலிவையும் உங்களுக்குத் தந்திருக்கின்றன. அறிவு வளத்திலும், கல்வி நலத்திலும், சிந்தனைச் சிறப்பிலும், வீரப் பெருக்கிலும், கற்பின் பொற்பிலும் தமிழக மகளிர் ஏற்றம் பெற்றது இன்று நேற்றல்ல ; அரச மகளாகிய ஆதிமந்தியாரும், அறிவுத் திலகமாகிய அவ்வையாரும், வீரம் பாடிய மாசாத்தியாரும், வெற்றியைப் பாடிய காக்கைபாடினியாரும் சங்க காலத்தில் வாழ்ந்த நற்றமிழ்ப் புலவர்கள். அறிவின் பிழம்பான காரைக்கால் அம்மையாரும், தியாகத் திலகமாகிய திலகவதியாரும், பூக்களைச் சூடிக் கொடுத்தும், பாக்களைப் பாடிக் கொடுத்தும் பார்புகழ் கொண்ட ஆண்டாளும் இடைக்காலத்தில் வாழ்ந்த மாதர் மணிகளாவர். குடும்பத் தலைவியராகவும், கொள்கைத் தலைவியராகவும் விளங்கிய கஸ்தூரிபா அம்மையார், அன்னை நாகம்மையாரைத் தொடர்ந்தீ இன்றைய நாளிலும் அறிவரசியரின் படைவரிசை அறிவியல், வணிகம், கலை, இலக்கியம் முதலிய புதுப்புதுத் துறைகளில் பட்டம் பெற்ற இளவரசியராக — வாழையடி வாழையாக வளர்ந்திருப்பதை உங்கள் வழியாகத் தமிழ் உலகம் கண்டு களிக்கிறது.

வாழ்க்கை என்பதே எண்ணத்தால் அமைவது; எண்ணம் என்பது மனத்தில் எழுவது. எந்த வாழ்க்கைக்கும் எண்ணம்தான் மூலம் ; எண்ணுகிற மனம்தான் கருவூலம். எண்ணங்களின் பெருக்கமே வாழ்வின் வளர்ச்சியாக வடிவம் பெறுகிறது. எனவேதான், 'மனம் போல வாழ்வு' என்று நம் நாட்டுப் பழமொழி கூறுகிறது. மனமானது பண்படவும், பயிற்சி பெறவும், மனத்தின் முயற்சிகள் சிறப்படையவும், சீரிய சிந்தனைச் செல்வம் செழித்தோங்கவும் உள்ளம் பற்றிப் படர்வதற்கான பற்றுக்கோடாக அமைவதையே 'கல்வி' என்று உலகம் நெடுங்காலமாக அழைத்து வருகின்றது. 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்று தமிழ் மூதாட்டியான அவ்வையார் அன்றே இதனைப் பாடியுள்ளார், உலகக் கல்வியாளர்கள், கல்வியின் அடிப்படையை, கல்வியின் நோக்கத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆராய்ந்து — உள்ளத்தை மேம்படுத்தும் ஒப்பற்ற சாதனமாக கல்வியை அமைப்பதுதான் பொருத்தம் என்று முடிவு கட்டியிருக்கிறார்கள்.

எனவே, கல்வி என்பது கல்லூரியோடு முடிந்துவிடுவதல்ல ; வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து நிகழும் அறிவுப் பயணமாக அமைவதற்கு இது ஆரம்பம். பட்டம் பெறுவது என்பது நெடிய வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மைல் கல்தான் — அதுவே பயணத்தின் இறுதி இலக்கு அல்ல என்று இந்த நாட்டின் மாபெரும் சிந்தனையாளரும் தத்துவ ஞானியுமான டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். ("Graduation is only a mile stone in the journey of life and not the end of it") இங்கே—கல்விச் சாலைகளில் நீங்கள் பெறும் அறிவு, சமுதாய வீதிகளில் நீங்கள் செயற்படும்போதுதான் உரமும் ஊட்டமும் பெறுகின்றது. கல்லூரிகளில் கற்றுக் கொடுப்பதைக் கல்வி' என்பதைவிட, கல்விக்குரிய கருவிதான் அங்கே வழங்கப்படுகிறது என்பதுதான் பொருத்தம் என்று அறிஞர் எமர்சன் ஒருமுறை குறிப்பிட்டார். எனவே, கல்வி என்பது அழகுக்கான ஓர் அணிகலன் அல்ல ; மனிதர்களின் அவசியத் தேவையாகவே, மக்களாட்சி மலர்ந்துள்ள இக்காலத்தில் கல்வி போற்றப்படுகிறது. அறிவுச் செல்வத்தை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், அரசாங்கம் கோடிக்கணக்காகச் செலவழிக்கிறது. முன்பெல்லாம் வசதி பெற்றவர்களும், வாழ்க்கையில் வாய்ப்புடையவர்களும்தான் கல்லூரிக் கல்வியைஎட்டிப்பார்க்க முடிந்தது. அப்படிப்பட்ட வாய்ப்பைப் பெற்றவர்கள், புதிய அந்தஸ்தை அடைந்தவர்களாக, சமுதாயத்திலே உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். இப்போது அந்த நிலைமை இல்லை. என்றாலும், கல்வி பயிலும் வாய்ப்பு அனைவருக்கும் இன்று வாய்த்திருக்கிறது என்று நாம் மகிழ்ச்சியடையும்போது, ஏறத்தாழ வாழ்வில் 16 ஆண்டுகள், செலவு செய்து நாம் பெறுகிற கல்விப்

பயிற்சியும், பயிற்சியினால் விளையும் அறிவும் வாழ்வுக்குத் தேவையான ஆற்றலைப் பெறுவதற்கான அடிப்படையை நமக்கு அளித்திருக்கிறதா? என்ற கேள்வியை எழுப்பி அதற்கு விடை காணுமாறு உங்களை வேண்டுகிறேன்.

இன்று நீங்கள் பெற்ற பட்டங்கள், அந்தப் பட்டங்கள் கற்றுத் தந்த பாடங்கள், அந்தப் பாடங்களுக்கு அடிப்படையான கல்வித் திட்டங்கள், நமக்கு எந்த இலட்சியத்தைச் சுட்டிக் காட்டுகின்றன என்று நீங்கள் எப்பொழுதும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனக்கு இதில் அய்யமுண்டு. ஏனெனில் 'கல்வியின் நோக்கம் இதுதான்' என்ற தெளிவான வரையறை இன்று வரை மாணவர் உலகத்துக்குத் தரப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். சாதாரணமாக நாம் பயணம் மேற்கொள்ளும்போது, கோவை செல்கிறவர்கள் சென்னை மத்திய இரயில் நிலையத்தின் வழியாகச் செல்ல வேண்டும், மதுரை செல்கிறவர்கள் எழும்பூர் இரயில் வழியாகத்தான் பயணத்தைத் தொடங்க வேண்டும், இந்த ஊருக்குச் செல்கிறவர்கள் இந்தச் சந்திப்பில் மாறியாக வேண்டும் என்று, திட்டவட்டமாக வரையறுப்பதுபோல, நமது அறிவுப் பயணத்தில் தெளிவு அமைந்துள்ளதா என்பது இன்று வரை ஆராய்வதற்குரியதாகவே உள்ளது என்பதை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். சமுதாயமும், அரசும், கல்வித் துறை அறிஞர்களும் இதுபற்றி விரிவாகச் சிந்திக்க வேண்டும் என்பது என்னுடைய அவா.

மகளிர் கல்வி என்பது தமிழகத்துக்குப் புதியதல்ல. கல்விக்குரிய கடவுளையே 'கலைமகள்' என்று அன்னையாக்கித்தான் நாம் வழிபடுகிறோம். 'அறிவும் அருமையும் பெண்பாலரின் குணங்கள்' என்று தொல்காப்பியரும், 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று திருவள்ளுவரும், 'பெருந்தடங்கண் பிறைநுதலார்க்கு எல்லாம் பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தன' என்று கம்பரும், 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம், எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லைகாண்' என்று பாரதியாரும், ''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று கவிமணியும், ''அச்சமும் மடமையும் இல்லாத் பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள்'' என்று பாவேந்தர் பாரதிதாசனும், 'பொருந்து நற்கலை பூவை கற்பது திருந்தியே மிகும்' என்று வித்தகர் வேதநாயகரும், ஓர் ஆண் கல்வி கற்றால் அவன்மட்டும் தான் அறிவு பெறுவான்; ஆனால் ஒரு பெண் கற்றால் ஒரு குடும்பமே கல்வி அறிவு பெற்றதாகும் என்று பிறரும் இப்படி மகளிர் கல்வியின் மாட்சியை நமது பாவலர்களும் அறிஞர்களும் பலவாறாகப் பாராட்டியுள்ளனர். இவ்வளவு பாராட்டுக்குரிய கல்வியை, அதுவும் பட்டக் கல்வியைக் கற்கும் பெண்களில் பலர்—வசதியுடையவர்கள்—திருமண வாழ்வை எதிர்பார்த்துப் படிப்பு முடிந்ததும் இல்லத்திலேயே இருந்து விடுகிறார்கள். நடுத்தர, நலிந்த குடும்பத்துப் பெண்கள், சம்பாதிப்பதற்காக வேலைக்கு விண்ணப்பம் போடும் அனுமதிச் சீட்டாகத் தான் தங்கள் கல்விப் பட்டத்தைப் பயன்படுத்துகின்றனர். இவற்றைக் காணும்போது, பாடுபட்டு மகளிர் கற்ற கல்வியின் பயனைச் சமுதாயம் முழுவதுமாகப் பெறாமல் போய்விடுகிறதே என்ற ஏக்கம் எங்களைப் போன்றவர்கட்கு ஏற்படுகிறது. பட்டுச் சேலை உண்டு, பார்ப்போர் மயங்கும் அழகு உண்டு, பொன்னகை உண்டு, வீணை வாசிப்பாள், பாடலும் தெரியும், ஆடலிலும் கொஞ்சம் பழக்கம் உண்டு—என்பதோடு படிப்பிலும் பி.எஸ்சி. என்ற பட்டம் உண்டு என்று, தன் பிள்ளைக்குப் பெண் பார்க்க வரும் பெற்றோர்க்கு,



தன் அந்தஸ்தைக் காட்டும் அலங்கார அணி வகுப்பில், பாவையர் பெற்ற பட்டப்படிப்பும் ஓர் அலங்காரப் பொருளாக நமது சமுதாயத்தில் மதிக்கப்படுவதை எண்ணும்போது, இவ்வளவு திறமையும் விழலுக்கு இறைத்த நீராக வீண் போய்விடுமே என்ற அச்சமும் எனக்கு ஏற்படுகிறது. நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுடைய வாழ்வுக்கும், நீங்கள் வாழும் சமுதாயத்துக்கும் முழுவதுமாகப் பயன்பட வேண்டும். அண்மையில்தான் என் நண்பர் சொன்னார்; திருமணமான பெண் மாமியாருடன் எப்படிப் பழக வேண்டும், விருந்தினரை எப்படி வரவேற்க வேண்டும், குடும்ப வாழ்வை எப்படி நடத்த வேண்டும், குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும், சமுதாய நலத்துக்கு எந்த வகையில் உழைக்க வேண்டும் என்பவைகளைப் பற்றியெல்லாம் ஜப்பான் முதலிய நாடுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனவாம். நமக்கோ—அன்றாட வாழ்வில் பயன்படுகிறதோ இல்லையோ, திட்டப்படி விலங்கியல், விஞ்ஞானம், வணிகம், இரசாயனம், பௌதிகம், கணக்கு எல்லாம் கற்பிக்கப்படுகிறதே, அதுபோல வாழ்க்கைக்குரிய மனப்பக்குவம், வாழ்வின் சூழல்களை உணர்ந்து கொண்டு உறவோடு பழகும் வாழ்க்கைக் கலை பற்றி ஏதேனும் பாடங்கள் உண்டா என்று ஒரு முதல்வரைக் கேட்டேன். நான் சொல்கிற பாடம் இது வரையில் இல்லாத பாடம் என்று அவர் விடையிறுத்தார். ஓர் அறிஞர் குறிப்பிட்டதுபோல, ''கடலாழத்தைப் பற்றியும், வான் மீன்களைப் பற்றியும், பொருள்களின் இயல்புகளைப் பற்றியும், கற்பதில் ஆர்வம் காட்டும் நமக்கு மனித மன நுட்பங்களைப் பற்றியும், பிறரோடு மாறுபடாமல் ஒத்துப்போகும் பரிவுணர்ச்சியை வாழ்க்கையில் நாம் பெறவும் கற்பிக்கப்படவில்லை'' என்று தான் கருத வேண்டியிருக்கிறது.

இந்தப் பட்டமளிப்பு விழாவிற்குக் கூட, உங்கள் முதல்வர் அவர்கள் என்னை அழைத்தபோது, மகளிர் மனப்பண்பையும், அவர்களின் திறமையையும் ஆற்றலையும் சுட்டிக் காட்டி, அவர்களைப் பாராட்டிப் போற்ற ஓர் அம்மையாரையே கூட அழைத்திருக்கலாம் என்று நான் நினைத்தேன். ஏனெனில் மகளிர் உள்ளக் கருத்துக்களை, வாழ்க்கை நிலைகளை, மகளிரே தமக்குள் கூடிப் பேசி பல அரிய சீர்திருத்தங்களை அவர்களுக்குள்ளேயே வகுத்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். மகளிர் உரிமைக்காகக் கூட, ஆதிக்கத்தால் அரிவையரை ஒரு காலத்தில் அடக்கி வைத்த ஆடவர்களே மீண்டும் மீண்டும் வந்து வாதாடுவதும் ஒரு வேடிக்கைதான். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று அவர்களை ஆடவர்களினம் தள்ளி வைத்திருந்த காலமும் உண்டு. இன்று ஆடவர்கள்தான் பெண்ணின் பெருமையையும் எடுத்துப் பேசுகிறார்கள். பெண்ணினத்தின் நலனை, உரிமையைப் பெறவும், அதற்குரிய கடமையையும், உங்களைப் போன்ற படித்துப் பட்டம் பெற்ற பாவையர்களே மேற்கொள்ள வேண்டுமே தவிர, இன்னும் அந்தப் பணியை ஆடவர் வசம் ஒப்புவிப்பது எலியின் சுதந்திரத்திற்குப் பூனை போராடுவதற்கு ஒப்பாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே ஆற்றல், சக்தி, திறன் என்பவைகள் பெண்களிடத்தில்தான் மிகுதியும் உண்டு. 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்கிறோமே, நல்லது ஆவதும் பெண்ணால்தான், தீயவை அழிவதும் பெண்ணால்தான் என்று கருதுவதே பொருத்தம். ''சக்தி இல்லை என்றால், சிவனே என்று கிட'' என்று கூட ஒரு பழமொழியுண்டு. எனவே பெண் இல்லை என்றால் ஆடவருக்குச் சக்தி இல்லை என்றுதானே பொருள்? இருபது வயதுப் பெண்ணுக்கு 25 வயது இளைஞனைத் திருமணம் முடிக்கிறோமே! அதிலிருந்தே 25 வயது மகனின், அறிவாற்றலுக்கு நிகர் 20 வயது பெண்ணின் அறிவு என்று தானே நமது முன்னோர்கள் நினைத்திருக்கிறார்கள். பெண் எங்கே ஆணை விட உயர்ந்துவிடப் போகிறாளோ என்ற அச்சத்தில்தான் நமது ஆண்டவனையே கூட 'மங்கை பங்கன்', 'மாதொரு பாதியன்' என்று அர்த்தநாரீசுவரர் வடிவத்தை ஏற்படுத்தி ஆணும் பெண்ணும் சமம் என்று சமாதானம் செய்ய முயன்றிருக்கிறார்கள். உலகில் தாய்க் குலம்தான் நாகரிகத்தின் தலைவாயிலுக்கு மனிதனை அழைத்துச் சென்றது. காடுமேடுகளில் ஓடிக் கண்ணில்படும் விலங்குகளை வேட்டையாடித் தின்ற மனிதனுக்கு முதலில் தீயைப் பாதுகாத்துத் தந்து, அதற்கென ஓர் இல்லத்தையும் தேவையென உணர்த்தி, பதமான உணவைச் சமைத்து வழங்கி மனிதனை நாகரிகப்படுத்தியதும் பெண்தான். சேமித்த உணவை அரைத்து மாவாக்கியதும் பெண்தான். அதை முதலில் ரொட்டியாக்கிச் சுட்டதும் பெண்தான். இவ்வாறு ஆக்கத் தொழிலுக்கு மனிதனை ஆளாக்கி நெறிப்படுத்தியவளே பெண்தான் என்று மானிடத் தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பெண்கள் பிறக்கும்போதே தியாக வடிவங்களாகப் பிறக்கின்றனர். தியாகத் திருவிளக்குகளாகவே வளர்

கின்றனர். பிறந்து மழலை மொழி பேசும் பருவம் தொடங்கி, சிறுமியாகி, பருவக் குமரியாகி, காதல் மனைவியாகி, அன்புத் தாயாகி, குடும்பத் தலைவியாகி, நரை முதிர்ந்த மூதாட்டியாகி, வாழும் ஒரு பெண்ணின் வாழ்வு, மாசற்ற, தனக்கென வாழாத, ஒரு தியாக வாழ்வாகத்தான் திகழ்கிறது. ஆண்டவன், தான் எங்கும் இருக்க முடியாது என்பதற்காகவே வீட்டுக்கு ஓர் அன்னையைப் படைத்தான் என்று டால்ஸ்டாய் கூறிய துண்டு.

ஒரு நாட்டின் சீர்திருத்தச் சிந்தனைகள் செயல் வடிவம் பெறுவதற்கு அந்நாட்டு மகளிரே பெருங்காரண மாவார்கள். சாதிச் சிக்கல்களாலும், மூட நம்பிக்கை முட்புதர்களாலும், பிற்போக்குக் கருத்துக்களாலும் பின்தங்கியிருக்கும் நமது சமுதாயத்தில், முற்போக்கு உணர்வுகளை முளைத்திடச் செய்யும் முயற்சியில் மகளிர் தான் முன்நிற்க வேண்டும்.

ஆடவர்கள் அவசரக்காரர்கள், ஆத்திரக்காரர்கள்; மகளிரோ நிதானமானவர்கள், உறுதியானவர்கள். சாதியை ஒழிப்பதாக ஆடவர்களால் நன்றாகப் பேச முடியும். ஆனால் மகளிரால் நயமாகச் செய்து காட்ட முடியும். கோமளா, கோகிலம், கமலா, விமலா, என்று தான் பெண்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. படிக்கும்போது வாலிபனாகிய முனிசாமியும், வேலை பார்க்கும்போது, நடுத்தர வயதான கந்தசாமியும் குடும்பத் தலைவரான பிறகு, முனிசாமி முதலியாராக வும், கந்தசாமி பிள்ளையாகவும் மாறிவிடுகின்றனர். ஆனால், செல்வி விமலா, திருமதியானதும் விமலா தானே தவிர, விமலா நாயுடுவாகவோ, விமலா பிள்ளை யாகவோ சாதாரணமாக மாறுவதில்லை. இவ்வாறு சாதியை ஒட்டவைத்துக் கொள்ளாத உயர்ந்த இனமாக நம்மிடையே பெண்ணினம் உள்ளது.

சாதி வேறுபாடுகள் சமுதாயத்தில் நீக்கப்பட்டே யாக வேண்டும். காதல் மணமும், கலப்பு மணமும் சாதி ஒழிப்புக்குப் பெரிதும் உதவும் சாதனங்களாகும். காதல் மணம் என்ற உயர்ந்த, உன்னதமான இலட்சி யத்தை அடைய முயலும்போது, சில நேரங்களில், சமுதாயச் சூழ்நிலைகளால், சில குறைகள்—குற்றங்க ளாக ஏற்பட்டு விடுவதையும் இளைய சமுதாயத்தின ரிடம் நாம் காண்கிறோம் என்றாலும், மாசற்ற மனங் களுக்கிடையே மலர்கின்ற அந்த மகத்தான காதல் கனிவைச் சமுதாயம் இரு கை நீட்டி வரவேற்று மகிழ்கிற



அளவிற்கு, கல்வி அறிவு பெற்றவர்கள், காதலில் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும், கடமை உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற காட்டுமுறைக்கு கற்றுத் தேர்ந்தவர்கள் இரையாகிவிடக் கூடாது.

காதல் மலர்ந்த நெஞ்சங்களில் வேறுபாடோ, வெறுப்போ அணுவளவும் விளைவதில்லை. இந்த வகை யில் சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு, முன்னணியில் வந்து நிற்க உங்களைப் போன்ற படித்த மகளிர் பேரார்வம் காட்ட வேண்டும். கல்வி மனங்கள், தம்முள் கலந்து வாழும் சீர்திருத்தக் காதல் வாழ்வு எல்லோரிடமும் துளிர்க்குமானால், குடும்பநலத்திட்டத்துக்கு அரசு வந்து முரசறைய வேண்டிய அவசியம் இல்லை. இயல் பான குடும்ப வெற்றியாக அத்திட்டம் ஏற்றம் பெறும்.

சமுதாய வாழ்வின் சந்திப்பில் வந்து நிற்கும் உங் களை வாழ்த்தும்போது, தந்தை பெரியார் உங்களுக்கு ஆற்றிய வீர உரையையும் நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். ''தற்போது பெண்களுக்குப் படிப்பும் வேலையும் இல்லாததால்தான் ஆண்களைச் சார்ந்து

வாழவேண்டுமென்கின்ற நிலை அவர்களிடம் இருக்கிறது. பெண்கள் ஆண்களைப் போன்று, துணிவாக நடந்து கொள்ள வேண்டும், பெண்கள் தனியாக வாழ முடியும்; எதையும் சாதிக்க முடியும் என்கிற நிலையில் வாழ வேண்டும். சுதந்திரமாக, கவலையற்று வாழ, தொல்லையற்று வாழ அறிவைக்கொண்டு சிந்தித்து அதன்படி பெண்கள் நடந்துகொள்ள வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

உடல், உள்ளம், உயிர் என்ற நிலையில் உடல் அளவில்தான், ஆடவர் மகளிர் என்ற வேறுபாடு உண்டே தவிர, உள்ளத்தில்—உயிரில் ஆண் பெண் என்ற வேறுபாடே இல்லை. இன்னும் சொன்னால் ஆடவர் உடலில் மகளிர் மனங்களும், மகளிர் மேனியில் ஆடவர் உள்ளமும் அமைந்திருப்பதையும் நாம் காண்கிறோம். இன்னும் ஆழ்ந்து ஆராயும் அறிவியல் அறிஞர்கள், அறிவை ஆணாகவும், உணர்வைப் பெண்ணாகவும் உருவகித்து, ஒரே மனத்தில் ஆண்மையும் பெண்மையும் மாறிமாறி இடம் பெறும் என்று கூடக் குறிப்பிடுகின்றனர். எனவே உடல் வன்மையையோ, மென்மையையோ காரணம் காட்டி ஆணுக்கும், பெண்ணுக்கும் உயர்வு தாழ்வு கற்பிப்பது பொருத்தமானதல்ல. 'வீரம், புலமை, ஆராய்ச்சியறிவு, துணிவு, இலட்சியநோக்கு ஆகியவை ஆண்களுக்கு மட்டுமே உரிமை ஆனவைகள் அல்ல. இயற்கையான உடற்கூறுகளின் அமைப்பினால், பெண் இனம் பலவீனமானது அல்ல என்று டாக்டர் அலெக்சிஸ் காரெல் (Dr. Alexis Carrel) 'புரிந்துகொள்ள முடியாத மனிதன்' (MAN THE UNKNOWN) என்ற நூலில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

போர்க்களத்திலே வீரம் விளைத்த வரலாறுகளைச் சொல்லும்போது வெற்றி பெற்ற வீரர்களை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வேலுநாச்சியார், இராணி மங்கம்மாள், ஜான்சி ராணி, ஜோன் ஆப் ஆர்க் முதலிய வீராங்கனைகள்-வளையளணிந்த கரங்களில் வாளேந்தவும் முடியும், சோறு படைக்கும் கரங்களால் வீறு படைத்த வரலாறுகளை உருவாக்கவும் முடியும் என்பதற்கான சின்னங்கள் என்பதை ஏனோ நாம் நினைவுபடுத்திக் கொள்வதில்லை. அரசியலுக்குக் கூட மகளிரின் அறிவாற்றல் இன்று நேற்றல்ல, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எவ்வளவு நேர்த்தியாகப் பயன்பட்டது என்பதற்குத் தொண்டைமானிடம் தூதுபோய், போர் செய்ய நினைத்த வேந்தர்களின் பூசல்போக்கி, தன் வாதத்திறமையால் அறிவுறுத்திய அவ்வையாரை எண்ணிப் பார்க்கையில், உலக அரங்கில் அரசுகளின் தூதுவர்களாக அன்றே மகளிர் வெற்றியோடு விளங்கினார்கள் என்பது நமக்கு அளவில்லாப் பெருமையை அளிக்கிறது. இவ்வாறு எல்லாப் பணிகளையும், எல்லா நிலைகளிலும் எல்லா வகைகளிலும் எப்போதும் ஆற்றலோடு மகளிரால் ஆற்ற முடியும் என்பதை ஜப்பான், ருஷ்ய, ஜர்மானிய நாட்டு மகளிர், உலகுக்கு எடுத்துக் காட்டி வருகின்றனர். அத்தகைய வளர்ச்சி அன்னைத் தமிழகத்துப் பெண்களுக்கும் அமைய வேண்டும் என்பது எங்களைப் போன்ற சீர்திருத்த இயக்கத்தினரின் பெரு வேட்கையாகும்.

அண்மையில் ஆப்பிரிக்க நாட்டுச் செய்தித் துணுக்கு ஒன்றைப் படித்தேன்; அந்த நாட்டு ஆசிரியர் ஒருவர் ஆசிரியப் பதவியிலிருந்து விலகினார். அவர் விலகியதற்காகக் காட்டிய வேதனைக்குரிய காரணம் நம்முடைய சிந்தனைக்குரிய ஒன்றாகும். அவர் சொன்னார்: ''நான் வேதனையோடுதான் விலகுகிறேன். ஏனென்றால், நான் தலைமை ஆசிரியருக்குக் கட்டுப்படுகிறேன். தலைமை ஆசிரியரோ மேலதிகாரிகளுக்குக் கட்டுப்படுகிறார். மேலதிகாரியோ அமைச்சருக்குக் கட்டுப்படுகிறார். அமைச்சரோ முதலமைச்சருக்குக் கட்டுப்படுகிறார். முதலமைச்சரோ பொது மக்களுக்குக் கட்டுப்படுகிறார். ஆனால், பொதுமக்களின் செல்வங்களான மாணவமணிகளோ யாருக்கும் கட்டுப்படுவதில்லை—கட்டுப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் தெரியவில்லை'' என்று அவலத்தோடு விலகல் கடிதத்தை முடித்திருந்தார். எனவே, மாணவர்களிடையே அமைதியின்மை என்பது நம்நாட்டிலே மட்டுமல்ல, நானிலமெங்கும் பரவலாகக் காணப்படுகிற ஒரு புதிராகத்தான் உள்ளது.

மாணவ மனங்கள் இளமையும், எழுச்சியும், உற்சாகமும், அறிவார்வமும், உணர்வுத் துள்ளலும், துடிப்பும் கொண்டவைகள்தாம். அரசியல் சூழல், சமுதாயச் சீர்கேடுகள், வேலையின்மை, சூழ்நிலைக்குப் பொருந்தாத அமைப்புக்கள்—போன்ற காரணங்களும் மாணவர்களின் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணங்களாகின்றன. அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட கல்வியின் போக்குகள் கூட அவர்களை நாட்டு மக்களோடும், சமுதாய நல்வாழ்வோடும் பிணைக்கின்ற வகையில் இல்லாமல், அவர்களை அவற்றிலிருந்து பிரிக்கின்ற வகையில் அமைந்து விடுகிறதோ என்றுகூட நாம் அய்யப்பட வேண்டியுள்ளது. இவ்வளவுக்கும் மேலாக பெரும்பாலான பெற்

> ‘இவ்வுலகில் காணப்படும் பலவித ஆனந்தங்களில் மிகவும் உன்னதமானது குடும்ப மகிழ்ச்சியே’’.
>
> ——ராஜாஜி

றோர்களின் அக்கறையற்ற தன்மையும், அலட்சியப் போக்கும் இந்த அமைதியற்ற தன்மைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். கல்லூரிக்கு அனுப்பும் வரையில்தான் நமது கடமை; பிறகு அவனைப் பொறுப்புள்ளவனாக் மாற்றுவது கல்வி நிலையத்தின் கடமை என்று பிறர் மீது பொறுப்பைச் சுமத்தி விட்டுத் தட்டிக் கழிக்கும் மனப்போக்கினைக் கொண்டிருக்கிறோம் என்று தந்தை என்ற வகையில் என்னையும் சேர்த்தே குறிப்பிடுகிறேன். பள்ளிக் கூடத்தை இரண்டு நாளாய் மூடி விட்டார்கள். இந்தப் பிள்ளைகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே என்று வீட்டில் அன்னைமார்கள் இன்றும் பேசுவது பொறுப்பை பிறர் மீது சுமத்தும் பெற்றோர்களின் போக்கின் ஆரம்பநிலையாகும். பெற்றோர், மாணவர், கல்வியாளர் என்று முக்கூட்டு அணியாகத்தான் கல்வியின் போக்கை நாம் வகுக்க வேண்டும். இதுபற்றி அறிவுலகம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. ஆனால் எந்த நிலையிலும், மகளிர் கல்லூரிகள் எந்தச் சலனமும் அசைவும் இல்லாமல், அமைதியான நீரோடையாகவும் அசைகின்ற தென்றலாகவும் நடந்து வருவது மெத்தப் பாராட்டுக்குரியது. இதுதான் நமது நாட்டுப் பெண்மையின் இயற்கைப் பண்பும்கூட.

இன்றைய, இருபதாம் நூற்றாண்டு, அறிவியல் நூற்றாண்டு என்று அகிலத்தால் போற்றப்படுகிறது. எல்லாத்துறைகளிலும் எல்லா நெறிகளிலும், எல்லா நோக்குகளிலும் அறிவியலின் ஆற்றல் உணரப்பட்டு, சமுதாய வளர்ச்சிப் பாதையிலே, ஒவ்வொரு துறையிலும் அறிவியல் நுணுக்கம் ஊடுருவிப் பாய்ந்து நிற்கின்றது. 1850-ஆம் ஆண்டு வரையிலும் மனிதன் தன் வாழ்வுக்காகச் செலவழித்த ஆற்றல் (சக்தி) எவ்வளவு இருக்கும் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த அளவையை 9Q என்று குறிப்பிடுகின்றனர். 33 ஆயிரம் மில்லியன் டன் நிலக்கரியை எரித்தால் கிடைக்கக்கூடிய சக்தியை ஒரு ‘Q’ என்பர். இப்படி 9Q சக்திதான் மனிதனால் 1850-ஆம் ஆண்டு வரை செலவழிக்கப்பட்டுள்ளது. 1850-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரை உள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் மட்டும் செலவாகியுள்ள சக்தியோ 5Q வாகும். 18 நூற்றாண்டுகளில் செலவழித்ததில் பாதிக்கு மேல் இந்த ஒரு நூற்றாண்டிலேயே, செலவழிக்க மனிதன் கற்றுக் கொண்டுள்ளான் என்கின்றனர். இதிலும் 1950-க்குப் பிந்திய 28 வருடங்கள் கணக்கில் இன்னும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த 150 ஆண்டுகளில் உலகில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சி, அய்யாயிர ஆண்டுக் காலப் பண்பாட்டையே அசைப்பதாக வளர்ந்து விரிந்து வருகிறது என்று பேரறிஞர் பெர்ட்ரண்டுரசல் குறிப்பிட்டுள்ளார். இப்படி அறிவியல் சிந்தனைகள் நொடிக்கு நொடி வளர்ந்துகொண்டிருக்கும் இந்த விஞ்ஞான யுகத்தில், நமது சமுதாயம், குறிப்பாகத் தமிழ்ச்சமுதாயம்—அதிலும் குறிப்பாகப் பேரறிஞர் அண்ணா சுட்டிக் காட்டியதுபோல், ஏழை எளிய மக்கள் நிரம்பிய இந்தச் சமுதாயம், எப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளில் பிற்போக்குச் சிந்தனைகளில் உழன்று கொண்டு பின்தங்கியுள்ளது என்பதைக் கல்வி ஒளிதான் நமக்குக் கண்ணாடிபோல் காட்டி நம்மைத் திருத்த வேண்டும். மனித ஆற்றல் என்பது சூழ்நிலைக்கோ, சுற்றுப் புறத்துக்கோ அடிமையாகி அமிழ்ந்துவிடுவதல்ல. விலங்குகள் சூழ்நிலைக்கு இரையாகலாம்: சூழ்நிலைக்கு ஏற்பப் பறவைகள் மாறலாம். ஆனால், மனிதனோ சூழ்நிலையைத் தனக்கு அடிமை கொள்வான்—தனக்கு ஏற்றவாறு சூழ்நிலையை மாற்றுவான். அப்படி மாற்றிக்கொண்ட வரலாறுதான் அறிவியலின் வரலாறு. அந்த அறிவியல் விரைவுக்கு ஏற்ப மகளிர் இனம் தம்மை மாற்றிக்கொண்டு நல்ல வளர்ச்சி பெறவேண்டும்.

## தாய் தந்த கல்வி

நான் பல நூல்கள் படித்திருந்த போதிலும், நம்முடைய சமுதாயத்தைப் பற்றிய நூல்களைப் படிக்கவில்லை. என்னுடைய சமயத்தைப் பற்றி என்னுடைய தாயாரிடம் இருந்துதான் கற்றுக்கொண்டேன் அதை நூல்களில் இருந்தும் கற்றுக்கொள்ளவில்லை; குருவினிடமிருந்தும் கற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் நானாகப் பின்னால் கற்றுக் கொண்டவைகளுக்கும், என் தாயாரிடமிருந்து கற்றுக் கொண்டதற்கும் எவ்வித முரண்பாடும் காணப்படவில்லை.

—மூதறிஞர் இராஜாஜி



ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செல விடும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். நமது நாட்டுத் தாய்மார்களின் கல்வியறிவைப் பொறுத் துத்தான் இருக்கிறது நமது எதிர்காலம்.

—மூதறிஞர் ராஜாஜி

வேலையின்மைச் சிக்கல் பெரிதாக வளர்ந்துள்ள இன்றைய நிலையிலும், மகளிரிடத்தில் மட்டுமே சிறப் பாக மிளிரும் தாய்மை, இல்லறம் காக்கும் திறமை, மனைகளை அலங்கரிக்கும் மாண்பு, இயல்பான பொறுமை, மனத் தெளிவு, நிதானம், நளினம், புலமை, பொறுப்பு, திறனாய்வு முதலிய பண்புகள் எல்லாவற் றையும் பரிமளிக்கச் செய்யும் பல்துறை வாய்ப்புக்களை, சமுதாய வாழ்வுக்குப் பயன்படும் வகையில் ஏற்படுத்து வதற்கான முயற்சிகளும், கல்வி உலகத்தால் சிந்திக்கப் பட்டு ஆவன செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவர், செவிலியர், ஆசிரியர், தட்டெழுத்தர், பொறியியல் கட்டிடக் கலைஞர், நுண்கலை ஆய்வாளர், செய்தி நிருபர், செய்திப்பட அமைப்பாளர், ஓவியக்கலைஞர், வங்கியில் கணக்காளர், நிறுவனச் செயலர், நேர்முக அலுவலர், சுற்றுலா வழிகாட்டி, தொல்பொருள் ஆய்வோர், சிற்பக்கலை, தத்துவ நுண்பொருள் விளக்குநர், நூலகர், வரவேற்பாளர், மின்துறை இணைப்பாளர், தொலைபேசித் துறையினர் போன்ற பல துறைகளில் மகளிர்க்கான வாய்ப்புக்கள் மிகுதியாக்கப் பட்டு வருகின்றன. பெண்களுக்கான உயர்நிலைக் கல்வி, நாட்டுக்கு நன்மை தருவதாகவும், நாட்டின் நன்மைக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினைத் தக்க வகையில் அவர்களுக்கு வளர்ப்பதாகவும், அவர்களுக்கு வருவாய்க்கு ஏற்ற வழிவகுப்பதாகவும், சமுதாயத்தில் அவர்களுக்குள்ள மதிப்பினை மேலும் உயர்த்தவல்லதாகவும் . மிளிர, பலவகைகளில் சிந்திக் கப்பட்டு வருகின்றன.

கல்லூரிக் கல்வி முடித்து வாழ்வுப் பயணம் தொடங் கும் உங்கள் உள்ளம், நம் சமுதாய உயர்வுக்கு எல்லா நிலைகளிலும் எண்ணற்ற நன்மைகளைச் சாதிக்க— எழுச்சி பெற வேண்டும் என்ற விருப்பத்தில்தான் என் கருத்துக்களில் அங்குமிங்குமாகச் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டினேன். உங்கள் கல்வி வாழ்வு பொலி வடையவும், உங்கள் உணர்வுகள் வலுவடையவும், உங்கள் கனவுகள் நனவாகவும், உங்கள் எண்ணங்கள் மலரவும், உங்கள் வாழவு உயர்ந்தோங்கித் தழைக்கவும், சீரிய முயற்சிகள் சிறந்து செழிக்கவும் என் உளமார்ந்த வாழ்த்துக்களை உங்களுக்கு உரிமையாக்கி, சமுதாயப் பணிக்கு வழங்குவதால் நாம் வறியவர்களாகி விடமாட் டோம்-வலிமை கூடியவர்களாகத்தான் நாம் மாறுவோம் என்று கவியரசி மேடலின் பிரிட்ஜெஸ் கூறிய கவிதை வரிகளை நினைவூட்டி

**Life is the mirror of king and slave**
**And it is just what we are and do**
**Then give to the world the best you have**
**And the best will come back to you.**

உங்களை வாழ்க வளர்க என்று அன்போடு வாழ்த்தி மகிழ்கிறேன். 'பெண்கள் பேதையர்கள் அல்ல மேதைகள்!' 'தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை'. சமுதாயத்தில் சமய-மத-இனங்களின் பேரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கண்மூடிப் பழக்கத்தைப் பெண்கள் தங்கள் கல்வி அறிவால் திருத்த வாய்ப்புண்டு. திருத்தியாகவும் வேண்டும். சமுதாயத் தின் உயர்வு மகளிரின் கரங்களில்தான் தங்கியுள்ளது. மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசுகின்ற காடுமணக்க வரும் கற்பூரப் பெட்டகமாகவும், நீடுதுயில் நீக்கப் பாடிவரும் நிலாவாகவும், வேண்டாத சாதி இருட்டு வெளுக்க வந்த தூண்டாத மணிவிளக்காகவும், அறம் பாடவந்த அரிவையர்களாகவும், மறம் பாட வந்த மாதரசிகளாகவும், மண்டும் மதங்கள் அண்டாத நெருப் பாகவும், அயலார் எதிர்ப்புக்கு அணையாத விளக்காக வும் கலைச் செல்வியரான நீங்கள் புகழோடு திகழ வேண்டும், ஒளிர வேண்டும், மேன்மை பெற்று மிகச் சிறப்பாக மிளிர வேண்டும், புதிய உலகுகாணப் புறப் படும் வீராங்கனைகளாக நீங்கள் விளங்க வேண்டும். வெற்றி உங்களுடையதுதான் என்று மனதார வாழ்த் திப் பாராட்டுகிறேன். வணக்கம்.

[ சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரியில் 24-11-78 அன்று ஆற்றிய பட்ட மளிப்பு விழாச் சிறப்புரை ]



8-10-72 அன்று சென்னை கிண்டி ராஜபவனத்தில் நடை பெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழா—இதுதான் ராஜாஜி கலந்து கொண்ட இறுதிப் பொது நிகழ்ச்சி.



1930-ல் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது ராஜாஜி தமது குழுவினருடன்.



புதுப்பாளையத்தில் (சேலம் மாவட்டம்) ராஜாஜி தோற்றுவித்த

# தாழ்த்தப்பட்ட சமுதாயம் தழைத்தோங்கிட..

**தீ**ண்டத்தகாதவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட ஒரு பகுதி மக்களின் துயர் துடைக்க, நலம் பெருக்க அரிசன மற்றும் ஆதிவாசிகள் நலத்துறை பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இம்மக்கள் சிறப்புற்றுத் திகழ சமுதாயத்தில் மதிப்புடன் வாழ, முன்னேற்றம் பெற, கல்வி, பொருளாதாரம், வீட்டு வசதி போன்றவைகளைப் பெற சீரிய முறையில் அரிய பல திட்டங்களை அரிசன, ஆதிவாசிகள் நலத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்த நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 16.95 கோடியாகும்.

**கல்வி :**

எல்லா அரிசன பழங்குடி மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக, அவர்களின் பெற்றோர் வருமானத்தைப் பாராது நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இலவசமாகப் புத்தகங்கள் இத்துறையால் வழங்கப்படுகிறது. மேற்படி மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை இத்துறையே நேரடியாகச் செலுத்திவிடுகிறது. தேர்வுக் கட்டணங்களையும் இத்துறையே தேர்வுகள் இயக்குநருக்கு நேரிடையாகச் செலுத்திவிடுகிறது.

1977-78 ஆம் ஆண்டு முதல், மெட்ரிக் படிப்புக்கு மேல், கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் படிப்புக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்ற அரசின் உத்தரவு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டம் தோறும் புகுமுக வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் சாந்தி நினைவு உபகாரச் சம்பளம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

**கல்விக் கூடங்கள் :**

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்க அரிசன நலத்துறையின் கீழ் 741 தொடக்கப் பள்ளிகளும், 80 நடுத்தரப் பள்ளிகளும் 18 உயர்நிலைப் பள்ளிகளும், 3 மேல் நிலைப் பள்ளிகளும், 100 ஓர் ஆசிரியர் பள்ளிகளும் ஆக 942 பள்ளிகள் செயல்படுகின்றன. 5 உயர் நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்கூட வசதிகள் இவ்வாண்டில் செய்து தரப்பட்டுள்ளன. மாணவ, மாணவியருக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் ''கேர்'' நிறுவனம் தொடர்ந்து பெரும்பங்கேற்று வருகிறது.

**விடுதிகள் :**

கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் தங்குவதற்கு விடுதிகள் அரிசன நலத்துறையின் பராமரிப்பில் இயங்கி வருகின்றன. இவ்வாண்டில் மேலும் 14 புதிய மாணவ, மாணவியர் இல்லங்களும் ஒரு கல்லூரி மாணவியர் விடுதி ஒன்றும் திறக்க செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஊட்டம் பெற இவ் விடுதிகளில் வாரத்திற்கு ஒருமுறை புலால் உணவு கொடுக்கப்படுகிறது. அரிசன நலப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவியருக்கும் விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கும் சீருடைகள் வழக்கம்போல் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்**

**திரு பெ. சௌந்தர பாண்டியன்**



**முன்தேர்வுப் பயிற்சி நிலையம் :**

இந்திய அரசுப்பணி, இந்தியக் காவல்பணி போன்ற வேலைகளைத் தாழ்த்தப்பட்டோர் பெற, பயிற்சி அளிக்க முன்தேர்வு, பயிற்சி நிலையம் இத்துறையின் கீழ் செயல்படுகிறது. தமிழ்நாடு அரசுப்பணிகளுக்குச் செல்ல இளநிலை எழுத்தர், தட்டெழுத்தர் போன்றவைகளுக்கான பயிற்சி அளிக்கும் சிறப்பு நிலையங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் மேற்பார்வையில் இயங்கி வந்தன. கடந்த இரண்டு ஆண்டுகளாக இத் தேர்வுகள் நடத்தப்படாத காரணத்தால் சிறப்பு நிலையங்கள் நடைபெறவில்லை. மேலும் ஆண்டுதோறும் 900 தட்டச்சர் மற்றும் 450 சுருக்கெழுத்தர்களை உருவாக்க தனியாக சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பொருளாதாரம் :**

பொருளாதார முன்னேற்றத்திற்கெனக் கறவை மாடுகள் வாங்க இத்துறை இவ்வாண்டு மானியமாக வழங்க ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இது தவிர, தொழில்களுக்கு வட்டி இல்லாக் கடன் வழங்குவதை— தேவைக்கேற்பக் கடன் தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இதற்கென இவ்வாண்டு ரூ. 11.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் தையல், செருப்புத் தைத்தல், முடி திருத்துதல், தச்சு மற்றும் சலவைத் தொழில் போன்ற 21 தொழில்களில் பயிற்சி பெற்றோருக்கு இலவசமாகத் தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன. 317 பால் வழங்

கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்டடுத்தப்பட்டுள்ளன. குடிசைத் தொழில்களும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றன.

வீட்டு வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் நிலம் கையகப் படுத்துவதில் விரைவு நடவடிக்கை, மேற்கொள்ள சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. வீடுகள் கட்டிக்கொடுக்கும் பணி தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இதற்கென இவ்வாண்டு 2.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரிசனக் குழந்தைகளிடம் நல்ல சுகாதாரப் பழக்கங்களைக் கொண்டுவர சமுதாய நல மன்றங்கள், கன்னியாகுமரி மாவட்ட வண்ணான் சமூகத்தினருக்கு வண்ணான் துறைகள் கட்டியும், கலப்புத் திருமணம் புரிந்தோருக்குத் தங்கப்பதக்கம் ரூ. 200 ரொக்கம் மற்றும் 3 செண்ட் வீட்டுமனை அளித்தும், வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்களின் குழந்தைகளைப் பாதுகாப்பாக விட்டுச் செல்ல பரவலாக 50 காப்பகங்கங்கள் வீதம் 1977-78 மற்றும் 1978-79 ஆண்டுகளில் அமைத்தும், சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் நல்ல முறையில் பராமரிக்கப்படும் அரிசனக் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கியும், சென்னை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடும் கிராமங்களுக்கு முறையே ரூ. 1,000, ரூ. 500 வீதம் இரு பரிசுகள் அளித்தும், ஏழை அரிசனங்கள் இறந்துவிட்டால் அவரது ஈமக் கடன்களைக் கவனிக்க ரூ. 50 வழங்கவும் அரசு உத்தரவு இட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த விதிமுறைகள் வகுக்கப்பட்டு ரூ. 4.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தற்போது செயல்பட்டு வருகிறது. அரிசன, ஆதிவாசி மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவ அரிசனங்களின் நலன்களைச் சீரியமுறையில் அரிசன நலத் துறை கவனித்து வருகிறது. இத்தருணத்தில் கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு மான்யத் தொகையை அதிகரிப்பது பற்றிய செயல்குறிப்பு நடவடிக்கையில் உள்ளது.

இவ்வாறு பல திட்டங்கள் அரிசன, ஆதிவாசிகள் நலத் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# சமுதாயம் வளம்பெற

தமிழ்நாட்டில் சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களுக்கும், 2.5 முதல் 5 வரையுள்ள வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் உடல் ஊனமுற்ற குழந்தைகள், ஆண், பெண் ஆகியோருக்கும் பல்வேறு திட்டங்கள் தீட்டி சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கணவனைஇழந்த பெண்களின் நல்வாழ்விற்கான திட்டம் தனியாக இயங்க வேண்டுமெனக் கருதப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் 'வழிகாட்டி நிலையங்கள்' அமைக்க அனுமதியளித்துள்ளது.

இந்தப் பெண்களின் குழந்தைகளைச் சமூக நல நிலையங்களால் நடத்தப்படும் விடுதிகளில் சேர்த்து இலவச உணவு, இலவசக் கல்வி, பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கணவனை இழந்த பெண்கள் சேவை இல்லங்கள் மூலமும், தனியார் சமூக நல நிலையங்கள் மூலமும் கல்வி, சிறு கைத்தொழில்கள் பயிற்றுவித்தல், இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல், அவர்களது கணவர் பணியிலிருந்தபோது இறந்திருந்தால் அன்னாரது குடும்பத்திற்குச் சேரவேண்டிய ஓய்வூதியம், சேமநலநிதி, பணிக்கொடை முதலியன பெற்றுத்தர ஏற்பாடுகள் செய்தல், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் தொழில் புரிய சிறு கடன் உதவி பெற்றுத் தருதல் முதலியன இவ்வழிகாட்டி நிலையம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

'விதவைகளுக்கான வழிகாட்டி நிலையம்' சென்னையில் இவ்வாண்டு பிப்ரவரி முதல் செயல்பட்டு வருகின்றது. இந்நிலையத்தில் சமூக நல இயக்குநரின் கீழ் ஒரு சிறப்பு அலுவலர் பணியாற்றி வருகிறார்.



டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனுமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை. நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014



# குடிசை வாழ் மக்கள் மேம்பாடடைய...!

"மக்கள் நலனுக்காகப் பல திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்றபடி அதிக வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டம் தீட்டி வருகிறோம்'' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், சென்னை மாநகராட்சி நேரு விளையாட்டரங்கத்தில் 24-10-78-ல் நடந்த குடிசை வாழ் மக்கள் மேம்பாட்டுப் பணி விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவ்வமயம் ஆதி ஆந்திர மக்கள் 869 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்களையும் உடல் ஊனமுற்ற 56 பேருக்கு வங்கி உதவித் தொகைகளையும், தாயகம் திரும்பியோர் தொழில்களை மேற்கொள்ள வங்கிக் கடனுதவிகளையும், தச்சு வேலைக் கருவிகள், முடிதிருத்தும் கருவிகள், 49 சலவைப் பெட்டிகள் ஆகியவையும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

ஏழை, எளிய மகளிர் உட்பட ஆண்கள் 11 பேர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்தியன் வங்கி வழங்கிய 28 ஆயிரத்து 300 ரூபாய் கடன் உதவித் தொகையும், சிண்டிகேட் வங்கி வழங்கிய 12 ஆயிரம் ரூபாய் கடன் உதவித் தொகையும், பாரத் ஸ்டேட் வங்கி வழங்கிய நிதி உதவியும் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டன.

காது கேளாத சிறுவர், சிறுமியர் 22 பேருக்கு இலவசமாகக் காது கேட்கும் கருவிகளையும் முதல்வர் அவர்கள் வழங்கினர்.

இவை தவிர, 12 புதிய பேருந்து வழித் தடங்களும் துவக்கி வைக்கப்பட்டன.

விழாவுக்குத் தலைமை வகித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சென்னையில் 500 புதிய வீடுகள் கட்ட ஏற்பாடுகள் நடக்கின்றன. முன்பு வீடுகள் கட்ட முடியாத சூழ்நிலை இருந்தது. இன்று அந்த நிலை மாறியிருக்கிறது. இதனால் தொழில் உற்பத்தி அதிகமாகியுள்ளது. விற்பனை வரி மூலமாக நல்ல வருவாய் கிடைக்கிறது.''

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் பேசுகையில், ''ஏழைத் தாய்மார்கள், வீட்டில் இருந்தபடியே பொருளீட்ட சமூகநலத்துறை 25 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டியுள்ளது'' என்றார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் பேசுகையில், ''இன்று பல்வேறு வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விடப்படுகின்றன. பேருந்துகளைக் கண்டிராத பகுதிகளுக்கும், புறநகர்ப் பகுதிகளுக்கும் இந்த மெட்ரோ பிரிவு 10 புதிய பேருந்துகளை விடுகிறது. இதனால் 41 பகுதிகளிலுள்ள 50 ஆயிரம் மக்கள் பலன் அடைகிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசுகையில், ''சாலை வளர்ச்சிக்கு 4.23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறைக்கு 6.55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படிச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்கு மட்டுமே உலக வங்கியின் உதவி பெற்று, 45 கோடியே 18 இலட்சம் செலவு செய்து சென்னை மாநகர் ஓர் அதிசய பூமியாகமாற விருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசுகையில், "தமிழகத்தில் கடந்த 15 மாதங்களாக நடக்கும் நல்லாட்சியை இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமே பாராட்டிக் கொண்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. ராமபத்திரன் அவர்கள் பேசுகையில், ''சுமார் 1202 குடிசைப் பகுதிகளில் 250 குடிசைகளை எடுத்து, அவற்றில் 250 குடும்பங்கள் குடியிருக்க மாடி வீடுகளாகக் கட்டித் தர ஏற்பாடு நடைபெற்று வருகிறது. மேலும், பத்தரைக் கோடி ரூபாய் செலவில் புதிய திட்டமும் தீட்டப்பட்டு வருகிறது'' என்றார்.

விழாத் துவக்கத்தில் சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு செ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சென்னை மாவட்ட ஆட்சியாளர் திரு எம். வேங்கடாசலம் அவர்கள் நன்றி நவில, விழா இனிதே முடிந்தது.

சென்னை நுங்கம்பாக்கம், கல்லூரிச்சாலையில் அமைந்துள்ள 'பூம்புகார்' என்னும் தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையத்திற்குள் நுழைகிறோம்.

சிற்றுளி கொண்டு சிலை செதுக்கும் சிற்பியின் கைவண்ணம் பார்க்கிறோம்.

வண்ணத்தைக் குழைத்துத் தம் எண்ணத்தை வடிவமைக்கும் ஓவியனின் கைத்திறம் கண்டு வியக்கிறோம்.

கல்லால், மண்ணால், காகிதத்தால், உலோகத்தால் உருவம் சமைத்து உயிர் பெற்ற பொம்மையோ என நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் கண்கவர் கலைப்பொருள்களைக் காண்கிறோம்.

தமிழ்நாட்டுக் கைத்திறம் நன்கு வெளிப்படும் வண்ணம், பல்வேறு கலைப் பொருள்களை உருவாக்கி உலகெங்கும் பாராட்டுப் பெற்றுள்ள ஓர் ஒப்பற்ற நிறுவனம்தான், தமிழ்நாடு அரசின் பூம்புகார் இணையகம். இது 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் துவங்கியது.



சென்னையிலுள்ள இந்த பூம்புகார்தான், மத்திய வடிவமைப்பு நிலையமாகச் (Design Centre) செயல்பட்டு வருகின்து. இங்குப் புதிய புதிய மாதிரி வடிவமைப்புகள் செய்யப்படுகின்றன. பிறகு அவை பெருமளவில் தயார் செய்வதற்கென, வெளியே இருக்கும் உற்பத்திக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சென்னையிலுள்ள இந்த வடிவமைப்பு நிலையத்திலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தக் கலைப் பணியில் இங்குச் சுமார் 100 பேர் ஈடுபட்டிருக்கின்றனர்.

கைத்தொழில் பொருட்களின் விற்பனையை முறைப்படுத்தி, கைத்தொழிற் கலைஞர்கள் படைப்புக்கேற்ற தகுந்த ஊதியத்தைப் பெறச் செய்யும் நோக்கோடு துவக்கப்பட்டுள்ள கலைக்கூடம்தான் பூம்புகார். அது இன்று பதினேழு விற்பனை நிலையங்களையும், பதினெட்டு உற்பத்திக் கூடங்களையும் கொண்டு செவ்வனே இயங்கி வருகின்றது.

விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டில் சென்னை, மாமல்லபுரம், மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, கடலூர், நெய்வேலி, வேலூர் ஆகிய இடங்களிலும், புதுடெல்லி, பம்பாய், பெங்களூர் போன்ற இடங்களிலும் உள்ளன.

'பூம்புகார்' தயாரிக்கும் பொருள்கள் என்னென்ன?

உலோகத்தாலான அழகிய மரத்தாலான கண்கவர், சிற்பங்கள், தேர்கள், கற்சிலைகள், புகழ்மிக்க தஞ்சாவூர்க் கலைத் தட்டுகள், பனை, பிரம்பு, மூங்கிலால் ஆன பொருட்கள், சடம்பு நார்ப் பொருட்கள், அரக்கால் ஆன கடைசல் பொருட்கள், காகித மாவுப் பொருட்கள் போன்றவை நேர்த்தியான முறையில் இங்குள்ள உற்பத்திக் கூடங்களில் உருவாகிய வண்ணம் உள்ளன.



காலத்துக்கேற்ற வகையிலும் மக்களின் ரசனைக்கேற்றவாறும் கலைப்பொருட்களும் (Handi-Crafts) அன்றாட உபயோகத்திற்கான அழகிய பொருட்களும் (Utility Articles) பூம்புகாரில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நவநாகரிக உலகிற்கேற்ப தம்மை அலங்கரித்துக் கொள்வதோடு, தாம் வாழும் வீட்டையும் அலங்கரித்துக் கொள்ள பலர் ஆசைப்படுவதுண்டு. அந்த ஆவலை—ஆசையை நிறைவேற்ற பூம்புகார் மகிழ்ச்சியுடன் முன் வருகிறது. அதாவது, இல்லத்தின் உட்புறம் எழிலோடு விளங்கிட இது உதவுகிறது.

இந்தியாவிலேயே கைவினைப் பொருட்களுக்கான அமைப்புகளில் மிகப் பெரியது என்று பெரும் புகழும் பெற்று விளங்குவது பூம்புகார்.

இங்கே உருவாக்கப்படும் பொருட்கள் தரமானவை; நியாய விலையில் கிடைப்பவை.

வணக்கத்துக்குரிய கடவுளர் உருவங்களும், பூசைப் பொருட்களும் விளக்குகளும், மிகச் சாதாரணமாகச் செய்து விடுவதில்லை; அவை சாத்திர விதிகளின்படி உருவாக்கப்படுகின்றன. உலோகத் தகட்டில் செய்யப்பட்ட சிலுவை, மக்கா, மதினா போன்றவை ஏழை எளியவர்களும் வாங்குமாறு காகிதக் கூழிலும் தயாரிக்கப்படுகின்றன.

ஒரு பெரிய மேசையின்மீது உள்ள துணியில் இருவர் வண்ணங்களைக் கொண்டு சித்திரம் எழுதுவதைப் பார்க்கிறோம். மிக நுண்ணிய வேலைப்பாட்டுடன்

PoomPuhar



# பூம்புகார் போற்றுதும்!
# பூம்புகார் போற்றுதும்!

கூடிய அந்த அழகிய சித்திர வேலைக்கு மிகவும் பொறுமை வேண்டும் என உணர்கிறோம்.

இயற்கை வண்ணங்களால் எழிலுறப் புனையப் பெறும் அதற்குக் 'கலம்காரி சித்திரம்' என்று பெயராம். இந்தச் சித்திரமுறையில், நவீனச் சித்திர முறையும் பூம்புகார் சித்திரக் கூடங்களில் பரிசோதிக்கப்படுகிறது. இவ்வாறு பழமையும் புதுமையும் இணைந்தவையாகவும், நாகரிக வளர்ச்சிக்கு ஏற்றவையாகவும் கைவினைப் பொருட்கள் இங்கே நாளும் தயாராகின்றன.



திருமணம், பிறந்தநாள், பாராட்டு விழா போன்ற விசேட நாட்களில் அன்புடன் வழங்குவதற்கேற்ப அழகிய பரிசுப் பொருள்களும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. அவை, சாதாரண மக்கள் வாங்குவதற்கேற்பக் கலையழகுடன் உருவாக்கப்படுகின்றன.

பூம்புகார் மூலம் உற்பத்தியாகும் கலைப்பொருட்கள் ரூ. 2 முதல் ரூ. 10 ஆயிரம் வரை உள்ளன. மரத்தாலான சிற்ப வேலைப்பாடமைந்த அழகிய சூட்டித் தேர் 6 அடி உயரமும் 6 அகலமும் உள்ளது. இதன் விலை தான் ரூ. 10,000.



வெளியில் விற்கும் கலைப் பொருள்கள் பற்றி பூம்புகார் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி திரு ஆர். கிருஷ்ணசாமி அவர்கள் கூறுவதாவது:



''பாம்புத் தோலில் செய்யப்பட்ட மணிபர்ஸ், பைகள், பெல்ட் முதலானவற்றை நாம் பார்க்கிறோம். இவையெல்லாம் செயற்கைப் பாம்புத் தோல்கள், மரத்தால் செய்யப்படும் கலைப் பொருள்கள்கூட உண்மையானவை அல்ல. 'ரோஸ் வுட்' என்று சாயம்பூசி விற்பதும், தேக்கு என்று வேறு ஏதோ ஒரு மரத்தாலானவற்றைத் தருவதும் இன்று சர்வசாதாரணமாக நடைபெறும் வியாபாரத் தந்திரங்களில் ஒன்றாகும். இப்படி மரத்தில் மட்டும் அல்ல, உலோகத்திலும் கூட கலப்படம் செய்வதுண்டு.''

தரமான பூம்புகார் கலைப் பொருள்கள் மூலம் ஆண்டுக்கு ரூ. 1.5 கோடி வருமானம் கிடைக்கிறது. வரும் ஆண்டுகளில் ரூ. 2 கோடி வரை வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் கலைஞர்கள் தங்கள் பொருட்களை நேரிடையாக விற்றுப்பயனடையும் வண்ணம், புதுக் கொள்முதல் திட்டத்தைப் பூம்புகார் செயல்படுத்துவதன் மூலம், நடுத்தரகர்களின் ஆதிக்கத்திற்கு முடிவு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பூம்புகார் தயாரிக்கும் கலைப் பொருள்களுக்கு வெளிநாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, தூரக்கிழக்கு ஆசிய நாடுகள் ஆகிய இடங்களில் இப்பொருள்கள் விரும்பி வாங்கப்படுகின்றன.

மேலை நாட்டில் வாழும் இந்தியர்களுக்குப் பூசைப் பொருள்கள், கற்சிலைகள், மரச்சிற்பங்கள் முதலானவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தற்போது பாய், பிக்னிக் கேன் நாற்காலிகள் ஏற்றுமதியாகின்றன.

பல ஆண்டுகள் நிலைத்து நிற்கக் கூடிய, தரமான பொருள்களைத் தயாரித்து, தன்னிகரில்லாப் புகழுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது தமிழக அரசின் பூம்புகார்!

பி. வி. கிரி



# ராஜாஜியின் வாழ்க்கைக் குறிப்புகள்

**1878** டிசம்பர் 10ஆம் நாளில் ஒசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தில் சக்கரவர்த்தி வெங்கடார்யா - சிங்காரம்மா ஆகியோரின் 3வது புதல்வராகப் பிறந்தார்.

**1889** ஒசூர் பள்ளிப் படிப்பு முடிவு.

**1891-97** பெங்களூரில் உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி.

**1897** பி.ஏ. பட்டதாரியானார்.

**1898** தாயார் மறைவு—திருமணம்—(திருமலை சம்பங்கி அய்யங்கார் என்பரின் மகள் அலர்மேலு மங்கம்மாளை (மங்கா) மணந்தார்).

**1899** வழக்குரைஞர் பட்டம்.

**1900** வழக்குரைஞர் பணி துவக்கம்.

**1901** சேலத்தில், நண்பர்களுடன் சேர்ந்து இலக்கிய மன்றத்தைத் துவக்கினார்.

**1902** மூத்த மகன் கிருஷ்ணசாமி பிறப்பு.

**1904** இரண்டாவது மகன் ராமசாமி பிறப்பு.

**1906** மூத்த மகள் நாமகிரி பிறப்பு.
கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரதிநிதியாகச் சென்றார்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்குரைஞராகப் பதிவு செய்தல்.

**1907** சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கு பெற்றார்.

**1909** புதுவையில் கவிஞர் சுப்ரமணிய பாரதியாருடன் சந்திப்பு — மூன்றாவது மகன் நரசிம்மன் பிறப்பு.

**1910** கர்நூலில் நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாட்டில் பங்கு பெற்றார். காந்தியடிகளின் சொற்பொழிவைக் கேட்டார்.

**1911** சேலம் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்.

**1912** இரண்டாவது மகள் லட்சுமி பிறப்பு.

**1915** மனைவி மரணம்.

**1917-19** சேலம் நகராட்சி மன்றத்தின் தலைவர்.

**1918** ராஜாஜியைச் செயலாளராகக் கொண்ட தேசிய சங்கம் நிறுவப்பட்டது.

பம்பாயில் காங்கிரஸ் சிறப்பு மாநாடு.

**1919** மார்ச் திங்களில் சென்னையில் குடியிருப்புத் தொடக்கம். காந்தியடிகள் சென்னைக்கு வருகை : ராஜாஜியின் வீட்டில் தங்கினார்.

**1920** காந்தியடிகளின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார்.

**1921** மூத்த சகோதரரும் தந்தையாரும் மறைவு.

டிசம்பர் 21ல், முதல் சிறைத் தண்டனை.

**1922** 'யங் இந்தியா', 'லீடர்', 'நோசேஞ்ச்' ஆகிய இதழ்களின் ஆசிரியர் பொறுப்பு.

பெல்காம் காங்கிரஸ் மாநாடு.

சேத் ஜம்னாலால் பஜாஜ் நிறுவிய அகில இந்திய சர்வ சேவா சங்கத்தில்உறுப்பினர் பொறுப்பு.



திருச்செங்கோட்டில் காந்தி
ஆசிரமத்தை நிறுவினார்.

1930 இந்திய மதுவிலக்குச் சங்கத்தின்
செயலாளர் பொறுப்பு.

வேதாரண்யம் சத்தியாக்கிரகத்
தில் ஈடுபட்டு 9 மாத சிறைத்
தண்டனை.

1932 பூனா ஒப்பந்தம் உருவாக ஒத்
துழைத்தார்.

அரிசனங்களுக்கு ஆலயப் பிர
வேச இயக்கத்தில் முனைந்து
நின்றார்.

1937-39 பிரிக்கப்படாத சென்னை மா
நிலத்தின் முதல்வராக இருந்
தார்.

1939 முதல்வர் பதவியை ராஜினாமா
செய்தார்.

1942 'வெள்ளையனே வெளியேறு'
என்ற காங்கிரசின் கொள்கை
யில் மாறுபட்டு காங்கிரஸ் இயக்
கத்தை விட்டு வெளியேறினார்.

1946 மீண்டும் காங்கிரஸ் இயக்கத்
தில் ஈடுபட்டு, செயற்குழு உறுப்
பினரானார்.
செப்டம்பர் திங்களில் காங்கி
ரஸ்-முஸ்லீம் லீக் கூட்டு அமைச்
சரவை; பண்டித நேருவின்
தலைமையில் அமைக்கப்பட்ட
இடைக்கால மந்திரி சபையில்
அமைச்சரானார்.

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளில் இந்தியா
விடுதலை பெற்றது.

அரசின் ஆட்சிப் பொறுப்பில்
உறுப்பினர். மேற்கு வங்கத்தின்
ஆளுநர் பொறுப்பு

1948 இந்தியாவின் முதல் இந்தியக்
கவர்னர்-ஜெனரல்.

1950 ஜனவரி 26ல் இந்தியா குடியரசு
நிலை பெற்று, இராசேந்திர
பிரசாத் குடியரசுத் தலைவர்
ஆகியமையால் மீண்டும் மைய
அரசில் அமைச்சர் பொறுப்
பேற்றார்.

1952 மைய அரசின் அமைச்சர்
பொறுப்பிலிருந்து விலகினார்

சென்னை மாநிலத்தின் முதல
மைச்சர் பொறுப்பை ஏற்றார்.

1954 பாரதரத்னா பட்டம் பெற்றார்.

மாநில முதல்வர் பொறுப்பி
லிருந்து விலகினார்.

1958 80வது பிறந்த நாள் விழா
கொண்டாடப்பட்டது.

1959 சுதந்தரா கட்சியை உருவாக்கி
னார்.

1962 அணு ஆற்றலைத் தீய செய
லுக்குப் பயன்படுத்துவதை
எதிர்க்கும் குழுவில் பங்கு
பெற்று, அமெரிக்கா சென்று,
அந்நாளைய அமெரிக்க குடி
யரசுத் தலைவர் கென்னடியைச்
சந்தித்தார்.

1967 சென்னை மாநிலத்தில் பொதுத்
தேர்தலில் பேரறிஞர் அண்ணா
வுக்கு உறுதுணையாக இருந்து,
காங்கிரஸ் அல்லாத அமைச்ச
ரவை உருவாகப் பாடுபட்டார்.

1971 93வது பிறந்த நாள் விழா.

1972 டிசம்பர் 25ல் சென்னையில்
மறைவு.

டிசம்பர் 26ல் அவரது உடல்
அரசு மரியாதையுடன் ஊர்வல
மாக எடுத்துச் செல்லப்பெற்று,
எரியூட்டப்பெற்றது.



# தாழ்த்தப்பட்டோருக்குத் தரைப்படைப் பயிற்சி

தாழ்த்தப்பட்ட-மலை வாழ் வகுப்பினைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் இராணுவத்தில் அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக (கமிஷண்ட் ஆபீசர்), தமிழ்நாடு அரசு ஒரு தனிப் பயிற்சியினை ஏற்பாடு செய்துள்ளது.

மத்திய அரசின் பணியாளர் தேர்வுக் கழகத் தேர்வுக்காக இந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தத் தேர்வு இரு கட்டங்களில் இருக்கும். ஒன்று தேர்வு எழுதுவது. அதற்குப்பின் ஒரு திங்கள் கழித்து, இராணுவத் தேர்வுக் கழகம் ஒரு நேர்முகத் தேர்வு நடத்தும். அதில் தேர்ந்தெடுக்கப் பட்ட இளைஞர்கள் இராணுவத்தில் அதிகாரி ஆவார்கள்.

இதற்காகத் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மலை வாழ் வகுப்புக்களைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அதில் மொத்தம் 15 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 7-9-78 முதல் அவர்களுக்கு திருச்சி நகரிலுள்ள முன்னாள் இராணுவத்தினர் நல இயக்ககத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இரு பேராசிரியர்களும், 3 உதவிப் பேராசிரியர்களும் அவர்களுக்கு ஆங்கிலம், பொது அறிவு ஆகியவற்றில் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இந்த 15 இளைஞர்களுக்கும் திருச்சியில் இலவச உணவு-தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அது தவிர மாதம் ரூ. 25 உதவித் தொகையாகத் தரப்படுகிறது.

இந்தப் பயிற்சி, தமிழகத்தில் முதல் முறையாக நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி வகுப்புகளை அண்மையில் திருச்சி வந்திருந்த தென் மண்டல இராணுவத் தலைவர் மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்கள் பார்வையிட்டார்.

## தமிழக அரசுக்குப் பாராட்டு

''தமிழகத்தில் மதுவிலக்கு சிறப்பாக நடக்கிறது. இது மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாகும்'' என்று நாகாலாந்து அமைதிக் குழுத் தலைவரும், சர்வோதயத் தலைவருமான டாக்டர் அறம் அவர்கள் பாராட்டியுள்ளார்.

கோவை, தொழிலாளர் கல்வி மண்டல அலுவலகமும், காந்தி அமைதி நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த காந்திய சிந்தனை முகாமினை டாக்டர் அறம் அவர்கள் துவக்கி வைத்துப் பேசினார்.

''நாகாலாந்தில் மதுவிலக்கினைத் தீவிரமாக அமல்படுத்துவது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டில் மதுவிலக்கினைத் தீவிரமாக அமல்படுத்துவது, நமது நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகும்'' என்றார் அவர்.

# நாடகப் பேராசிரியரின் நினைவு நாள் விழா



தமிழ் நாடக உலகின் தலைமை நாடகப் பேராசிரியர் என்று புகழப்பெற்ற தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளை தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 13-11-1978 அன்று கலைவாணர் அரங்கில் கொண்டாடியது. மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்.

நாடகப் பேராசிரியருக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் பெருந்திரளாக வந்திருந்த பொது மக்களை, மன்றத்தின் தலைவர் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் வரவேற்றார். வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டார்.

''வாழ்க்கை முழுவதையும் தமிழுக்காக-தமிழ் நாடகத்திற்காக அர்ப்பணித்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அதனால் அவர் திருமணம்கூடச் செய்து கொள்ளாமல் தூய துறவு வாழ்க்கை நடத்தினார்.

''தமிழ் மக்களுக்கு நாட்டுப் பற்று, டண்பு, அன்பு ஆகியவை இருக்க வேண்டும் என்பதைப் பழங்கால நடிகர்களுக்கு எடுத்துச் சொன்னார். தூய நாடகங்களைத் தமிழுக்கு முதன் முதலில் அறிமுகம் செய்தவர் சங்கரதாஸ்.

''சங்கரதாஸ் தூண்டிவிட்ட நாடக உணர்வுதான்-அவர் உருவாக்கித் தந்த நாடகத் தமிழ் தான்-நமது நாட்டில் நாடகம் வளர்வதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

''தூய தமிழை-தூய நடிப்பை வைத்து நாடகம் நடத்தியவர் சங்கரதாஸ். அவரை மறந்தவர்கள், தமிழ் நாடகத்தை மறந்தவர்கள் ஆவார்கள்.

''நிதி சால சுகமா? இல்லை! ராமனின் சந்நிதியே சுகம்' என்று தியாகய்யர் சொன்னாரே அதைப் போல, நாடகமே சுகம் என்று நம்பி வந்தார் சங்கரதாஸ்.

''நாடகம்-உள்ளத்தைப் பண்படுத்துவதாக இருக்க வேண்டும்; புண்படுத்துவதாக இருக்கக் கூடாது. நாடகங்கள் கீழ்த்தரமான உணர்வுகளை உருவாக்கக் கூடாது. உயர்ந்த எண்ணங்கள், தூய வாழ்க்கை,ஒழுக்க உணர்வு ஆகியவற்றை வளர்ப்பதற்கு நாடகங்கள் உதவ வேண்டும். அந்தப் பணியைச் செய்தார் சங்கரதாஸ்''.

வரவேற்புரைக்குப் பின்னர், மாண்புமிகு கைத்தொழில் துறை அமைச்சர் திரு கே. இராசா முகமது அவர்கள் விழா வைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்!

''நாடகப் பேராசிரியர் என்றும், கற்றவர் என்றும், நல்லவர் என்றும் பாராட்டுகளைப் பெற்ற தமிழ்நாடகத்தின் பிதாமகனாகத் தோன்றி மறைந்த சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாள் இங்கே கொண்டாடப்படுகிறது.

''ஒரு பெரிய தலைமுறைக்கும் இன்றைய தலைமுறைக்கும் உள்ள இடைவெளியில் உள்ளவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் நினைவு கூர்கிறேன்.

''சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் எல்லாம் நூல்வடிவில் வெளியிடப்பட வேண்டும், அதுமட்டுமல்ல அவரது நாடகங்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

''தமிழ்நாடகம் உலக இலக்கியங்களுடன் போட்டி போட்டு வாழ்வதற்குரிய தகுதி படைத்தது. புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியரான ஷேக்ஸ்பியருக்கும் நமது சங்கரதாஸ் அவர்களுக்கும் ஒற்றுமை இருந்திருக்கிறது.

''ரோமியோ ஜூலியட் என்ற நாடகத்தில் காதலர்கள் பிரிந்து செல்லும்போது, Sweet Sorrow When we meet morrow என்று குறிப்பிடுகிறான் கதாநாயகன்.

''அதாவது பிரிவதை எண்ணும்போது வேதனையாகவும், மீண்டும் மறுநாள் சந்திக்கப் போவதை எண்ணும்போது அது இனிமையாகவும் இருக்கிறது என்பதை எடுத்துக் கூறும் வகையில் Sweet Sorrow எனக் குறிப்பிடுகிறான்.

''சங்கரதாஸ் அவர்களும் இதேபோல் ஒரு நிகழ்ச்சியை— தமது 'அபிமன்யு சுந்தரி' என்னும் நாடகத்தில் உருவாக்கியுள்ளார்.

''சுந்தரி என்பவள், அவளது விருப்பத்திற்கு மாறாக துரியோதனின் மகனுக்கு மணமுடித்துக் கொடுக்கப் பெற இருக்கின்றான். மணமகளாகிய அவளை

அழைத்துச் செல்லும் நிகழ்ச்சியின்போது ஒலித்த மேள தாளங்கள் அவளுக்குத் துன்ப ஒலியைத் தந்தன. அவளது அத்தான் அபிமன்யு வந்து விட்டான் என்ற செய்தியை அறிந்த பின்னர், சுந்தரி மகிழ்ச்சியுறுகிறாள்: முன்பு துன்பத்தைத் தந்த வாத்தியங்கள் இப்போது அவளுக்கு மனமகிழ்வைத் தருகின்றன. இதைச் சங்கரதாஸ் எழுதியுள்ள விதம் போற்றிப் பாராட்டுதற்குரியது.

''சங்கரதாஸ் அவர்கள், 'துந்துபிகளெல்லாம் **தும் தும் தும்** என்றும், சங்குகள் எல்லாம் பம், பம், பம் என்றும், தாளவகைச் சல்லரி, மல்லரி, கரடிகைகளோ **தீம் தீம் தீம்** என்றும் முரசு, பேரிகை மிருதங்கங்களோ **தோம் தோம் தோம்** என்றும் தொனிக்கின்றன. ஆகவே இவ்வகை வாத்திய ஒலிகள் எல்லாம் ஒன்றுகூடி **தும் பம் தீம் தோம், துன்பம் தீர்ந்தோம், துன்பம் தீர்ந்தோம்,** என்னும் பொருளைக் கொடுக்கலாயின' என்று உரையாடல் எழுதியுள்ளார். Unity of action, Unity of Time, Unity of Place என்னும் மூவகைப் பிரிவுகளைத் தமிழ் நாடகத்தில் அறிமுகம் செய்த பெருமை சங்கரதாஸ் அவர்களுக்கே உரியது.''

பின்னர், கலை மாமணி திரு கே. சாரங்கபாணி, சங்கரதாஸ் சுவாமிகளின் திரு உருவப்படத்தைத் திறந்து வைத்துக் குறிப்பிட்டார்.

''இனிமை, எளிமை நிறைந்த பாடல்கள், தேன் சொட்டும் தமிழில் சங்கரதாஸ் அவர்கள் எழுதிய உரைநடைகள் - தமிழ் நாடகத்திற்கு வலுவூட்டின. சுவாமி என்றால் தமிழ் நாடக உலகத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் ஒருவரையே குறிக்கும்.''

அடுத்துப் பேசிய திரைப்பட நடிகர் திரு டி. எஸ். துரைராஜ் குறிப்பிட்டதாவது: ''நான் சுவாமிகளைப் பார்த்தது கிடையாது, அவர் எழுதிய நாடகங்களில் நடித்திருக்கிறேன் என்னும் பெருமை எனக்கு உண்டு.''

அடுத்துப் பேசிய கலைமாமணி திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி சங்கரதாஸ் சுவாமிகளிடம் நேரடியாகப் பயிற்சி பெறவில்லை. ஆனால் என் தந்தையிடம்பயிற்சி பெற்றிருக்கிறேன். என் தந்தை, சுவாமிகளிடம் சீடராக இருந்திருக்கிறார். எனவே அவர் கற்பித்த பாடம்-எனக்கு உதவியிருக்கிறது.

''முன்பெல்லாம் நாடகத்தைப் போற்றிவந்த மக்கள் நாடகக்காரர்களை மதிப்பதில்லை. நாடகம் நடத்தச் சென்ற இடத்தில், தங்குவதற்குக் கூட இடம் தரமாட்டார்கள். இன்று, அந்த நடிகர் உலகத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழகத்தின் முதல்வராக வந்திருக்கிறார் என்பதை எண்ணும்போது நடிகர் சமுதாயமே பூரிப்படைகிறது.

''சங்கரதாஸ் அவர்கள் உரையாடல், பாடல் யாவும் நன்கு அமைக்கும் திறமை பெற்றிருந்தார். நாடகத்தின் மூலமாக அவர் பக்தியை வளர்த்தார். தமிழ் நாடகத்துறையை நல்ல விதம் அமைப்பதற்கு அரும்பாடு பட்டார்.''

பின்னர், கலைமாமணி எம். கே. ராதா அவர்கள் உரையாற்றினார்; அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

''சுவாமிகளும், என் தந்தையாரும் மிக நெருங்கிப் பழகியவர்கள். சுவாமிகளது நாடகத்தில் நடிக்க வேண்டும் என்றால் தனி தைரியம்-உடல் வலிவு வேண்டும்.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகத்திலே தமிழ் இருந்தது அது அழியாதது; அந்த நாடகத்திற்கு அழிவே கிடையாது!''

''கலை கலைக்காக மட்டுமல்ல; பாசம், அன்பு, பண்பு ஆகியவற்றிற்கும்தான் என்பதைக் கற்றுத் தந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

''சென்னையில் உருவாகிவரும் நடிகர் சங்கக் கட்டடத்தில்-சங்கரதாஸ் பெயரால் ஒரு நினைவுச் சின்னம் உருவாக்க வேண்டும்!

அடுத்துப் பேசிய, கலைமாமணி எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்:



மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தலைமை உரை ஆற்றுகிறார்



''சங்கரதாஸ் சுவாமிகளின் சாதனைகளை - திறமைகளை மிகத் தெளிவாக எடுத்துக்கூறும் விழா இது. நான் சுவாமிகளுக்குப் பேரன் முறை வேண்டும். எனது ஆசான் டி. கே. சண்முகம் அவர்கள், சுவாமிகளுக்கு மாணவர்-நான் டி. கே. எஸ்ஸுக்கு மாணவன். எனவே, சுவாமிகளுக்கு நான் பேரன்தான்! இருந்த இடத்திலிருந்தே, ஒரே இரவில் ஒரு முழு நாடகத்தை உரையாடல், பாடல்களுடன் எழுதியிருக்கிறார் சங்கரதாஸ்; நாடகம் தயாரிப்பதில் அவருக்குத் தனித் திறமை உண்டு.

''சங்கரதாஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட நாடகத்துறையில் மறுமலர்ச்சி-திருப்புமுனை ஏற்பட்டது. அதனைச் செய்தவர் திரு கந்தசாமி முதலியார் ஆவார்.

''இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோள். நாடகக் கலைக்கு என்று ( Boys Company ) நடத்த முன்வரவேண்டும். அதற்காக அரசு மான்யம் ஒதுக்க வேண்டும். அப்போதுதான் உண்மை உணர்ச்சியுள்ள நடிகர்கள் உருவாக்கப்படுவார்கள்.

''காருள்ளளவும் கடல்நீர் உள்ளளவும் சுவாமிகள் புகழ் ஓங்குக!''

பின்னர், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ் நாடகத்துறைத் தலைமைப் பேராசிரியர் தவத்திரு சங்கரதாஸ் அவர்களின் நினைவு நாளை தமிழக அரசின் சார்பில், இயல் இசை நாடக மன்றத்தின் துணையோடு நடத்திக் கொண்டிருக்கிறோம்.

''அவரது நினைவு நாளை அரசின் சார்பில் நடத்துவது என்னும் முடிவை, சென்ற ஆண்டில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்ததற்கிணங்க இவ்விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

''தமிழகக் கலையுலகின் வரலாற்றை புகழ்மிக்க கலைஞர்கள் அணி செய்திருக்கிறார்கள். இந்திப் படங்களிலும் பங்கேற்று சிறப்பெய்திருக்கிறார்கள் நமது தமிழகக் கலைஞர்கள். உலகத்துக்கே சவால் விடும் கலைஞர்களைத் தமிழகம் உருவாக்கியளித்துள்ளது.

''நாடக நடிகர்கள் என்றால் சமுதாய விரோதிகள். தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டு வந்த காலத்தை திருமதி எஸ். டி. சுப்புலெட்சுமி அம்மையார் நினைவுபடுத்தி, அதே நாடக நடிகர் எம். ஜி. ஆர் தான் இன்று தமிழக முதல்வராக வந்திருக்கிறார் என்றும் எடுத்துரைத்துப் பெருமிதப்பட்டார்.

''இதையெல்லாம் நினைக்கும் போது சங்கரதாஸ் அவர்களே, நீங்கள் விதைத்த விதை அழிந்து விடவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

''நடிகர்களும் மதிக்கத் தக்கவர்கள்தான், போற்றத் தக்கவர்கள்தான் என்பதைத் தமிழகம் இன்று உணர்ந்திருக்கிறது. இந்த உண்மையை முன்பே உணர்ந்திருந்ததனால் தான் அண்ணா அவர்கள், கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் மதிப்புக் கிடைக்க வேண்டும் என்று எண்ணினார். அந்த எண்ணத்தை முதல்வர் எம். ஜி. ஆர். நிறைவேற்றி வருகிறார்.

''ஒரு கலைஞன் நாட்டை ஆளமுடியும் என்பதற்கு விதை விதைத்தவர் சங்கரதாஸ் சுவாமிகள். அரசியல் இல்லை என்றால் வாழ்வு இல்லை என்பது எப்படி உண்மையோ, அதுபோல சங்கரதாஸ் சுவாமிகள் இல்லையென்றால் தமிழ்நாடகம் இல்லை.

''நாடகக் கலைஞர்கள் ஒரு காலத்தில் மக்களை விட்டு ஒதுங்கியிருந்தார்கள். அவர்களை எல்லாம், பேரறிஞர் அண்ணா, அழைத்து, வாழ்க்கையின் மையமண்டபத்தின் வாசலுக்கு வா, மக்களைவிட்டு விலகிச் செல்லாதே! சமுதாயத்தோடு சமுதாயமாக இரு' என்று கூறினார்.

''பல்கலைக் கழகங்களில் பெற முடியாத கல்வியை- உயர்வை, ஒரு நாடகக் கம்பெனி வழங்குகிறது. நாடகக் கம்பெனியில் ஒருவன் பணி புரிந்தால் அவர் வெளியே வரும்போது- நாடக ஆசிரியராக வரலாம். பாடலாசிரியராக வரலாம் — நடிகராக வரலாம் - சீன் எழுதுபவ்ராக வரலாம்-வயலின் வாசிப்பவராக வரலாம்-ஆர்மோனியம் வாசிப்பவராக வரலாம். நூற்றுக்கு நூறு விற்பன்னர்களாக உருவாக்கும் திறமை நாடகப் பல்கலைக் கழகத்துக்கு உண்டு.

''சங்கரதாஸ் சுவாமிகள், நாடகத்தில், நாரதரின் பாத்திரத்தின் வாயிலாக, தனது கருத்துகளை எடுத்துரைத்து வந்தார். அவரது இலக்கியங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.''

பின்னர், இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்சுள் நன்றியுரை கூறினார். அதன் பின்னர், சுவாமிகள் எழுதிய 'அபிமன்யு சுந்தரி' என்னும் நாடகத்தை மதுரை தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத்தவர் சிறப்பாக நடத்தினர். சுவாமிகளின் பேராற்றலுக்குச் சான்றாகத் திகழ்ந்தது அந்நாடகம்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்



அபிமன்யு சுந்தரி' என்னும் நாடகத்தில் ஒரு காட்சி

# மாவட்டங்களில்...

சென்னை மாநகரில் பணியாற்றி வரும் நீதிபதிகள், மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டுகள் ஆகியோருக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் அடுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றியிருக்கிறது. சென்னை எழும்பூர் பிரதம மெட்ரோபாலிடன் கோர்ட் இயங்கி வரும் இடத்தருகே 36 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை நீதிமன்றம் அருகே 18 குடியிருப்புகளும் கட்டப்படவிருக்கின்றன.

ஓராண்டுக் காலத்திற்குள் இந்த வீடுகள் கட்டப்பட்டு நீதிபதிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதால், சென்னை நகரில் பணியாற்றும் அனைத்து நீதிபதிகள், மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டுகளுக்கு வீட்டு வசதி கிடைத்துவிடும்.

இந்த வீடுகள் தவிர, நீதிமன்ற கட்டடப் பகுதியில் வழக்குறைஞர்களுக்கான அறைகள் கட்டும் திட்டமும் நிறைவேற்றப்படவிருக்கிறது. அங்குப் பத்து இலட்சம் ரூபாய் செலவில் நாற்பது அறைகள் கட்டப்படும்.

எழும்பூர் நீதிமன்றம் இயங்கி வரும் இடத்தில் புதிய பல மாடி நீதிமன்றக் கட்டடம் ஒன்றும் கட்டப்படும். இந்தக் கட்டடத்தில் 12 நீதிமன்றங்கள் செயல்பட வசதிகள் செய்யப்படுவதுடன், அந்தக் கட்டடத்தில் வழக்குரைஞர்கள் தங்குமிடம், பெண் வழக்குரைஞர்களுக்குத் தனி இடம், நூலகம், கழிவறைகள் உட்பட எல்லா வசதிகளும் செய்து தரப்படவிருக்கின்றன.

இது தவிர வருவாய்த் துறையில் பணியாற்றும் 769 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு மொத்தம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது....

சென்னை அண்ணா சாலையில் 'இந்து' பத்திரிகை அலுவலகத்திற்கு எதிரிலும், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு எதிரிலும் இரண்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்ணா சாலையில் அமைக்கப்பட்டு உள்ள சுரங்கப் பாதை 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு எதிரே கட்டப்பட்டுள்ள சுரங்கப் பாதை 13 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ளன.

சென்னையில் மேலும் 7 சுரங்கப் பாதைகள் அமைக்கப்படவிருக்கின்றன. அண்ணா சாலையில் எல்.ஐ.சி.க்கு எதிரில் 9 இலட்சம் ரூபாய் செலவிலும், கிண்டி ரயில் நிலையத்துக்கு எதிரில் பதினைந்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் தண்டையார்ப்பேட்டை தொற்றுநோய் மருத்துவ மனைக்கு எதிரே பத்து இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் அமையவிருக்கும் சுரங்கப் பாதைகளின் வேலைகள் வரும் ஜனவரியில் துவங்கும்.

சஃபையர் தியேட்டர் எதிரிலும், சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு அருகே வால்டாக்ஸ் சாலையிலும் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைகள் டிசம்பர் மாதக் கடைசியிலும், வடக்குக் கடற்கரைச் சாலையிலும், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிக்கு எதிரிலும் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைகள் ஜனவரியிலும் துவங்கும். இந்தச் சுரங்கப் பாதைகள் எல்லாம் உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டவை.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் சுரங்கப் பாதைகளில் மழை நீர் தேங்காமல் இருக்க புதிய புதிய உத்திகள் கையாளப்பட்டுள்ளன. சுரங்கப் பாதைகளில் கடைகள் போடுவது, பிச்சைக்காரர்கள் தங்குவது போன்ற காரியங்களைத் தீவிரமாகத் தடுப்பது பற்றி அரசு யோசித்து வருகிறது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் அடுத்த ஆண்டு இறுதிக்குள்ளாக முடிவடைந்துவிடும். முதல் கட்டமாக ஒரு நடைபாதையும், புறநகர் ரயில்வே போக்குவரத்துக்காக இரண்டு ரயில்வே லைன்களும் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்துக்காக மிருகக்காட்சிச் சாலையின் ஒரு பகுதி எஸ்.ஐ.ஏ.ஏ. திடல் மூர் மார்க்கெட் ஆகிய இடங்கள் அடங்கிய 42 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்க எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன.

சென்னைக்கும் கும்மிடிப்பூண்டிக்கும் இடையே மின்சார ரயில் பாதையமைக்கும் திட்டம் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடைந்துவிடும். அதைப்போல் சென்னை திருவள்ளூர் மின்சார ரயில் பாதை அடுத்த ஜூன் மாதம் முடிவடையும்.

## செங்கை மாவட்டத்தில் . . . .

செங்கற்பட்டு மாவட்டம் உணவு விஷயத்தில் என்றைக்குமே தன்னிறைவு

பெற்ற மாவட்டமாக இருப்பதுடன், உற்பத்தியிலும் மற்ற மாவட்டங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

இவ்வாண்டு 6 இலட்சத்து 3 ஆயிரத்து 846 ஏக்கர்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 639 ஏக்கர்களில் உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தகுந்த நேரத்தில் மழை பெய்து வருவதாலும், தேவையான உரங்கள் கையிருப்பில் இருப்பதாலும், இவ்வாண்டு நல்ல மகசூலை எதிர்பார்க்கலாம் எனக் கூறப்படுகிறது.

சர்வ தேச சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தை மேலும் மேலும் வளர்த்திட பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மீனவர் குடிசைகளும் மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் விடுதியின் சில பகுதிகளும் கடல் அரிப்பினால் சேதமடைகின்றன. மேலும், சேதமடையாமல் இருக்கும் பொருட்டு, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் மத்திய பொதுப் பணித் துறை தடுப்புச் சுவர் கட்டத் திட்டமிட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொன்றும் சுமார் 26 ஆயிரம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய குளியல் அறை மற்றும் கழிவு அறைகள், கடற்கரை மற்றும் ஐந்து ரதங்கள் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன. நவீன மின் விளக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றத்திலும் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

---

# மானா மதுரையில் வரவேற்பு முகாம்

மண்டபத்தில் உள்ள வரவேற்பு முகாம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர், மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுச் செல்லும் வரை, தற்காலிகமாகத் தங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பாகும். இந்த முகாமிலுள்ள வீடுகள் முதலில் இலங்கை அரசால் தொற்றுநோய் ஒதுக்கிட முகாமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தவை. 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் வாங்கப்பட்டன.

மண்டபம் முகாமிலுள்ள வீடுகள் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடங்களாக இருப்பதாலும், தற்போது அங்கு நீண்ட காலமாக உபயோகத்தில் இருந்து வரும் கழிவு நீர், சாக்கடைக் குழாய்களை மாற்றிவிட்டு புதிதாகக் குடிதண்ணீர் வசதியும், கழிவு நீர் சாக்கடைக்குழாய்களையும் அமைப்பது அவசியமெனக் கண்டறியப்பட்டது.

ஆனல், ரூ. 40 இலட்சம், அளவிற்கு மிகப்பெரும் செலவில் குடிதண்ணீர் வசதி மற்றும் கழிவு நீர் சாக்கடைக்குழாய்களை மாற்றியமைக்கும் திட்டத்திற்குப் பதிலாக, இந்த மண்டபம் முகாமையே ஒரு புது இடத்திற்கு மாற்றுவது எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இராமநாதபுரம் மாவட்டம் மானமதுரை உப வட்டம் கே. கே. பள்ளம் கிராமத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான 25 ஏக்கர் தரிசு நிலத்தில், மேற்படி முகாமைப் புதிதாகக் கட்ட தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப் புதிய வரவேற்பு முகாம், 500 குடும்பங்களுக்கு வீடுகளும், மற்றும் அலுவலகம், மருத்துவமனை, பண்டகசாலை முதலிய கட்டடங்கள் உட்பட ரூ. 37.23 இலட்சம் செலவில் அமைப்பதற்கு மத்திய அரசுக்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு அனுமதி வந்தவுடன் மானமதுரையில் புதிய வரவேற்பு முகாம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்.

## தாயகம் திரும்பியோர்க்கு....

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் அதாவது டான்டீ (TANTEA) நிறுவனத்தின் மூலம் ரூ. 674.03 லட்சம் செலவில் 3750 ஏக்கர் பரப்பில் 1875 குடும்பங்களை (3750 நபர்கள்) குடியமர்த்தும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. இதுவரை 1585 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

மேலும், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள ஜன்மம் நிலத்தில் சுமார் 4000 ஏக்கர் நிலம் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் ரூ. 389 இலட்சம் செலவில் 1500 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிட்டு 750 குடும்பங்களை (1500 நபர்கள்) குடியமர்த்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 2500 ஏக்கர் நிலத்தில் ரூ. 552.17 இலட்சம் செலவில் 1250 குடும்பங்களைக் (2500 நபர்கள்) குடியமர்த்தும் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆக, மேற்படி இரண்டு திட்டங்களின் கீழ் 2000 குடும்பங்களை (4000 நபர்கள்) குடியமர்த்துவதன் மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு பெருமளவில் தேயிலைத் தோட்டக் கழகத்தில் வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டம் செயல்படவிருக்கிறது.

மேலும், நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் நிலங்களை பட்டா உறுதி செய்தல் ( Settlement ) சம்பந்தமாக, உச்சநீதி மன்றத்தில் இருந்து வரும் தடுப்பு ஆணை நீங்கி அவ்வப்பொழுது கிடைக்கும் நிலங்களையும் தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலம் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களைக் குடியமர்த்துவதற்கு கொடுக்கப்படும்.



வண்ணமயம்
வண்ணமயமான பருத்திப்
பட்டாடைகள் குவிந்துள்ளன
உங்கள் குடும்பத் தேவை
யனைத்திற்கும் கோ-ஆப்டெக்ஸ்
துணிகளையே தேர்ந்தெடுங்கள்.
புடவைகள் ● ஷர்ட்டிங்குகள் ●
● வேட்டிகள் ● ரெடிமேடுகள்
லுங்கிகள் ● ஜனதா புடவைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

# வேகமாய் வளரும் மதுரை மாநகர்

மதுரை மாநகரின் சீரமைப்புக்காகப் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் பெருக்கத்திலும், பரப்பளவிலும் மதுரை நகரம் வேகமாக வளர்ச்சி அடைந்து இருக்கிறது.

மதுரை நகரை நவீனமயமாக்கப் பெரும் திட்டம் ஒன்று திட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டமாகும். இதை நிறைவேற்ற 7 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவாகும். இத்திட்டத்திற்கு மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் சமமாக நிதி உதவி அளிக்கின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய பேருந்து நிலையம் முன்பாக பல்பொருள் அங்காடி ஒன்று 55 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். கார்கள் நிறுத்துவதற்கு வசதி செய்து தரப்படும். ஓராயிரம் பேர் அமரக்கூடிய கலையரங்கு ஒன்றும் இங்குக் கட்டப்படும்.

எல்லிஸ் நகரில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு உதவுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, சீரமைத்து ஆயிரம் வீட்டடி மனைகள் கொடுக்கப்படும். பாதாளச் சாக்கடை வசதி இல்லாத இஸ்மாயில்புரம் பகுதியில் 12 இலட்சம் ரூபாய் செலவில் பாதாளச் சாக்கடை வசதி செய்து கொடுக்கப்படும். நகரில் பல பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். இதற்காக மாநகராட்சி 45 இலட்சம் ரூபாய் செலவிடவிருக்கிறது.

பொன்னேரி பகுதியில் வர்த்தக மையம் ஒன்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே இரண்டாவது பேருந்து நிலையமும், ஒரு திருமண மண்டபமும் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்படவிருக்கின்றன.

மதுரை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்லாற்றிலிருந்து மதுரைக்குக் குடிநீர் கொண்டுவருவதற்குக் கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதற்கிடையே சோழவந்தான், மணலூர் ஆகிய இடங்களில் வைகை ஆற்றுப் படுகையில் கிணறுகள் தோண்டி, கிடைக்கும் தண்ணீரைக் குழாய்கள் மூலம், மதுரைக்குக் கொண்டு வருவதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்படும்.

குடிசைப் பகுதிகளில் குடிநீர் வசதி செய்து தருவதற்காக இதுவரை 49 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 16 குழாய்க் கிணறுகள் விரைவில் இந்தப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.

விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு வசதி செய்து கொடுக்கப்படும் பல பழுதடைந்த சாலைகள் செப்பனிடப்படும். புதிதாகப் பல பொதுக்கழிப்பிடங்களும், குளியல் அறைகளும் கட்டிக் கொடுக்கப்படும்.

# வாழை முடிக்கொத்து நோய்





மலை வாழை ஒரு நிரந்தரப் பயிராக பழனி, சிறுமலைப் பகுதிகளில் சுமார் 35,000 ஏக்கரில் மானாவாரியாகத் தனிப் பயிர் அல்லது காப்பியுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்யப்படுகிறது.

இது மிகவும் விரும்பப்படும் ஒரு ரகமாகும். ஏனென்றால் இது நீண்ட தூரப் பயணத்துக்கு ஏற்றது. ஒரு ஆண்டிற்கு சுமார் 1.75 இலட்சம் டன் பழங்கள் உற்பத்தியாகிறது. அதன் மதிப்பு 5.5 அல்லது 6 கோடி ரூபாயாகும். தவிர இப்பயிர் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட மக்களுக்குச் சாகுபடியிலும், வியாபாரத்திலும் வேலை வாய்ப்பு அளிக்கிறது. இவ்வளவு பெரிய வாழைத் தொழிலில் அண்மைக் காலமாக முடிக்கொத்து நோய் என்ற நோயின் பாதிப்பால், சிறு விவசாயிகளின் பொருளாதாரம் சிதறுண்டு போகவும் உற்பத்தி மிகவும் குறையவும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

1-10-1976 முதல் மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்நோயைக் கட்டுப்படுத்த ஒரு திட்டம் மத்திய அரசு உதவியுடன் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அத்திட்டத்தில் சிபாரிசு செய்யப்படும் தடுப்பு நடவடிக்கைகளாவன:

1. நோய் பாதிக்கப்பட்ட வாழைகளை அகற்றுதல்.

2. நல்ல மரங்களுக்கு 21 நாள் இடைவெளியில் பூச்சி மருந்து தெளித்தல்.

இதில், நோயுள்ள மரங்களை அகற்றுதல் பிரதானமானது. இதற்குச் சரியான முறை முதலில் குருத்தில் உள்ள அசுவினிப் பூச்சிகளைக் கொல்ல குருத்தில் மண்ணெண்ணெய் ஊற்றிவிட்டு, பிறகு 24 மணிநேரம் கழித்து மரத்தை வெட்டுதலாகும். மண்ணெண்ணெய் ஊற்றாமல், மரத்தை மட்டும் வெட்டினால், சில இடுக்கிலுள்ள அசுவினிப் பூச்சிகள் பறந்து சென்று நோயைப் பரப்பிவிடும்.

தற்பொழுது இதைச் செய்ய மரத்தின் உச்சியை அடைய ஏணி உபயோகப்படுத்தப்பட்டு மண்ணெண்ணெய் ஊற்றப்படுகிறது. துரதிருஷ்டவசமாக இவ்வாறு செய்வது மலைப் பிரதேசத்தில் கஷ்டமானது, அபாயகரமானது, ஏனெனில் நிலங்கள் மிகச் சரிவாக இருக்கின்றன. தவிர வாழை மரங்களும் மிக உயரமாக உள்ளன. இதைச் செய்ய 2 ஆட்களும் ஒரு பையனும் தேவையாக உள்ளது. இதனால் விவசாயிகள், நோய் வாழைக்கு மண்ணெண்ணெய் ஊற்றத் தயங்குகிறார்கள். இது இத்திட்டத்தில் ஒரு பெரிய இடையூறாக உள்ளது.

புதிய முறை:

ஏணிவைத்து ஊற்றும் அவசியத்தை மாற்றி, இலகுவாக மண்ணெண்ணெய் தரையிலிருந்தே ஊற்ற ஒரு புதிய முறை வகுக்கப்பட்டுள்ளது. ஒரு நாளில் 2 ஏக்கர் பரப்பில் இவ்வாறு செய்ய ஓர் ஆளும், ஒரு பையனும் மட்டும் போதும். ஒரு வடிவ குச்சி, ஒரு துளையிடப்பட்ட டப்பா, மெல்லிய கம்பி, தேவையான நூல் இவைதான் இம்முறைக்குத் தேவையான பொருட்கள். இவற்றிற்குச் செலவு ஒன்றும் இருக்காது.

மேற்படி பொருட்களை வைத்துப் புதிய சாதனத்தைத் தயாரித்துக் கீழ்க்கண்ட படத்தில் கண்டபடி, தரையிலிருந்து டப்பாவில் மண்ணெண்ணெய் ஊற்றிவிடலாம். குச்சியை மேலே உயர்த்தி வாழைக் குருத்தின் மேல் கம்பியை இழுத்து டப்பாவைச் சாய்த்து மண்ணெண்ணெய்யை ஊற்றிவிடலாம்.

இப்புதிய சாதனத்தின் உதவியால் மண்ணெண்ணெய் ஊற்றுவது எளிதாகியுள்ளது. தவிர மலையில் வேலையாட்கள் கிடைக்காத நிலையில் இப்புதிய முறை உபயோகமாக உள்ளது.

கே. மனோகரன், பி.எஸ்சி.,

கே. வி. சீனிவாசன், பி.எஸ்சி.,

---

# சம்பா மற்றும் தாளடி நெல் நடவுவயல் கட்டுக்கோப்பு பயிர் பாதுகாப்பு.

ஆர். பட்டாபிராமன்,

துணை வேளாண்மை இயக்குநர், திண்டிவனம்.

நெல் நாற்றுக்களை (100 மி. லிட்டர் டர்ஸ்பான் மருந்து 500 கிராம் யூரியா 50 லிட்டர் நீர்) டர்ஸ்பான் கரைசலில் 20 நிமிடம் வேர்ப் பாகம் நனையுமாறு வைத்துப் பிறகு நட வேண்டும்.

நடவு நட்ட 10ஆம் நாள் கார்ப்போபியூரான் 3 சதவிதம் ஜீ மருந்து 13.3 கிலோகிராமை 40 கிலோ மணலுடன் நன்றாகக் கலந்து வேர்ப் பாகத்தில் அப்ளிகேட்டரின் உதவியால் வைக்கவும். (அல்லது) நடவு வயலில் 2.5 செ.மீ. நீரைத் தேக்கி அவற்றில் 26.6 கிலோ கார்போபியூரான் 3 சத ஜி. மருந்தை நட்ட 10ஆம் நாள் தூவவும், மூன்று நாட்கள் வரை தண்ணீர் தொடர்ந்து கட்டிவர வேண்டும்.



குறிப்பு : டர்ஸ்பான் மருந்தில் நாற்றுக்களைத் துவைத்து நடாத சமயங்களில் மட்டும் இம்முறையைப் பின்பற்ற வேண்டும்.

நட்ட 20ஆம் நாள் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு மருந்தைத் தெளிக்க வேண்டும்.

| | சத இ.சி. | மி.லி. |
|---|---|---|
| மிதைல் பாரதியான் | 50 | 200 |
| எண்டோசல்பான் | 35 | 300 |
| பெனிட்ரோதயான் | 50 | 250 |
| பாஸ்போமிடான் | 100 | 110 |
| பென்தயான் | 100 | 200 |
| பாஸலோன் | 35 | 600 |
| குயினல்பாஸ் | 25 | 300 |

# குளிர்கால எள் சாகுபடி

**ஆர். பட்டாபிராமன்**

**துணை வேளாண்மை இயக்குநர், திண்டிவனம்.**

தமிழ்நாட்டில் பயிராகும் எண்ணெய் வித்துக்களில் மணிலாவிற்கு அடுத்துள்ள முக்கியமானது. நமக்குத் தேவையான எள் முழுவதும் நம் மாநிலத்தில் உற்பத்தியாவதில்லை. ஆண்டுதோறும் சுமார் 3 இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படும் எள் பயிரிலிருந்து 40,000 டன் எள் மாத்திரமே, இம்மாநிலத்தில் கிடைக்கின்றது. நமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள, எள் பெருமளவில் ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து ஆண்டு தோறும் இறக்குமதி செய்யப்படுகிறது.

குறுகியகாலப் பயிரான எள் சாகுபடி செய்வது சிரமம் இல்லாதது. சாகுபடிக்கு ஆகும் செலவும் குறைந்ததே. தனிப் பயிராகவும், மற்றப் பயிர்களுடனும், பலதரப்பட்ட நிலங்களில் சாகுபடி செய்யலாம்.

மானாவாரி மணிலாவிற்குப் பின் இரண்டாம் புஞ்சைப் பயிராகக் குளிர்காலத்தில் பயிராக்க மிகவும் ஏற்றது. நஞ்சை நிலங்களில் நெல் அறுவடை செய்த பின் கோடைக் காலத்தில் இறவைப் பயிராகச் சாகுபடி செய்யலாம். இறைவைப் பயிருக்குத் தேவைப்படும் நீர் வசதியும் அதிகமல்ல. நம் மாநிலத்தில் மானாவாரிப் பயிராக, மணிலா சுமார் 20 இலட்சம் ஏக்கரில் சாகுபடியாகிறது. இதில் பெரும்பகுதியில் குளிர் காலத்தில் சிரமம் ஏதுமில்லாமல், எள் சாகுபடி செய்யலாம். இதேபோல் மற்ற புஞ்சைப் பயிர்களுக்குப் பின்னும் எள் சாகுபடி செய்ய ஏற்றது. எனவே, எள் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்க வாய்ப்புள்ளது.

பருவகால வேறுபாடுகளால் எள் அதிகம் பாதிக்கப்படும். பெருவாரியான எள் இரகங்கள் சீராக எல்லாப் பருவத்திலும் பலன் அளிப்பதில்லை. ஆகையால் பருவத்திற்கு ஏற்ற இரகங்களைத் தேர்ந்தெடுப்பது மிக அவசியம்.

குளிர் காலத்தில் எள் அதிக அளவில் தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சை முதலிய மாவட்டங்களில் பயிராகிறது. திண்டிவனம் எண்ணெய்வித்துப் பரிசோதனை நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள திண்டிவனம்-2, திண்டிவனம்-3, திண்டிவனம்-5, எள் இரகம் குளிர்காலச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது.

இவற்றில் திண்டிவனம்-2 என்ற இரகம் குளிர்காலத்தில் மட்டும் சாகுபடி செய்ய ஏற்றது. மற்ற பட்டங்களில் சரியாகப் பலனளிக்காது. இதன் விதைகள் மங்கிய வெண்மை நிறம் உள்ளவை. இது நாக்பூர் வெள்ளை எள் இரகத்தையும், சாத்தூர் தினுசையும், கரு ஒட்டு மூலம் சேர்த்து உண்டாக்கப்பட்ட இரகம். இதன் 6, 8 அறைகளுடன் உருண்டையாக இருக்கும். முற்றிய காய்கள் அதிகம் வெடித்துச் சேதம் ஏற்படாது. எண்பத்தைந்து நாட்களில் பலனளிக்கும். ஒரு ஏக்கரிலிருந்து, 150 கிலோ மகசூல் கிடைக்கும்.

திண்டிவனம் 3 என்ற இரகம் உள்நாட்டு இரகம் ஒனறை, மலபார் காட்டு எள் தினுசுடன் இனச்சேர்க்கை மூலம் சேர்த்து உண்டாக்கப்பட்டது. குளிர் காலத்தில் மானாவாரிப் பயிராகவும், கோடையில் இறைவைப் பயிராகவும் பயிர் செய்ய ஏற்றது. கொண்டைப்புழு, வேர் அழுகல் நோய் முதலியவற்றால் அதிகம் பாதிக்கப்படாதது. குளிர்காலத்தில் ஏக்கருக்கு 150 கிலோ மகசூல் தரவல்லது. இறைவைப் பயிராகக் கோடையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 300 கிலோ மகசூலளிக்கும்.

திண்டிவனம் 5 என்ற இரகம் ஸ்ரீவில்லிப்புத்தூர் நாட்டு ரகத்திலிருந்து தனிச்செடி தேர்வு மூலம் உண்டாக்கப்பட்டது. இதன் வயது 75-80 நாட்கள். மானாவாரிக்கும் , குளிர்காலத்திற்கு ஏற்றது. மானாவாரியில் ஏக்கருக்கு 160-170 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. இந்த மூன்று இரகங்களின் விதைகளிலும் எண்ணெய்ச் சத்து முறையே 52, 52, 53:8 சதம் உள்ளது.

வடிகால் வசதியுள்ள இரு மண்பாடான நிலம் எள் சாகுபடிக்கு ஏற்றது. நீர்தேங்கும் இடங்களிலும், அமில நிலங்களிலும் எள் சரியாக வளராது. விதைப்பதற்கு முன், நன்கு புழுதியாகும்படி நிலத்தை உழுது சமன்படுத்த வேண்டும். பொதுவாக விவசாயிகள் எள் பயிருக்குக் குறிப்பாக மானாவாரி சாகுபடியில் உரம் சீராக அளிப்பதில்லை. ஆனால், மற்ற பயிர்களைப் போல எள் பயிருக்கும் போதுமான உரம் அளிக்கவேண்டும். மற்ற பயிர்களைவிட எள் நிலத்திலிருந்து அதிகப்படியான சத்துப் பொருட்களை எடுத்துக் கொள்ள கூடியது.

மானாவாரி சாகுபடியில் எள் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 300 கிலோ தொழு உரத்துடன் 9 கிலோ தழைச்சத்தும், 5 கிலோ மணிச்சத்தும், 5 கிலோ சாம்பல் சத்தும் தரக்கூடிய இரசாயன உரங்களை அடி உரமாகப் போட வேண்டும். நன்கு மட்கிய 300 கிலோ தொழு உரத்தில் பரிந்துரை செய்யும், மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களைப் பதமான ஈரமுள்ள தொழு உரத்தில் நன்கு கலந்து 30 நாட்கள் மூடி வைத்திருந்து பிறகு வயலில் இடவும். வயலில் இடும்பொழுது, பரிந்துரை செய்யும் தழைச்சத்து உரத்துடன் கலந்து தூவி உழுது மண்ணில் கலந்து விடவும் இந்த விகிதத்தில் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 45 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியாவும், 32 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 9 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசும் தேவை.

ஒரு ஏக்கர் விதைக்க 2 அல்லது 2.5 கிலோ தரமான எள் விதை தேவைப்படும். எள் விதைகள் மிகவும் சிறியவையாக இருப்பதால் விதையுடன் ஒன்று அல்லது இரண்டு பங்கு மணல் அல்லது

எள்ளில் 183 சதம் புரதச் சத்தும், 43.3 சதம் கொழுப்பும், 25.2 சதம் மாவுப்பொருளும், மேலும் தாது உப்புக்கள், கால்சியம், பாஸ்பரம், இரும்பு போன்ற சத்துப் பொருட்களும், வைட்டமின் ஏ-யும், பி-யும் அதிக அளவில் உள்ளன. எள் பிண்ணாக்கில் 13 சதம் கொழுப்புச் சத்தும், 40 சதம் புரதச் சத்தும், 26 சதம் மாவுச்சத்தும், 9 சதம் தாது உப்பும் உள்ளன. பிண்ணாக்கு நல்ல கால்நடைத் தீவனமாகும்.

நடக்கும் குளிர்காலப் பட்டத்தில், விவசாயப் பெருமக்கள் எங்கெல்லாம் எள் விதைத்துப் பயிர் செய்ய வாய்ப்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் எள் சாகுபடி செய்ய முன்வர வேண்டும்.

அதிக மகசூல் குளிர் காலத்தில் பெற, திண்டிவனம் 2, 3 அல்லது 5 என்ற இரகங்களைப் பயிரிடலாம். நிலம் நல்ல வடிகால் வசதியுடன் இருக்க வேண்டும். நன்கு பண்படுத்தப்பட்ட நிலத்தில் அடியுரமாக ஏக்கருக்கு 300 கிலோ தொழு உரமும், தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து முறையே 9 கிலோ, 5 கிலோ, 5 கிலோ என்கிற அளவில் போடவும்.

ஒரு ஏக்கருக்கு 2லிருந்து 2.5 கிலோ விதை தேவை. விதைத்த 15 நாட்களில் ஒரு முறையும், 25 நாட்களில் ஒரு முறையும், அதிகமாக உள்ள செடிகளைக் களைத்துவிட வேண்டும். சீரான வளர்ச்சியுடன் இருப்பின் 25 நாட்களில் செடிக்குச்செடி 20 செ.மீ. இடைவெளி இருக்கும்படி களைத்து விடவும். கொண்டைப்புழு இலைப்புள்ளி நோய், பூவிலை நோய் முதலியவற்றால் சேதம் ஏற்படாமல் தடுக்கத் தக்க மருந்துகளைச் சரியான சமயத்தில் உபயோகிக்கவும். செடி நன்கு முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும்.

விவசாயப் பெருமக்கள் நல்ல முறையில் குளிர்கால எள் சாகுபடி செய்து சீரிய பலன் பெறலாம்!

## சென்னையில் உள்ள சாலைகளின் பெயர் மாற்றம்



சென்னையில் உள்ள "பாடி கார்ட் ரோடு" "பல்லவன் சாலை" என்று மாற்றி அழைக்கப்படும்.

இதே போல் சென்னை அண்ணா சாலையில் இருந்து மின்வாரிய செயலகத்திற்குச் செல்லும் "ஆர்மி குளோத்திங் பாக்டரி சாலை"யின் (Army Clothing Factory Road) பெயர் 'மின் வாரிய சாலை' (Electricity Avenue) என்று அழைக்கப்படும்.

இச்சாலைகளின் பெயர்களை மாற்றி அழைக்க மாநகராட்சிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.



## காணக்கிடைக்காத சிங்கவால் குரங்கு!

இறைவன் படைப்பில் எண்ணற்ற அரிய உயிரினங்கள்; அவற்றில் ஒன்றுதான் எளிதில் காணக்கிடைக்காத சிங்கவால் குரங்கு!

அகில உலகிலும் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில்தான், இந்த அபூர்வ குரங்கினம் காணப் படுகின்றது. இவ்வினத்தின் பாதுகாப்பு முக்கியத்துவம் குறித்து நம் நாட்டோரும் வெளிநாட்டோரும் அறிந்து கொள்ளும் பொருட்டும், சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டும் அஞ்சல் தந்தித் துறையினர் அண்மையில் சிங்கவால் குரங்கின் உருவம் அச்சிடப்பட்ட உறைகளில் சிறப்பு முத்திரைகளைப் பதித்து நெல்லையிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ள களக்காடு அஞ்சல் நிலையத்தில் வெளியிட்டுள்ளனர்.

விழாவையொட்டி, அஞ்சல் தலைக் கண்காட்சியும் சிறப்பு விற்பனையும், அங்குள்ள அரசு மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்றது. வனத்துறையினர் உயிருடனிருந்த இரண்டு சிங்கவால் குரங்குக் குட்டிகளையும், கண்காட்சியில் வைத்திருந்ததை அனைவரும் பார்த்துப் பரவசமடைந்தனர்.



சாம்பல் கலந்து விதைத்தால், விதைப்பு சீராக இருக்கும். விதை மூலம் பரவும். பூஞ்சாள நோய்களான வேர் அழுகல் நோய், வாடல் நோய், இலைப்புள்ளி நோய் முதலியவை வராமல் தடுக்க காப்டான் அல்லது தைரம் என்னும் பூஞ்சாள மருந்தை விதையுடன் கலந்து விதைக்க வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் மருந்து தேவைப்படும். குளிர் காலத்தில் மானாவாரிப் பயிராக எள் விதைக்க ஏற்ற பட்டம் ஐப்பசி-கார்த்திகைப் பட்டமாகும்.

விதைக்கும்போது, விதைகள் நிலத்தில் மிக ஆழமாகப் புதைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆழமாகப் புதையுண்ட விதைகள் நன்கு முளைப்பதில்லை. விதை தெளித்த பிறகு லேசாக மரக்கலப்பையால் உழுது, விதைகளைமூடவேண்டும். விதைகள் முளைத்தவுடன் நெருக்கமாகக் காணப்படும். விதைத்து 35 நாட்களில் செடிகள் பூக்க ஆரம்பிக்கும். இந்தச் சமயம் நிலத்தில் போதுமான ஈரப்பசை இருப்பது அவசியம். இல்லாவிட்டால் செடிகள் நன்கு களைத்துப் பலனளிக்காது. ஆகையால், தேவைப்பட்டால் இறைவை வசதியுள்ள இடங்களில் இத்தருணத்தில் ஒருமுறை நன்கு நீர்ப்பாய்ச்சினால் நல்ல பலன் கிடைக்கும். நனையும் கந்தகத் தூள் 1.2 கிலோவை ஏக்கருக்கு 300 லிட்டர் தண்ணீரில் கலந்து 35-வது, 50-வது நாட்களில் தெளித்தால், சாம்பல் நோயைத் தடுப்பதுடன் மகசூலும் கணிசமாக அதிகரிக்கிறது.

திண்டிவனம் 2, 3, 5, இரகங்கள் 85 நாட்களில் அறுவடைக்கு வரும். நன்கு முதிர்ச்சி அடைந்த செடிகளின் இலைகள், தண்டுபாகம், காய்கள் முதலியன மஞ்சள் நிறமாக இருக்கும். இலைகளும் வேகமாக உதிர ஆரம்பிக்கும். இது அறுவடை செய்வதற்கு ஏற்ற சமயம். இதற்குப் பின் அறுவடை செய்வதில் காலங்கடத்தினால், காய்கள் வெடித்து விதைகள் சேதமடையும். போதுமான முதிர்ச்சி அடைந்தவுடன் செடிகளை அறுவடை செய்ய வேண்டும். செடி முற்றுவதற்கு முன் அறுவடை செய்தாலும் காலங்கடந்து அறுவடை செய்தாலும் விதைகள் பழுதடைந்து மகசூல் பாதிக்கப்படும். வெட்டி எடுத்துச் செடிகளை அடிப்பாகம் வெளிப்புறம் இருக்குமாறு வைத்து, வட்ட வடிவமான குவியலாக அடுக்க வேண்டும். இவ்வாறு 5-6 நாட்கள் வைத்திருந்தபின், குவியலைக் கலைத்து செடிகளைப் பரப்பிவிட வேண்டும். ஒன்றிரண்டு நாட்கள் வெய்யிலில் காய்ந்தபின், காய்கள் வெடித்து விதைகள்விழுந்துவிடும், இதற்குப் பின் செடிகளைத் தட்டி, விதைகள், பூராவும் பிரித்துச் சேகரிக்க வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட விதைகளை நன்கு வெய்யிலில் உலர்த்தி பின் சுத்தப்படுத்த வேண்டும். சுத்தப்படுத்திச் சேமிக்கப்பட்டுள்ள விதைகளில், ஈரப்பசை 5 சதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எள் பயிரைத் தாக்கும் பூச்சிகளில், கொண்டைப்புழு மிக முக்கியமானது. பச்சை நிறமுடைய இப்புழுக்கள், செடி பூக்க ஆரம்பிக்குமுன்பிருந்து எல்லா நிலையிலும், செடிக்குச் சேதம் விளைவிக்கும். செடியின் இலைகளை இப்புழுககள் கூடு போலக்கட்டும். முதிர்ந்த செடிகளில் குருத்துக்களையும், தண்டுகளையும் துளைத்துச் சேதம் விளைவிக்கும். இதைக்கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 கிலோ டி.டி.டி 5 சதம் தூளைத் தூவ வேண்டும். தயோடான் அல்லது என்டிரினை ஏக்கருக்கு 300 லிட்டர் வீதம் 300 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலமும், இப்புழுவைக் கட்டுப்படுத்தலாம். இம்மருந்துகளை விதைத்த மூன்றாவது வாரத்திலிருந்து 20 நாட்கள் இடைவெளியில் புழு தோன்றுவதைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று முறை தெளிப்பது நல்ல பலன் தரும்.

எள்ளில் தோன்றும் நோய்களில், இலைப்புள்ளி நோயும் பூவிலைநோயும்முக்கியமானவை. இலைப்புள்ளி நோயால், இலைகளில் கருஞ்சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றும். இலைக் கருகும். பூக்கள் மலர்வதும், காய்கள் பிடிப்பதும் பாதிக்கப்படும். விதையுடன் காப்டான் அல்லது தைராம் மருந்தை ஏற்கெனவே கூறியபடி, ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து விதைப்பது ஓரளவுக்கு இந்நோயைக் கட்டுப்படுத்தும். வளர்ந்த செடிகளில் நோய் பரவாமல் இருக்க 'ஜீனப்' என்ற மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மருந்து வீதம் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 300 லிட்டர் கரைசல் தேவைப்படும்.

பூவிலை நோய் கண்ட செடிகள் பலன் தரா. பூ பாகங்கள் இலைபோல் மாறிவிடுவதால், காய்கள் பிடிப்பதில்லை. நோய் தோன்றுவதற்கு முன் உண்டான காய்களையும் நோய் தோன்றிய பின், விதைகள் பாதிக்கப்படுகின்றன. செடிகளின் வளர்ச்சி குறைந்து, கிளைகள் அதிகமாகி சிறுத்து, இலைகளும், கிளைகளும் கொத்துக் கொத்தாகக் காணப்படும். வைரஸ் போன்ற நுண்ணுயிர்கயால் ஏற்படும் இந்நோயைக் கட்டுப்படுத்துவது சிரமம். நோய் தோன்றிய செடிகளைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இந்நோய்களைப் பரப்ப ஜேசிட் என்னும் தத்துப் பூச்சிகள் உதவுகின்றன. இவைகள் நோய்கண்டு செடியின் சாரை உறிஞ்சியபின், நோய் காணாத செடியின் சாரை எடுக்கும்போது நோய் பரவுகிறது. ஆகையால், இப்பூச்சியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோய் பரவாமல் ஓரளவு தடுக்கலாம். மெட்டாசிஸ்டாக்ஸ், ரோகார், சுமித்தியான் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஒரு ஏக்கருக்கு 300 மில்லிலிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் பரப்பும், தத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

### சேலம் மாவட்டத்தில் குளுகோஸ் தொழிற்சாலை!

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் அருகே பத்து இலட்சம் ரூபாய் செலவில் குளுகோஸ் தொழிற்சாலை அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. மரவள்ளிக்கிழங்கிலிருந்து குளுகோஸ் தயாரிக்கப்படும். இதற்குக் கல்பகனூரில் 7 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை அமைக்கப்படும். இதன் மூலம் 600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் முதன் முதலாக சேலத்தில் தொழிற்துறை சார்பில் பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் சுரங்கத் தாதுப்பொருள் இரசாயனக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்குத் தாதுப்பொருட்கள் தரம் குறித்து சிறுதொழிற்சாலைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.



# தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கம்பு சாகுபடி



தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 1.25 இலட்சம் ஏக்கரில் சென்ற ஆண்டு கம்பு பயிரிடப் பட்டது. இந்த ஆண்டு சுமார் 1.50 இலட்சம் ஏக்கருக்கும் மேலாக விவசாயிகள் கம்பு பயிரிட்டுள்ளது, வேளாண்மைத் துறையின் பெரிய முயற்சியாகும்.

முதன் முதலாக விவசாயிகள் நாட்டுக் கம்பு ரகங்களைத்தான் பயிரிட்டு வந்தார்கள். இதற்கு ஆகும் செலவு குறைவாக இருந் தாலும், மகசூலும் மூன்று அல் லது நான்கு மூட்டைகள் அதாவது 300 அல்லது 400 கிலோ மட்டுமே கிடைத்து வந்தது. நாட்டுக் கம்பு பயிரிடுவதானால் விவசாயி களுக்கு ரூ. 150 முதல் ரூ. 250 வரை ஏக்கருக்கு இலாபமாகக் கிடைத்து வந்தது.

இந்த அவல நிலையை மாற்ற விவசாயத் துறையினர் கடும் முயற்சி எடுத்தனர். கே. எம். 1, மற்றும் கே. எம். 2 என்னும் குடுமியாமலை ஒட்டுக் கம்பு ரகங் கள் விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்தப்பட்டன. இந்த கே.எம். 1, மற்றும் கே. எம். 2 கம்பு ரகங்கள் மானாவாரியாகவே 1,000 முதல் 1,200 கிலோ வரை ஒரு ஏக்கருக்கு மகசூல் தருபவை. இந்தக் கம்பு ரகத்திற்கு ரூ. 350 முதல் ரூ. 450 வரை சாகுபடிச் செலவு ஆகும். எனவே, இலாப மும் ஒரு ஏக்கருக்கு ரூ. 600க்கு மேல் கிடைக்கும்.

ஒட்டு வீரிய கம்பு தினுசுகளான கே. எம். 1 மற்றும் கே. எம். 2 ரகங்கள் வறட்சியையும் தாங்கி வளரக் கூடியவை. இறவையாக வும் பயிரிட உகந்தது. சுமார் 80 நாட்களில் ஏக்கருக்கு மானா வாரியாக 800 கிலோவுக்கும் மேலாக மகசூல் தர வல்லது. இதனால் விவசாயிகளுக்கு நிகர இலாபம் ரூ. 600-க்கு மேல் ஆகும்.

இந்த உயர் விளைச்சல் ,கத்தில் அமோக விளைச்சல் திறனைக் கண்டு 1978-79ஆம் ஆண்டு கூடு தல் பரப்பில் கம்பு விதை வினி யோகம் செய்யத் திட்டமிடப் பட்டு அதன்படியே இந்த ஆண்டு 1.40 ஏக்கரில் கம்பு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் வீரிய ஒட்டுக் கம்பு விதை வினியோகம் அதற்கு முந் தைய ஆண்டின் வினியோகத்தை விட பல மடங்கு ஆகும். விவ சாயத் துறையினரே 60,000 கிலோவுக்கும் மேலாகச் சென்ற ஆண்டு விதை வினியோகம் செய் துள்ளனர்.

இந்த ஆண்டு ஒட்டு வீரியக் கம்பு விதை வினியோகத்தைக் கூடுதலாகச் செய்யும் பொருட்டு 1,00,000 கிலோவுக்கும் மேலாக விதை வினியோகத் துறை மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து செயல்பட்டது பெருமைக் குரிய செய்தியாகும்.

மேலும், விவசாயிகளுக்கு நிரந் தரமாகவும் கூடுதல் மகசூலும், மேலும் பெருகவும் திட்டமிட்டு இந்த 1978-79 ஆண்டில் செயல் படுத்த வகை செய்து வருகிறது.

## இந்த ஆண்டு புதிய திட்டத்தில்..

இப்புதிய ஆராய்ச்சியின்படி கம்பு விதையை உப்பு நீரில் அதா வது 20 சதவீத வீரிய உப்புக் கரைசலில் போட்டு மிதக்கும் விதைகளை அப்புறப்படுத்து வதனால், தேன் அழுகல் நோயி னால் தாக்கப்பட்ட விதைகளை அறவே அழிக்க முடிகிறது. இதற் குச் சிரமம் அதிகம் இல்லை. சாதா ரண உப்பு ஒரு கிலோவை 5 லிட்டர் நீரில் கரைத்துக் கொண் டால் போதுமானதாகும். இந்தப் புதிய 20 சதவீத உப்புக் கரைச லில் கம்பு விதையைப் போட்டு விதை நேர்த்தி முறையைப் பரீட் சார்த்தமாக 10,000 ஏக்கரில் புகுத்தப்பட்டு ஓரளவு வெற்றி யும் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

இதைப்போன்று விதையைப் பெவிஸ்டன் என்னும் ஊடுருவி வேலை செய்யும் பூசணக்கொல்லி மருந்துடன் கலந்து விதைக்கவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் விளைவாகக் கம்புப் பயிருக்குக் குறைந்தது 40 நாட்களுக்கும் மேலாக எந்தவித மான நோயும் வராமல் பாது காப்புக் கொடுக்க வகை செய்யப் பட்டிருக்கிறது. இந்த முறையும் பரீட்சார்த்தமாக 500 ஏக்கரில் விவசாயிகளுக்கு விளக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது.

மானாவாரி கம்புப் பயிருக்கும் ஏக்கருக்கு 16 : 8 : 0 என்ற விகி தத்தில் 16 கிலோ தழைச் சத்து போடவும், 8 கிலோ மணிச்சத்தும் போட்டு பயிரிட எல்லா விவசாயி களும் இம்முறையைப் பின்பற்ற பரிந்துரை செய்யப்பட்டு பெரும் பான்மையாகக் கடைப்பிடித்த விவசாயிகள் சென்ற ஆண்டு 1,200 கிலோ மகசூல் கூட மானா வாரிக் கம்புப் பயிரில் பெற்றது மிகச் சிறப்பான செய்தியாகும். அந்த சிறப்பு நிலையைக் கண்ட விவசாயிகள் இந்த ஆண்டு பெரு மளவில் மானாவாரி கம்புப் பயி ருக்கும் பெருமளவில் உரமிட்டு கம்புப் பயிர் மிகவும் சிறப்பாகப் பயிரிடப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.



இவ்வாறு கம்புப் பயிரிடும் விவ சாயிகளுக்குப் பலவித ஆராய்ச்சி யுக்திகளும் சீரிய சாகுபடி முறை களையும் கடைப்பிடிக்கச் செய்து மானாவாரியாக கே. எம். 1 மற்றும் கே. எம். 2 பயிரிட்டு ஏக்கருக்கு 1,000 கிலோவுக்கும் மேலாக மகசூல் பெற்றிட தென் ஆர்க்காடு மாவட்ட விவசாயி கள் அதிக விளைச்சல் பெற் றிடவும், அதனால் அதிக இலா பம் கிடைத்திடவும் வகை செய் யப்பட்டுள்ளது.

—திரு ஆர். எத்திராசன்,
துணை வேளாண்மை இயக்குநர்,
கடலூர்.



# வேளாண்மை விளைபொருள்கள் தரம்பிரிப்பு

**எஸ். பி. சண்முகம்**
மாவட்ட வேளாண்மை அலுவலர் (விற்பனை)
மதுரை

**வி**ளை நிலமெல்லாம் பசுமை! அதனால் விவசாயிகளின் களமெல்லாம் நிறையக் கண்டோம். விரிவாக்கப் பணியாளர்கள் அனைவருக்குமே, தங்களின் பணியால் கழனி நிறையக்கண்டு களிப்புறுகின்றனர். அதனால் அதிக விளைவைக் கண்ட விவசாயிக்கு உள்ளத்திலோ கலக்கம். பெற்ற மகசூலை எப்படி விற்பது எங்கே விற்பது, என்ன விலைக்கு விற்பது என்றெல்லாம் கவலை குடி கொள்கிறது! இக்குறையை நீக்கவும், தான் உற்பத்தி செய்த விளைபொருளைத் தொழில் நுட்ப ரீதியில் தரம் பிரித்து நல்ல இலாப விலைக்கு விற்பதற்கு ஆலோசனையும், அறிவுரையையும் வழங்கும் பணியை வேளாண்மை விற்பனைத் துறை செய்து வருகிறது.

இத்துறையில், விவசாயிகளுக்குத் தங்களின் விளைபொருளை வியாபாரத்திற்கு அனுப்புவதற்கு முன், அப்பொருளின் ஈரம், பதர் முதலியவற்றின் சதவீதம் அறிந்து அதற்கான தர நிர்ணயத்தை விவசாயிக்குத் தெரிவித்தும் அந்தத் தரத்திற்குக் கிடைக்கக்கூடிய விலை விவரத்தையும் முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கும் மற்றும் கமிஷன் மண்டிகளுக்கும் விற்பனைக்கு வரும் விளை பொருட்களிலிருந்து மாதிரிகள் எடுத்து, அப்பொருள்களின் தரம் கணித்து, தரத்தைப் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும், நுகர்வோருக்கும் தரமான சுத்தமான, கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்ய 'அக்மார்க்' முறையில் தரம் பிரிக்கப்படுகிறது.

**தரம் பிரிப்பதால் ஏற்படும் நன்மைகள்:**

பொதுவாகத் தரம் பிரிப்பதால், உற்பத்தியாளர், உபயோகிப்பாளர் ஆகிய இருசாராருமே பயனடைவதுடன் அவர்களுக்குள் ஒருவித நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

உற்பத்தியாளர் தன்னுடைய பொருளின் தரத்தை முன்கூட்டியே அறிந்து கொள்வதால் அவருடைய பொருளுக்குரிய நியாயமான விலையை எவ்வித இடையூறுமின்றி அவரால் பெற முடிகிறது.

அவர் தன்னுடைய பொருளின் தன்மையை முழுவதுமாக உணர்ந்திருப்பதால் வாங்குவோரிடம் உறுதியுடன் பேரம் பேசி நியாயமான விலை பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

உபயோகிப்பவர்களைப் பெருமளவில் பாதிக்கும் கலப்படம் முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வியாபாரத்தில் தரம் பிரித்தல் மூலம் ஒரு பொருளுக்கு நிர்ணயிக்கப்படும் விலை நியாயமானதாகவும், பொருள் நிறைந்ததாகவும் அமைகிறது.

எனவே, தரம் பிரிப்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இந்திய நாடு முழுவதற்குமாக, மத்திய அரசு 1937-ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை இயற்றி அமலாக்கியுள்ளது. ''வேளாண்மை விளைபொருள் சட்டம் 1937'' என்பது இதன் பெயராகும். பற்பல விவசாயக் கால்நடைப் பொருள்களுக்கு, அதனதன் குண அம்சங்களுக்கேற்ப, தர நிர்ணய அளவுகளைத் தீர்மானிப்பதற்கு இச்சட்டம் மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது. அதில் தரக் குறியீடுகள், தரம் பிரித்துச் சிப்பம் செய்யப்பட்டு முத்திரை பதிப்பித்தல் ஆகியவற்றிற்கான விதிமுறைகளை வகுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் குறிப்பிடப்படும் தரங்களுக்கு ''அக்மார்க்'' தரங்கள் (அக்ரிகல்சுரல் மார்க்கெட்டிங்' என்பதன் சுருக்கம்) என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு தரம் பிரிக்கப்படும் பொருள்களுக்குத் தரத்திற்குத் தக்கவாறு அக்மார்க் முத்திரைச் சீட்டுக்களையும், தக்க தரக்குறியீட்டையும், அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அலுவலர்களால் வழங்கப்படுகிறது. இச்சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரம் மத்திய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்ககத்திற்கு (Directorate of Marketing & Insrection to the Government of India) வழங்கப்பட்டுள்ளது. இதன் தலைமை அலுவலர் வேளாண்மை விற்பனை ஆலோசகர் (Agricultural Marketing Adviser) ஆவார். மாநிலங்களில் இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட மாநில வேளாண்மை விற்பனைத் துறையுடன் ஒருங்கிணைந்த ஒத்துழைப்புடன் செயல் ஆக்கப்படுகிறது.

**தரம் பிரிப்பு வகைகள்:**

ஒவ்வொன்றின் உபயோகத்தைப் பொறுத்தும், குறிக்கோளைப் பொறுத்தும் தரம் பிரிப்பதை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**'அக்மார்க்' தரம் பிரிப்பு:**

(1) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் விளைபொருள்களுக்கு (2) உள் நாட்டிலேயே உபயோகப்படுத்தப்படும் விளைபொருள்களுக்கு, (3) உற்பத்தியாளர் மட்டத்தில் தரம் பிரிப்பது அல்லது வணிக முறைத் தரம் பிரிப்பு.

## 'அக்மார்க்' தரம் பிரிப்பு: (உள் நாட்டு உபயோகத்திற்கு)

இம்முறையில் உள்நாட்டில் உபயோகப்படுத்தப்படும் பொருள்களுக்கு அக்மார்க் முறையில், தரம் பிரிக்கப்படுகிறது. தானே விருப்பமுடன் முன்வரும் வியாபாரிகளுக்கு இம் முறையில் தரம் பிரித்துத் தரப்படுகிறது. உணவு எண்ணெய்களான நிலக் கடலை எண்ணெய், நல்லெண்ணெய், நெய், மசால், பொருள்கள், தேன் முதலியனவும் சென்ற ஆண்டு முதல் கடலை மாவு, சியக்காய்த்தூள் முதலியவைகளும் தரம் பிரித்துத் தரப்படுகின்றன.

மேலும், சில பொருட்களுக்கு மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாடு இல்லாமல் ''அக்மார்க்'' முறையில் தரம் பிரிக்கப்படுகின்றது. அவை, அரிசி, உருளைக் கிழங்கு, முட்டை, சாத்துக்குடி, மாம்பழம் போன்ற பழவகைகள், வெல்லம், மிளகாய் வத்தல், பருப்பு வகைகள் தரம் பிரித்துத் தரப்படுகின்றன.

இம்முறைப்படி, நெய், எண்ணெய் மற்றும் மசாலாப் பொருள்கள் போன்றவற்றைத் தரம் பிரித்து அவற்றின் குண அம்சங்களைப் பகுத்து ஆராய்ந்து தரக் குறியீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மதுரை மாவட்டத்திற்கு மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு 'அக்மார்க்' தரம் பிரிப்பு ஆய்வகம் இயங்கி வருகிறது. இவ்வாய்வகத்தில் அனுபவம் மிக்க முழு அளவு பயிற்சி பெற்ற துணை வேளாண்மை அலுவலர் (வேதியல்) பணிபுரிகிறார்.





அக்மார்க் தரம் பிரிக்கப்பட்ட பொருள்களுக்கு - அங்கீகரிக்கப்பட்ட பொருள்களுக்கு முத்திரை அல்லது லேபிள் கட்டணமும், தரம் பிரிப்புக் கட்டணமும் மிகக் குறைந்த அளவில் வசூலிக்கப்படுகிறது.

அக்மார்க் முறைப்படி கடந்த 1977-78 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அளவில் தரம் பிரிக்கப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

## வணிக முறை தரம் பிரிப்பு:

நுகர்வோருக்கும், வணிகருக்கும் பயன்படும் அக்மார்க் முறைத் தரம் பிரிப்பு அல்லாமல் விவசாயிகளும் பயனடையும் வகையில் இத் தரப் பிரிப்பு முன் சொன்னபடி விவசாயி உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குச் செய்யப்படுகிறது.

தானே முன்வரும் விவசாயிகளுக்குத் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு எந்தவிதக் கட்டணமும் இன்றி, கட்டாயமும் இன்றி விவசாயிகளின் சம்மதத்துடன் செய்யப்படுகின்றது. இத் தரம் பிரிப்பு முறை 1937-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சட்டத்திற்குட்பட்டதல்ல. இம் முறையின் சிறப்பான அம்சம், அது உற்பத்தியாளருக்கு தர உணர்வினை ஊட்டும் விதத்தில் விரிவாக்கப் பணியையும், கற்பிக்கும் பணியையும் செய்வதாகும். இம்முறையில் பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளர் ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், பணியாற்றி அங்கு வரும் விளை பொருள்களிலிருந்து மாதிரிகள் எடுத்து, வணிக முறையில் ஈரப்பதமானியின் மூலம் (Moisture Meter) ஈரப்பசை அறிந்தும், கல், மண், தூசி போன்ற அயல் பொருட்கள் பூச்சி, பூஞ்சாளம் தாக்கிக் கெட்டுப்போனவை, அதில் கலந்துள்ள இதர ரகங்களின் அளவு, முதிர்ச்சி அடையாதவற்றின் அளவு முதலிய பல வகையான குறைபாடுகளை கணக்கில் கொண்டு அதற்கேற்றவாறு தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்படி நெல், நிலக் கடலைப் பருப்பு, நிலக்கடலைக் காய், எள் விதைகள், மிளகாய் வத்தல், பருத்தி, கரும்பு, வெல்லம் முதலிய பொருள்களுக்குத் தரம் பிரிக்கப்படுகிறது.

கடந்த 1977-78ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அளவு தரம் பிரித்துச் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

மேற்சொன்ன அக்மார்க் தரம் பிரிப்பு மற்றும் வணிக முறை தரம் பிரிப்பு முறைகளைத் தவிர பருத்தி விவசாயிகள் பயனடையும் வகையில் மதுரை மாவட்ட தேனியை தலைமையிடமாகக் கொண்டு பருத்தி தரம் பிரிப்பு நிலையம் (Kapas Grading Centre) இயங்கி, பருத்திச் சாகுபடியாளர்களுக்கும், பருத்தி வாங்குவோருக்கும் ஒரு பாலமாக அமைந்து செயல்பட்டு வருகிறது. இம்முறைப்படி விற்பனைக்கு வரும் பருத்திகளிலிருந்து மாதிரிகள் எடுத்து நுட்பமாக கருவிகளைக் கொண்டு பருத்தியின் நிறம், சுத்தத் தன்மை, ஈரச் சதவீதம் போன்ற பல்வேறுபட்ட குண அம்சங்களைச் சோதித்து தரம் பிரிக்கப்படுகிறது. பின் அந்தந்தத் தரத்திற்கு ஏற்றவாறு தர நிர்ணய அட்டை (Grading Card) வழங்கப்படுகிறது. இந்தத் தர நிர்ணய அட்டையிலுள்ள விவரங்களை விவசாயியும், வியாபாரியும், அறிந்து, அப்பருத்தியின் தரத்தைக் கணக்கில் கொண்டு, விலை நிர்ணயம் செய்து வியாபாரி மேற்படி பருத்தியை வாங்க ஏதுவாகவும், தன்னுடைய பருத்தியின் தரத்திற்கான விலைதான் கிடைத்துள்ளது என விவசாயி மன நிம்மதியும், நம்பிக்கையும் ஏற்படவும் இந்நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையங்களில் பயிற்சியும், தேர்ந்த முன் அனுபவமும் பெற்ற துணை வேளாண்மை அலுவலர் (பருத்தி தரம் பிரித்தல்) ஒருவரும், இரண்டு பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 1977-78ஆம் ஆண்டில் தேனி பருத்தி தரம் பிரித்தல் நிலையத்தில் கீழ்க்கண்ட அளவு பருத்தி தரம் பிரித்துத் தரப்பட்டுள்ளது.

விவசாயிகள், வியாபாரிகள் அனைவரும் மேற்கூறிய திட்டங்களின் நோக்கத்தையும் அதனால் விவசாயியும், வியாபாரியும், உபயோகிப்போரும் பெறும் பயனை உணர்ந்து முழு அளவில் திட்டங்கள் வெற்றிபெற ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

# குழந்தைகள் காப்பகங்கள்



குழந்தைகளுக்குச் சுகாதாரம், உணவு பற்றி மட்டுமல்லாது, சமூகம் மற்றும் மன வளர்ச்சி ஆகிய எல்லா வளர்ச்சிக்கும் குழந்தைப்பருவம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என, குழந்தை வளர்ப்பு மற்றும் வளர்ச்சித்துறை வல்லுநர்கள் ஒருமித்த கருத்துக் கொண்டுள்ளனர்.

குழந்தைநலம் மற்றும் வளர்ச்சியிலும் முன்னோடிக் கல்வியில் குழந்தைகள் காப்பகங்களின் வெற்றிகரமான முக்கியத்துவமும், இளம் சிறார்களிடையே காணப்படும் அதிக மரணம், ஆரோக்கியமின்மை, சத்துணவுக் குறைவு ஆகியவற்றைப் போக்க, பள்ளி செல்லும் சிறுவர்களைப்போல, இளம் சிறுவர்களோடு தொடர்பு கொள்ள முடியாத நிலைமை, அதன் பணியும், பணிபுரியும் தாய்மார்களின் குழந்தைகளுக்குப் பகல் பாதுகாப்பு நிலையங்களாகவும் பயன்படும் குழந்தைகள் காப்பகங்களின் இன்றியமையாமை பற்றிய பரவலான விழிப்புணர்ச்சி காரணமாக, தமிழக அரசு குழந்தைகள் காப்பகத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

**குழந்தைகள் காப்பகங்கள்**

இம்மாநிலத்தின் 14 மாவட்டங்களிலும் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் பரவலாக நடைபெறும் 4083 குழந்தைகள் காப்பகங்கள் மூலம் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணரலாம். இத்திட்டம் இம்மாநிலத்தில் மூலை முடுக்குகளிலுள்ள கிராமப்புறங்களிலும், குக்கிராமங்களிலும், மலைப் பகுதிகளிலும், போக்குவரத்து வசதியற்ற பழங்குடிகள் வாழ் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

குழந்தைகள் காப்பகத் திட்டம், சமூக நலத்துறையினால் 1962-ல், 21 ஊராட்சி ஒன்றியங்களில் 747 குழந்தைகள் காப்பகங்களுடன் துவக்கப்பட்டது. அடுத்த மூன்றாண்டுகளில் மேலும் 293 குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டன. இவ்விதம் இத்திட்டம் மொத்தம் 47 ஊராட்சி ஒன்றியங்களில் அமலாக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் நான்கு ஆண்டுகளில் ஆண்டுக்கு 200 வீதம் மேலும் 800 குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்டன. இதே காலத்தில் இந்திய அரசு அனுமதித்த, படித்து வேலையற்றோருக்கான விரைவுத் திட்டத்தின்கீழ் 604 குழந்தைகள் நல நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் 604 படித்த—வேலையற்ற பெண்களுக்குக் குழந்தை நல அமைப்பாளராக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. இவற்றுடன் கூட சென்னை நகர குடிசைப் பகுதிகளிலும் 25 பகல் பாதுகாப்பு நிலையங்கள் துவக்கப்பட்டன. இவற்றில் 11 பகல் பாதுகாப்பு நிலையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட நிலையங்களுடன் இணைக்கப்பட்டன. எனவே, தற்சமயம் 14 நிலையங்கள் சென்னை நகரில் செயல்படுகின்றன.



மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

**செல்வி பி. டி. சரசுவதி**

இவ்வாண்டு தமிழக அரசு 159 குழந்தைகள் காப்பகங்களும் மற்றும் அரிசனங்களுக்கான 50 குழந்தைகள் காப்பகங்களும் துவக்க அனுமதித்துள்ளது. இவையன்றி, குழந்தைகள் காப்பகங்கள் தனிப்பட்ட பிரிவினருக்காகவும் துவக்கப்பட்டுள்ளன.

**அரிசனக் குடியிருப்புகளிலுள்ள குழந்தைகள் காப்பகங்கள்:**

அரிசனக் குழந்தைகளின் நலனுக்காக 1975-76-ஆம் ஆண்டு அரிசனக் குடியிருப்புகளில் குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
வெளிநாடு சுற்றுப்பயணம்
வெற்றி பெற்று தாயகம் திரும்பியமைக்கு
நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள் !

# புதுக்கோட்டை கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிட்.

கீழராச வீதி. [டவுன் பாங்க் மாடி] புதுக்கோட்டை.

புதுக்கோட்டை நகரம், அதன் எல்லையிலிருந்து ஒரு மைல் சுற்றளவிற்குள் உள்ள பகுதிகளில் காலி மனையிடம் உள்ளவர்களுக்கு புதிய வீடு கட்டவும், வீடு உள்ளவர்களுக்கு வீடு அபிவிருத்தி மற்றும் கூடுதல் கட்டிடம் கட்டவும் **"கடன் வசதி"** அளிக்கும் ஒரே ஸ்தாபனம்

**'புதுக்கோட்டை கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்'** ஒன்றே

## நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் : | திரு. | S. V. சிவசாமி சேர்வை அவர்கள் |
| உப-தலைவர் : | ,, | K. சிதம்பரம் |
| உறுப்பினர்கள் : | ,, | R. ராஜகோபால அய்யங்கார் |
| ,, | ,, | G. மலையப்பன் |
| ,, | ,, | S. ஆறுமுகம் சேர்வை |
| ,, | ,, | S. V. S. வெங்கடாஜலம் |
| ,, | ,, | M. உத்திராபதி |
| ,, | ,, | S. V. S. வைரவன் சேர்வை |

S. V. சிவசாமி சேர்வை
தலைவர்.

S. K. பெரியசாமி, B. Com..
காரியதரிசி.

ANNA PUBLICITIES. 7/78

---

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளிநாடு சென்று
தாயகம் திரும்பியதற்கு இனிய வாழ்த்துக்கள் !

# புதுக்கோட்டை டவுன் பாங்கு லிட்.,

## புதுக்கோட்டை — 622001

புதுக்கோட்டை நகரில் உள்ள மற்றெல்லா வங்கிகளைவிட 'டிபாசிட்'களுக்கு அதிக வட்டி தரும் ஒரே வங்கி. முதலீடு செய்து பயனடைய வேண்டுகிறோம். 'பிக்சட் டிபாசிட்'டுகளுக்கு 10% வரை வட்டி வழங்குகிறோம்.

## நிர்வாக சபை உறுப்பினர்கள்

திரு. S. V. சிவசாமி சேர்வை — தலைவர்

திரு. S. அய்யாச்சாமி,
,, S. ஆறுமுகம் சேர்வை
,, A. தியாகராச காடுவெட்டியார்
,, H. ஆசீர்வாதம் என்ற தங்கச்சாமி
,, M. உத்திராபதி என்ற பதி
,, G. சேதுராம பிள்ளை
,, R. S. காசிநாதன்

திரு. G. மலையப்பன்
,, R. ராஜகோபால அய்யங்கார்
,, K. வாசு தேவன்
,, A. K. இஸ்மாயில்
,, K. R. சுப்பையா
,, அரசு என்ற S. ரெங்கசாமி
,, P. செல்வராசு
(C.S.R. அரசினர் பிரதிநிதி)

S. V. சிவசாமி சேர்வை,
தலைவர்.

A. V. ஸ்ரீனிவாசன், B.Com., H.D.C.
காரியதரிசி.

ANNA PUBLICITIES /6/78

டுள்ளன. இதுவரை அரிசன குடியிருப்புகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 200 குழந்தைகள் காப்பகங்களில் 50 குழந்தைகள் காப்பகங்கள் அரிசன நலத்துறை நிதியுடன் நடைபெறுகின்றன. 150 குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ. 8,000 மதிப்புள்ள கட்டடங்கள் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் கட்டித்தரப் படுகின்றன.

1978-79-ஆம் ஆண்டில் மேலும் 100 கட்டடங்கள் கட்டப்பட்டு குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட இருக்கின்றன. செங்கை மாவட்டத்திலுள்ள சோமங்கலம் என்னுமிடத்தில் கிராமப்புறச் சீரமைப்புப் பணித் திட்டத்தின்கீழ் குழந்தைகள் காப்பகங்கள், 2 அரிசன நலக்குடியிருப்புகளில் கட்டட வசதியுடன் துவக்கப்பட்டுள்ளன. இவற்றுடன்கூட இந்தியக் குழந்தைகள் நலக் குழுவின் மூலம் (Indian Council of Child Welfare) நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களுக்கும் கட்டட கட்டம் அரசு நிதி உதவி அளித்துள்ளது.

பிற்பட்டோர் நலத்துறையின் நிதியுடன் ஜில் நகரிலுள்ள பழங்குடியினரின் குடியிருப்புகளிலும் குழந்தைகள் காப்பகங்கள் 5 துவக்கப்பட்டுள்ளன.

**மலைப்பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் :**

பனியா குழந்தைகளுக்காக நீலகிரி மாவட்டத்தில் 1976-77-ல் 10 குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் நலத்திட்டத்தின் கீழ் 1976-77ஆம் ஆண்டுகளில் தென் ஆர்க்காடு மாவட்டம் கல்ராயன் மலை, வட ஆர்க்காடு மாவட்டம் ஜவ்வாது மலை, சேலம் மாவட்டம் பச்சைமலை, கல்ராயன் மற்றும் அரனூத்துமலை, தர்மபுரி மாவட்டம் சித்தேரி மலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சைமலை ஆகிய பகுதிகளிலுள்ள மலைவாழ் மக்களின் குழந்தைகள் நலனுக்காக குழந்தைகள் காப்பகங்கள் 49 துவக்கப்பட்டுள்ளன.

1978-79-ல் ஆதிவாசி குழந்தைகளுக்காக குழந்தைகள் காப்பகங்கள் 25 துவங்க அரசு அனுமதியளித்துள்ளது. தென் ஆர்க்காடு வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டத்திலுள்ள மலைப்பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் மேலும் 30 துவக்கப்பட இருக்கின்றன.

**அகதிகளின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள் :**

அகதிகளின் குழந்தைகளுடைய உணவுத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தில் மண்டபம், கும்மிடிபூண்டி, நெய்வேலி மாநில பண்ணைக் கழகம், திருச்சியிலுள்ள கொட்டம்பட்டு முகாம், சிவகங்கையிலுள்ள ஒ. புதூர் ஆகிய அகதிகள் முகாம்களில் குழந்தைகள் காப்பகங்கள் 5 துவக்கப்பட்டுள்ளன.

**குடும்பக் குழந்தைகள் நலத் திட்டம் :**

மத்திய சமூக நல வாரியம், தமிழக சமூக நல வாரியத்தின் மூலம் வில்லிவாக்கம், ஆத்தூர், பெரியநாய்க்கன்பாளையம் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் 1971 முதல் குடும்பக் குழந்தை நலத்திட்டங்கள் நான்கைத் துவக்கியது. குழந்தைகள் காப்பகங்கள், இளம் தாய்மார்களுக்குப் பயிற்சி முகாம் நடத்துதல் ஆகியவை இத்திட்டப்பணிகளாகும். ஆறு ஆண்டுக் காலத்திற்கு இத்திட்டப் பணிகளுக்கு, மத்திய சமூக நல வாரியத்தின் உதவி கிட்டும். ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இடத்திலும் ஆரம்பிக்கப்பட்ட 6 நிலையங்களும், மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டு தமிழக

## தமிழக அரசுக்கு மத்திய நிபுணர்கள் பாராட்டு!

நவம்பர் முதல் வாரத்தில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட புயல், நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழக அரசு சிறப்பாகப் பணிபுரிந்துள்ளது என்று மத்திய நிபுணர் குழுத் தலைவர் திரு சோதி அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட உதகைப் பகுதியையும், மத்திய விவசாயத் துறைச் செயலாளர் திரு சோதி அவர்கள் தலைமையிலான குழு ஐந்து நாட்கள் சுற்றிப் பார்த்தது.

நீலகிரியில் ஏற்பட்ட சேதம் மிகவும் பயங்கரமானது என்றும், இதற்கு உடனடியான நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், நிரந்தரப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய குழு, கருத்து தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபின் சென்னையில் 29.11.'78 அன்று, தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள், வருவாய் வாரிய உறுப்பினர் திரு கே. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள், துயர் துடைப்பு ஆணையாளர் திரு நடராசன் அவர்கள், மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடந்தது.

நிலச்சரிவுப் பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், தமிழக அரசின் பல்வேறு துறைகள், வேண்டிய உடனடி நடவடிக்கைகள் எடுத்ததை நிபுணர் குழுத் தலைவர் பாராட்டினார். அரசு, உரிய சமயத்தில் எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கையினால் பெரும் சேதம் தடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புயல், வெள்ளச் சேதப் பகுதிகளில் அரசின் அதிகாரிகள் சுறுசுறுப்பாகப் பணி புரிவதைத் தாம் நேரடியாகப் பார்த்ததாகவும் அவர் கூறினார்.

# திரு ஆரூரான் சர்க்கரை ஆலை

வடபாதிமங்கலம் — தஞ்சாவூர் மாவட்டம்

## விவசாயிகளுக்கு ஓர் நற் செய்தி!

கரும்பு நடவு செய்து ஆலையினரால் கொடுக்கப்படும்
கணிசமான மான்யத் தொகைகளைப் பெறுங்கள்.

1. முன்பட்ட நடவு மான்யம் :

(அ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்குட்பட்ட தொகுதி :

டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு — ரூ. 250 (ஏக்கருக்கு)

பிப்ரவரி 79 நடவிற்கு — ரூ. 200 (ஏக்கருக்கு)

(ஆ) ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் உள்ள தொகுதி :

டிசம்பர் 78, ஜனவரி 79 நடவிற்கு — ரூ. 200 (ஏக்கருக்கு)

பிப்ரவரி 79 நடவிற்கு — ரூ. 150 (ஏக்கருக்கு)

2. புதுரக கரும்பு நடவு மான்யம் :

ஏப்ரல் 79, மே 79, ஜூன் 79 மாதங்களில்
கோ 671 நடவிற்கு — ரூ. 300 (ஏக்கருக்கு)

3. 'டிரான்ஸ்போர்ட்' மான்யம் :

ஆலையிலிருந்து 30 மைல்களுக்கு மேல் உண்டாகும் லாரி வாடகையை ஆலையினர் ஏற்றுக் கொள்வார்கள்.

4. மான்யத் தொகை வழங்குவதற்கான நிபந்தனைகள் :

(அ) ஏக்கர் ஒன்றுக்கு குறைந்தபட்ச மகசூல் 27 டன்கள் இருக்க வேண்டும்.

(ஆ) கம்பெனி வெட்டு உத்திரவுப்படி காலத்தில் கரும்பு வெட்டி சப்ளை செய்ய வேண்டும்.

மேற்கொண்டு விபரங்களுக்கு எங்கள் கிளை அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாக மேலாளர்,
திரு ஆரூரான் சர்க்கரை ஆலை,
வடபாதிமங்கலம்.

ANNA PUB/2811/8/AS/11178/G.

அரசின் நிதி உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களாகச் செயல்படுத்தப்படுகின்றன.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் நல செயல் முறைத் திட்டம்:**

இத்திட்டம் பூவிருந்தவல்லியில், இந்திய அரசின் முழு உதவியுடன் ஒரு முன்னோடித் திட்டமாக 1962-ல் ஆரம்பிக்கப்பட்டது. 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த பணி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 50 குழந்தைகள் காப்பகங்களும், 10 இளஞ்சிறார் காப்பகங்களும் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் 40 குழந்தைகளும், இளஞ்சிறார் காப்பகத்தில் 6 மாதம் முதல் 2½ வயது வரையுள்ள 10 குழந்தைகளும் சேர்க்கப்படுகின்றனர். ஐந்தாண்டுகளுக்குப் பின் இத் திட்டம் மாநில அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டு தலைமை அமைப்பாளரின் கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது. இத் திட்டத்திற்கு ஒரு மருத்துவர், ஒரு பொது சுகாதாரச் செவிலியர், 2 சுகாதாரப் பார்வையாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர், 2 மருத்துவ உதவியாளரும் செவிலியர்களும் கூடிய ஒரு மருத்துவக் குழு பணிபுரிகின்றது. 2 தாய் சேய் மருத்துவ மனைகளும் இத்திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன. இம்மருத்துவப் டணியாளர்கள் பூவிருந்தவல்லி பொதுச் சுகாதார உதவி இயக்குநரின் கீழ் பணிபுரிகின்றனர்.

**பாலாஹார் உணவுத் திட்டம்:**

எல்லாக் குழந்தைகள் காப்பகங்களிலும் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது. மொத்தம் உள்ள 4083 குழந்தைகள் காப்பகங்களில், சுமார் 1002 குழந்தைகள் காப்பகங்களில் 'கேர்' நிறுவன உதவியுடன், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் உணவுத் திட்டம் நடைபெறுகிறது. இந்தக் காப்பகங்களில் 120 பேருக்கு (40 குழந்தைகள் காப்பகக் குழந்தைகள், 40 மற்ற குழந்தைகள், 40 பாலூட்டும் அல்லது கர்ப்பிணி தாய்மார்கள்) உணவளிக்கப்படுகிறது. மற்ற செலவினங்களுக்காக நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 3 காசு வீதம் 300 நாட்களுக்கு அளிக்கப்படுகிறது. பாலாஹார் உணவுத் திட்டம் 'கேர்' நிறுவன உதவியுடன் இவ் வியக்கத்தின் கீழ் நடைபெறுகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 70 பேருக்கு (60 குழந்தைகள் காப்பகக் குழந்தைகளும், 10 பாலூட்டும் தாய்மார்களுக்கும் அல்லது கர்ப்பிணிகளுக்கும்) பாலாஹார் உணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் 80 கிராம் பாலாஹாரும் 7 கிராம் சாலட் எண்ணெய்யும் வழங்கப்படுகிறது. இவை உப்புமா, புட்டு, கிச்சிடியாகச் சமைத்து வழங்கப்படுகிறது. இவ்வுணவைச் சமைப்பதற்கான மற்றச் செலவினங்களுக்குத் தலைக்கு 1 நாளைக்கு 4½ காசு வீதம் ஆண்டின் 300 நாட்களுக்கும், போக்குவரத்துச் செலவினமாக ஒரு நிலையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10-ம் தமிழக அரசு வழங்குகிறது.

**குழந்தைகள் காப்பகங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்:**

அநேகமாகப் பாலர் பள்ளிகள் தயாள குணமுள்ள கிராமப் பொதுமக்களால் வழங்கப்படும் இலவச கட்டடங்களில் நடைபெறுகின்றன. போதிய இடவசதியற்ற இடங்களில் நடைபெறும் குழந்தைகள் காப்பகங்களுக்கு 'கேர்' நிறுவன உதவியுடன் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

'கேர்' நிறுவனம் 1974-75-ஆம் ஆண்டிலிருந்து 1978-79-ஆம் ஆண்டிற்குள் 1000 கட்டடங்கள் கட்ட நிதி உதவியளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கான அரசு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 500 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 150 கட்டடங்கள் அரிசனக் குடியிருப்புகளில் அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளன. இதற்கான நிதி உதவி விவரம் வருமாறு:

| | ரூபாய் |
|---|---|
| **அரசின் பங்குத் தொகை:** | **3,000** |
| ஊராட்சி ஒன்றியப்பங்குத்தொகை | 3,000 |
| * 'கேர்' நிறுவனப் பங்குத் தொகை | 3,000 |



முன்பு 'கேர்' நிறுவனப் பங்குத் தொகை ரூபாய் 2000 ஆக இருந்தது. தற்சமயம் அது ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**கல்வி உபகரணங்கள் மீண்டும் அளித்தல்**

குழந்தைகள் காப்பகங்கள் துவங்கும் போது ரூ. 500 மதிப்புள்ள கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அளிக்கப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்குப் பிறகு பயனற்ற உபகரணங்களைத் தள்ளுபடி செய்யவும், அதனிடத்தில் மீண்டும் புதிய உபகரணங்களை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது படிப்படியாக அமலாக்கப்படுகிறது.

இவ்வாண்டு 354 குழந்தைகள் காப்பகங்களுக்கு மீண்டும் கல்வி உபகரணங்கள் அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி பெறாத பாலசேவிகாக்களுக்குப் பயிற்சி அளித்தல்**

இக் குழந்தைகள் காப்பகங்களை நடத்த தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் உள்ளூர் பெண் சிறப்புத்தகுதி பெற 2 மாதம் பயிற்சி பெறுவர். ஆனால், இந்த பாலசேவிகாக்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் மிகக் குறைவாயிருப்பதாலும், திருமணம், உடல் நலக் குறைவு, மற்றும் மரணம் முதலிய பல காரணங்களாலும் சில பாலசேவிகாக்கள் வேலையை விட்டுச் சென்றுவிடுகின்றனர். எனவே, பதிலாக நியமிக்கப்படும் பயிற்சியில்லாத பாலசேவிகாக்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளிக்கத் தேவையாயுள்ளது. இந்த ஆண்டும் 221 பயிற்சியில்லாத பாலசேவிகாக்களுக்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

## சிறப்புத் திட்டங்கள் :

### ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் :

இந்திய அரசின் பொறுப்பில் தமிழகத்தில் சென்னை நகரம், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தளி, மதுரை மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் புகுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்திலும் 100 குழந்தைகள் காப்பகங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் 6 மாதம் வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும், பாலூட்டும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சத்துணவு அளித்தல், மருத்துவப் பரிசோதனை, தடுப்பூசி போடுதல், மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல், முன்னோடிக் கல்வி அளித்தல் ஆகிய பணிகள் நடைபெறும்.

சத்துணவு அளிக்கும் பணி, மாநில அரசின் பணியாகும். 15 வயது முதல் 44 வயது வரையிலுள்ள பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் நடைமுறைக் கல்வி அளிக்கும் நவீனத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்தில் 100 குழந்தைகள் காப்பகங்களிலும், 40 குழந்தைகளுக்கு முன்னோடிக் கல்வியும், 5 வயதுக்கு உட்பட்ட 30 குழந்தைகள் மற்றும் 30 பாலூட்டும் அல்லது கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சத்துணவும் அளிக்கப்படுகிறது. இவ்வொருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி நிலையத்தில் நடைபெறும் உணவுத் திட்டத்தில், உள்ளூர் உணவுப் பொருட்களே பயன்படுத்தப்படும். ஒவ்வொரு அங்கன்வாடியும் பயிற்சியளிக்கப்பட்ட அங்கான்வாடிப் பணியாளரால் ஒரு ஆயாவின் உதவியுடன் நடத்தப்படுகிறது.

எழுதப்படித்தத் தெரியாத பெண்களுக்கு கல்வியறிவுத்திறன் அளித்தல், இத்துறையின் சமூக நல முயற்சிகளில் அவர்களைப் பங்கேற்கச் செய்தல், நவீன முறையிலுள்ள சுகாதாரம், சுற்றுப் புறச் சுத்தம், குடும்பக் கட்டுப்பாடு முதலியவை பற்றி அதிகமாக அறிந்து சொள்ளச் செய்தல், சத்துணவு பற்றிய முக்கியத்துவம், வீட்டுப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு பற்றிய அடிப்படைத் தேவைகளில் பயிற்சி அளித்தல், நாட்டின் சுதந்தரப் பிரஜையாகச் செயலாற்றும் வண்ணம் பெண்களிடையே பழைய பழக்க வழக்கங்களை மாற்றுதல், புதியதாக அறிந்து கொண்ட தொழில், கைத்தொழில் முதலியவற்றில் நிலையான அக்கறை செலுத்தும்படி செய்ய தொடர்ந்து நடவடிக்கை எடுத்தல் முதலியன ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் பகுதியான நடைமுறைக் கல்வித் திட்டத்தின் பல்வேறு பணிகளாகும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்குக் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அதிகாரி பொறுப்பாளராவர். அங்கன்வாடிகளை மேற்பார்வையிட இவருக்கு உதவியாக 5 மேற்பார்வையாளர்கள் உள்ளனர். ஒரு மருத்துவர், 8 தாய்மை மருத்துவமனை செவிலியர், ஒரு பெண் சுகாதாரப் பார்வையாளர் அடங்கிய ஒரு மருத்துவக் குழுவும் இத்திட்டத்தின் கீழ் இயங்குகிறது. மருத்துவப் பணியாளர்கள் குழு, ஆரம்பச் சுகாதார நிலையத்துடன் இணைக்கப்பட்டு, இத்திட்டத்தில் வகுக்கப்பட்ட மருத்துவப் பணிகளைச் செய்து வருகிறது. சென்னை நகரத்தில் மருத்துவப் பணியாளர்கள் குழு குழந்தைகள் நல வளர்ச்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.







1978-79-ஆம் ஆண்டில் மேலும் இத்தகைய நான்கு திட்டங்களைத் துவக்குவதற்கு இந்திய அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டங்களை அமைப்பதற்குரிய இடங்களை முடிவு செய்ய மாநில அரசின் ஆணை வழங்கப்பட இருக்கிறது.

### தாய் மற்றும் சேய் நலப் பணித் திட்டம் :

தாய் மற்றும் சேய் நலத்திட்டமும், உலக வங்கியின் உதவியுடன் நடைபெறும் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் ஒரு விரிவாகும்.

1977-78 முதல் 1980 வரையிலுள்ள 3 ஆண்டுக் காலத்தில் வில்லிவாக்கம், அரும்பாக்கம் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளில் 200 குழந்தை நல நிலையங்கள் கொண்டு இரண்டு திட்டங்கள், இத்திட்டத்தின்கீழ் துவங்கப்படும். இந்தக் குழந்தை நல நிலையங்களுடன் 30 குழந்தைகளுக்கான இளஞ்சிறார் காப்பகங்களும் இணைக்கப்படும். 1978-79 ஆம் ஆண்டில் மேலும் 70 குழந்தைகள் காப்பகங்கள் துவங்கப்படும். 1979-80-ல் 100 குழந்தைகள் காப்பங்கள் கொண்ட 2-வது திட்டம் துவக்கப்படும்.

இந்தத் திட்டம், சமூகநல இயக்குநரால் அமல் நடத்தப்படுகிறது. உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெறும் இந்தத் தாய் மற்றும் சேய் நலப் பணித் திட்டத்திற்குச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ஒத்துழைப்பு நல்கும் நிறுவனமாகும்.

### பல்வேறு குழந்தைகள் காப்பகங்களின் விவரங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் மூன்று ஆண்டுத் திட்டங்களின்போது துவக்கப்பட்டவை ... | 1040 |
| 2. | ஒருங்கிணைந்து குழந்தைகள் நல செயல்முறைத் திட்டம் பூவிருந்தவல்லி ... | 50 |
| 3. | நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப்பட்டவை ... | 800 |
| 4 | விரைவுத் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட குழந்தை நல நிலையங்கள் ... | 604 |
| 5. | குடும்ப குழந்தை நலத் திட்டம். | 24 |
| 6. | நகரத்திலுள்ள பகல் பாதுகாப்பு நிலையங்கள் ... | 14 |
| 7. | ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கியவை (இதில் அரிசனநலப் பள்ளிகளும் சேர்க்கப்பட்டுள்ளன) ... | 513 |
| 8. | மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள், பனியா மக்கள் இவர்களுக்கான குழந்தைகள் காப்பகங்கள் ... | 114 |
| 9. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ... | 300 |
| 10. | தாய் மற்றும் சேய் நலத்திட்டத்தில் துவக்கப்பட்டவை ... | 30 |
| 11. | சத்துணவுத் திட்டத்துடன் ஊரக வளர்ச்சித் துறையிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் ... | 594 |
| | மொத்தம் ... | 4083 |

# 1977 - 78-ல் தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகள்

திரு கோவை. செழியன்
துணைத் தலைவர்
மாநிலத் திட்டக்குழு

தமிழகத்தின் இந்த ஆண்டு (1977-78) திட்டப் பணிகளை செயல்படுத்துவதில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம்-ஒன்று-வழக்கமாக 1978-79-ஆம் ஆண்டில் முடிவடைய வேண்டிய அய்ந்தாண்டுத் திட்டத்தை 1978-ஆம் ஆண்டோடு முடித்துக் கொண்டதாகவும், அதன் பின் மத்திய திட்டக் குழு எடுத்த முடிவின்படி தொடர் திட்டத்தை (Rolling Plan Corcept) மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவதாக - மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கின்ற புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆரின் ஆட்சியில் பெரிய மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மூன்றாவதாக, இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகி சீர்குலைந்த விவசாயம், போக்குவரத்து, பாசன வசதி இவைகளை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இந்த ஆண்டு ஏற்பட்டு விட்டது. தமிழகத்தில் 1977-78-இல் இந்த அரசு செயல்படுத்திய பல்வேறு வளர்ச்சிப் பணிகளைப் பற்றிச் சில சொல்ல விரும்புகின்றேன்.

இந்த ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 296.64 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெள்ளக் கொடுமையினால் கிட்டத்தட்ட 34 கோடி ரூபாய் செலவு அதிகமாகிவிட்டது. ஒரு நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய வேண்டுமானால் அடிப்படை வளர்ச்சிகளைப் பெருக்குவதற்கு முதலிடம் தரவேண்டும். தொழில் துறையானாலும், விவசாயத் துறையானாலும் அதற்கு ஆதாரமாக மின்சாரம் அமைகின்றது. அதன் வளர்ச்சியைப் பொறுத்துத்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடங்கியிருக்கின்றது.

1977-78 அம் ஆண்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மின்சார வளர்ச்சிக்கு ஒதுக்கியிருக்கின்றோம். அது சுமார் 98 கோடி ரூபாய் வருகின்றது. அய்ந்தாவது திட்ட ஆரம்பத்தில் கோடையாறு, நடுவட்டம், குந்தா நான்காவது கட்டம், சுருளியாறு ஆகிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. கோடையாறு, நடுவட்டம் திட்டங்கள் ஏற்கெனவே முடிந்து விட்டன. இந்த ஆண்டு சுறுசுறுப்பாகப் பணியாற்றியதன் மூலம் சுருளியாறு, குந்தா திட்டங்கள் அண்மையில் மின்சார உற்பத்தியைத் தொடங்கின. இந்த இரண்டு திட்டங்கள் மூலம் 145 MW மின்சாரம் அதிகம் கிடைக்கின்றது. அய்ந்தாவது திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தாமிரபரணி, நெல்லித்துறை, மேல்கொடுமுண்ட-லோன்-வேலி ஆகிய மின் திட்டங்களுக்கு மீண்டும் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அனல்மின் திட்டங்களைப் பொறுத்த வரையிலும் எண்ணூரில் மின்சார உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. தூத்துக்குடி அனல்மின் திட்டத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் எப்படியும் மின்சார உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென்பதற்காக அரசு தீவிரமாகப் பணியாற்றி வருகின்றது.

மனிதனின் ஆதாரத் தேவையான உணவு உற்பத்திக்கு நீர்ப்பாசன வளர்ச்சி மிக முக்கியமான தொன்றாகும். ஆகவேதான் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் சாத்தியமான எல்லா நீர்ப்பாசன திட்டங்களையும் தமிழக அரசு நிறைவேற்றி வருகின்றது.

நமது முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற வளர்ச்சிதான் ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சிக்குச் சான்று என்பதை உணர்ந்து அதற்கு ஆதாரமான விவசாயத் துறைக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நீரார் அணை திட்டம் முடிவடைந்தால் கிட்டத்தட்ட 2½ டி. எம். சி. தண்ணீர் அதிகம் கிடைக்கும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மலையை குடைவதிலும் ( Tunneling ), அணைக்கட்டு வேலைகளை தீவிரமாக்குவதிலும் முதன்மை காட்டுகின்றோம். வைகை கால்வாய்களை நவீனமாக்குவது மற்றொரு பெரிய திட்டமாகும். மேலும் 15 புதிய நீர்ப்பாசன திட்டங்களை இந்த அய்ந்தாண்டு காலத்திற்குள் முடிப்பதென்று முடிவு செய்து வேலைகளை தீவிரப்படுத்தி யிருக்கின்றோம். பெரியாறு கால்வாயை நவீனமாக்கும் திட்டத்தையும் மேற்கொண்டு அந்த வேலைகளை விரைவாக முடிக்க ஏதுவாக மதுரையில் புதிதாக ஒரு தலைமை பொறியாளர் விரைவாக முடிக்க மதுரையில் புதிதாக ஒரு தலைமை பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். காவிரி டெல்டா பகுதியில் வடிகால் திட்டங்கள் தொடர்பாக பதினைந்து புதிய பணிகளை இவ்வாண்டு நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் வட்டமலைக்கரை ஓடை, வரட்டுப்பள்ளம், குண்டேரி பள்ளம் திட்டங்களும், மதுரை மாவட்டத்தில் கிருதமாநதி பி. டி. ராசன் கால்வாய்த் திட்டம், நெல்லை மாவட்டத்தில் குண்டார், கொடுமுடியாறு முதலிய திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பிற



பட்ட மாவட்டமான தருமபுரிக்குப் பயன்படும் வகையில் பொன்னியாறு அணைத் திட்டமும், வீராணம் ஏரி, வடவாறு இவற்றின் வாய்க்கால்களைச் செம்மைப்படுத்த இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 இலட்சம் ரூபாய் செலவிற்கு உட்பட்ட திட்டங்களைச் சிறுபாசன சிறப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தி வருகிறோம்.

1977-78 ஆம் ஆண்டில் 25 ஆயிரம் ஏக்கர் புதிய ஆயக்கட்டுப் பகுதிகள் பலனடையும் வண்ணம் 200 பாசனப் பணிகள் சுமார் ரூ. 4 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில வருமானத்தில் (State Income ) ஏறத்தாழ 45 சதவீதம் விவசாயத்துறை நமக்கு அளிக்கின்றது. 1977-78ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி 62 இலட்சம் டன்னாக உயரவேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். பருத்தி உற்பத்தி 4.20 இலட்சம் பேல், நிலக்கடலை உற்பத்தி 12.75 இலட்சம் டன் அடைய வேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். ஆனால் இயற்கையின் சீற்றத்தால் விவசாய உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டது. விவசாயிகள் சொல்லொணாத் துயருக்கு ஆளாயினர்.

அரசாங்கத்தினுடைய முயற்சியினால் இந்த ஆண்டு அரிசி உற்பத்தி 59 இலட்சம் டன்னாகவும், பருத்தி 4 இலட்சம் பேல் அளவிலும், நிலக்கடலை 10.18 இலட்சம் டன் அளவிலும் உற்பத்தியாகியுள்ளது. இவ்வளவு பெரிய இயற்கையின் சோதனைக்குப் பின்பும் திட்டமிட்ட உற்பத்தி இலக்கை நாம் பெற வேண்டுமானால், அரசு எந்த அளவுக்கு முயற்சி எடுத்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இயற்கையின் எதிர்ப்பையும் முறியடித்து வெற்றி கண்டிருக்கிறோம். விவசாய உற்பத்தியாளர்களுக்கு, உற்பத்தியாகும் பொருள்களுக்கு நியாய விலை கிடைக்க வழி செய்யும் வகையில் தமிழ்நாடு விளைபொருள் இயக்குநர் அலுவலகம் ( Directorate cf Marketting ) என்ற புதிய அமைப்பை இந்த அரசு உருவாக்கியிருக்கின்றது.

தமிழ்நாடு விவசாயப்பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட மீனளக் கல்லூரி, தூத்துக்குடியில் 1977-78ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. நீண்ட கடலோரப் பகுதியைக் கொண்ட தமிழகத்தில் மீன்வளம் மிகுந்து காணப்படுகிறது. ஆழ்கடல் மீன்பிடிப்பில் கவனம் செலுத்தி அதற்காக மெக்ஸிகோ நாட்டிலிருந்து இரண்டு பெரிய டிராலர்கள் வாங்கியிருக்கிறோம். ரேடியோ, டெலிபோன், குளிர்சாதன வசதி ஆகிய நவீன அமைப்புக்களைக் கொண்ட இந்த டிராலர்கள் மூலம் மீன் இருக்கும் பகுதியைக் கண்டுபிடித்து மீன் உற்பத்தி அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் சக்தியையும், வளத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்த கல்வியும், சுகாதாரமும் மிக முக்கியம். அந்த வகையில் நமது மாநிலத்தில் இந்த ஆண்டு 36 புதிய தொடக்கப் பள்ளிகளும் 44 நடுநிலைப் பள்ளிகளும், 29 உயர்நிலைப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. இதன் மூலம் 1100 புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 200 தமிழ்ப் புலவர்களும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களும் இதில் அடங்கியுள்ளனர்.

மனிதனின் அடுத்த தேவை சுகாதார வசதிகள். 24 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நடமாடும் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. டாக்டர், கம்பவுண்டர் ஆகியோர் அடங்கிய இந்தக் குழு ஒவ்வொரு நாளும் 6, 7 கிராமங்களுக்குச் சென்று மூலை முடுக்குகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சுகாதார வசதியைத் தருகின்றது. 20 ஊராட்சி ஒன்றிய டிஸ்பென்சரிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவ மனையில் புதியதாக 100 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய மாநிலங்களில் தொழில் துறையில் முன் வரிசையில் இருந்த தமிழகம் கடந்த ஆண்டுகளில் பின் வரிசைக்குத் சென்று விட்டது. இந்த அரசு மீண்டும் தமிழகத்தைத் தொழில் துறையில் முன்னணிக்குக் கொண்டுவர எல்லா முயற்சிகளையும் செய்து வருகின்றது.

இரண்டு பெரிய தொழில் மையங்களை அளிக்கும் பணியில் 'சிப்காட்' சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. பிற்பட்ட மாவட்டமான தருமபுரியில் உள்ள ஹோசூரில் 1000 ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தை மேம்படுத்தி மின்சார நீர் வசதிகளைத் தந்து தொழில் அதிபர்களுக்கு இடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ராணிப்பேட்டையில் உள்ள 700ஏக்கர் நிலப்பரப்பில் 24-க்கும் அதிகமாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 'சிட்கோ' நிறுவனம் இந்த ஆண்டு முடிவுக்குள் 200 தொழில் கூடங்களை பல்வேறு இடங்களில் கட்டி முடித்திருக்கின்றது. 'டான்சி' நிறுவனம் இவ்வாண்டு மூன்று புதிய தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கின்றது.

அரசுத் துறையின் சார்பில் அரியலூரில் ஒரு பெரிய சிமெண்ட் தொழிற்சாலை கட்டி வருகின்றோம். இதனால் 1,100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையின் முழு உற்பத்தி அளவை அடைவதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகின்றது. அரசுத் துறையில் அமைக்கும் பொருட்டு 9 திட்டங்களை 'டிட்கோ' பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. அதேபோல் தனியார் கூட்டு முயற்சியோடு சேர்ந்து 9 திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. அடுத்த ஆண்டு மேலும் 8 திட்டங்களை 'டிட்கோ' ஏற்றுக் கொள்ளும்.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 26.50 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சமீபத்தில் எடுத்த கணக்கின்படி ஏறத்தாழ தமிழகத்தில் 47,000 குடியிருப்புக்களில் 3,566 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியே இல்லாமல் இருக்கின்றது. 2,117 குடியிருப்புகளுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு இறுதிக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். நிலமில்லாத ஏழைகளுக்கும், அரிசனங்களுக்கும் ஒரு குடும்பத்துக்கு மூன்றிலிருந்து அய்ந்து செண்ட் என்ற வகையில் சுமார் 35 ஆயிரம் குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சுமார் 25 ஆயிரம் பேர்களுக்கு விவசாயம் செய்வதற்காக 30 ஆயிரம் ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் வரும் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி சிறப்பான முன்னேற்றம் காண 1977-78ஆம் ஆண்டு திட்டப்பணிகள் வலுவானதொரு அடித்தளத்தை அமைத்துள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

(31-10-78 அன்று வானொலியில் நிகழ்த்திய உரை.)

## வாசகர்களுக்கு...

1-12-78 'தமிழரசு' இதழில் வெளிவந்துள்ள 'ராஜாஜியின் வாழ்விலே' என்னும் கட்டுரை திரு. பரந்தாமன் எழுதிய 'ராஜாஜி நூற்றுக்கு நூறு' என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவேதான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!